# கல்கி




ALKI அக்டோபர் 15, 1950

4 அண



மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர சாமியார்
மதராஸ் ... பிராட்வே
,, ... பாரகன்
,, ... ராஜகுமாரி (தி. நகர்)
மதுரை ... சென்ட்ரல்
பெங்களூர் ... சிவாஜி
,, ... மூவிலாண்ட்
,, ... ரூப்மஹால்
கோயமுத்தூர் ... ராஜா
சேலம் ... பேலஸ்
திருச்சிராப்பள்ளி ஸ்டார்
மற்றும்
35 இடங்களிலும்
நடைபெறுகிறது!
டி. ஆர். சுந்தரம்


# தீபாவளிக்காக மகத்தான குறைந்த விலை





தீபாவளியை முன்னிட்டு, எங்கள் கடியாரங்களை, மிகவும் குறைந்த விலையில் அளிக்கிறோம். இந்த சந்தர்ப்பம் நவம்பர் 10-ந்தேதி வரைதான். 15ம், 17ம் ஜுவல் உள்ள வாச்சுகள் 5 வருஷங்களுக்கும், மீதி உள்ளவை 3 வருஷங்களுக்கும், கியாரண்டி உள்ளவை. கியாரண்டி சர்டிபிகேட், ஓர் நேர்த்தியான பட்டை, ஓர் வெல்வெட் பெட்டி ஒவ்வொரு கடியாரத்துடனும் அனுப்பப்படும். அனுப்புவதற்கு முன்பு நன்கு பரிசோதித்து, எண்ணைப் போட்டு அனுப்பப்படும். வி. பி. மூலம் அனுப்பப்படும். பாக்கிங், போஸ்டேஜ், விற்பனை வரி இலவசம்.

இந்திய சர்க்காரின் சட்டப்படி, சிலோனுக்கு ரூ. 50 மேல் வி. பி. அனுப்ப முடியாததால், வித்தியாசமுள்ள பணத்தை மணியார்டர்மூலம் ஆர்டருடன் அனுப்பவும்.


**இனாம்:** ஒரே பார்ஸலில் இரண்டு கடியாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால், ஓர் அமெரிக்கன் தங்க கவர் பேனாவும், பென்சிலும், மூன்று கடியாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால், ஓர் ஷாக்ப்ரூப் ரேடியம் டயல் பாக்கெட் வாச் அல்லது ஜப்பான் டேபிள் டயம் பீஸும், நான்கு கடியாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் ஓர் பெரிய சைஸ் இங்கிலீஷ் அலாரம் டயம் பீஸும் கொடுக்கப்படும்.





| | | ஜுவல்ஸ் | ரூ. |
|---|---|---|---|
| 420 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 26 |
| 422 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 32 |
| 423 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 31 |
| 425 | 20 மைக்ரான் கோல்டு | 7 | 37 |
| 472 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 | 55 |
| 473 | ரோல்டு கோல்டு கேஸ் | 15 | 60 |





| | | ஜுவல்ஸ் | ரூ. |
|---|---|---|---|
| 444 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 33 |
| 446 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 39 |
| 447 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 39 |
| 449 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 | 45 |
| 483 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 | 50 |
| 485 | ரோல்டு கோல்டு கேஸ் | 15 | 60 |
| 498 | சதுரம் ரோல்டு கோல்டு | 15 | 50 |





| | | | |
|---|---|---|---|
| 426 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 30 |
| 428 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 36 |
| 429 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 34 |
| 431 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 | 40 |
| 475 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 | 59 |




| | | | |
|---|---|---|---|
| 514 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 39 |
| 515 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 42 |
| 539 | ரோல்டு கோல்டு டன்னோ | 5 | 45 |
| 517 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 42 |
| 519 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 | 48 |





| | | | |
|---|---|---|---|
| 404 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 20 |
| 406 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 26 |
| 407 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 30 |
| 409 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 | 36 |
| 465 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 | 43 |
| 466 | ரோல்டு கோல்டு கேஸ் | 15 | 48 |




| | | | |
|---|---|---|---|
| 410 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 | 22 |
| 412 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 | 28 |
| 417 | வாட்டர் ப்ரூப் ரோல்டு கோல்டு | 5 | 49 |
| 413 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 | 34 |
| 415 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 | 40 |
| 468 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 | 48 |

( டோன்னோ ) ( சைஸ் - 6¾ )




| | | | | |
|---|---|---|---|---|
| 456 | க்ரோம் ஸ்டீல்பாக் | 5 ஜுவல்ஸ் | ரூ. | 35 |
| 458 | ரோல்டு கோல்டு கேஸ் | 5 ஜுவல்ஸ் | ரூ. | 41 |
| 459 | க்ரோம் ஸ்டீல்பாக் | 7 ஜுவல்ஸ் | ரூ. | 41 |
| 461 | ரோல்டு கோல்டு கேஸ் | 7 ஜுவல்ஸ் | ரூ. | 47 |
| 488 | க்ரோம் ஸ்டீல்பாக் | 15 ஜுவல்ஸ் | ரூ. | 52 |
| 489 | ரோல்டு கோல்டு கேஸ் | 15 ஜுவல்ஸ் | ரூ. | 57 |

**PHILLIPS WATCH CO., POST BOX 6751, BOMBAY-22**

# ஜம்மியின் "லிவர்க்யூர்"

## குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு

எங்கள் டாக்டரை கீழ்க்கண்ட இடங்களில் குறிப்பிட்ட தேதி, நேரங்களில் கலந்து, குழந்தைகளின் ஈரல் குலை சம்பந்தமான கோளாறுகளுக்கு ஆலோசனை பெறலாம்.

| இடம் | தேதி | விலாசம் |
|---|---|---|
| புதுக்கோட்டை | 15-10-50 | மெஸர்ஸ். வசந்தா லாட்ஜ், போர்டிங் & லாட்ஜிங் |
| காரைக்குடி | 16-10-50 | மெஸர்ஸ் ஏ.வி. & ஸன்ஸ், ட்ராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ் |
| தேவகோட்டை | 17-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ் ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ் & ஜெனரல் மர்ச்சென்ட்ஸ் |
| சிவகங்கை | 18-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ்: கௌரி & கோ., கெமிஸ்ட்ஸ் & ஜெனரல் மர்ச்சென்ட்ஸ் |
| ராமநாதபுரம் | 19-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். ராஜன் மெடிகல் ஹால், கெமிஸ்ட்ஸ் & டிரகிஸ்ட்ஸ் |
| மதுரை | 20, 21-10-50 | மெஸர்ஸ். டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், கெமிஸ்ட்ஸ் & டிரகிஸ்ட்ஸ் |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் | 23-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். ஏ. எம். விஸ்வநாத அய்யர், மர்ச்சென்ட்ஸ் |
| தென்காசி | 24-10-50 | மெஸர்ஸ். ஸ்ரீ மெடிகல் ஸ்டோர்ஸ். வடக்கு ரத வீதி |
| கல்லிடைக்குறிச்சி | 25-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். கே. ஆர். வைகுண்டராம அய்யர், கெமிஸ்ட்ஸ் & டிரகிஸ்ட்ஸ் |
| திருநெல்வேலி | 27, 28-10-50 | மெஸர்ஸ். சந்திர விலாஸ் ஹோட்டல், திருநெல்வேலி ஜங்க்ஷன் |
| நாங்குநேரி | 29-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். டி. இ. சுப்பிரமணிய அய்யர் அண்டு கோ., ஜெனரல் மர்ச்சென்ட்ஸ் |
| ஸ்ரீவைகுண்டம் | 30-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். என். கோமதிநாயகம் பிள்ளை & ஸன்ஸ், கெமிஸ்ட்ஸ் & டிரகிஸ்ட்ஸ் |
| திருச்செந்தூர் | 31-10-50 | (காலை 9 முதல் 12 மணி வரை) மெஸர்ஸ். கா ர கூ ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ் & ஜனரல் மர்ச்சென்ட்ஸ் பாளையங்கோட்டை ரோடு |
| தூத்துக்குடி | 1-11-50 | மெஸர்ஸ். ஸ்ரீ தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ், வடக்கு ரத வீதி |

ஆலோசனை நேரம்:

காலை 9 முதல் 12 மணி வரை; மாலை 3 முதல் 5 மணி வரை


○●○

## ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மதராஸ் :: திருச்சிராப்பள்ளி



தீபாவளி வெளியீடு
ப்ரதீபாவின்
சொப்பன சுந்தரி
தமிழ்
அஞ்சலிதேவி...ஜி.வரலக்ஷ்மி
நாகேஸ்வரராவ் ... சிவராவ்
முக்காமலா நடித்தது
தயாரிப்பு & டைரக்ஷன்... ஜி.பலராமய்யா.....
For Bookings Contact...TALLAM PICTURES CIRCUIT
GANDHINAGAR...BANGALORE 2.
கோயமுத்தூர் நீலகிரிக்கு: ராஜா பிலிம்ஸ் சர்க்யூட், பொள்ளாச்சி
எப். எம். எஸ்: ஷா பிரதர்ஸ், சிங்கப்பூர்




# கல்கி
## பொருளடக்கம்

மலர் 10 இதழ் 11 } அக்டோபர் 15 { விக்ருதி௵ புரட்டாசி 29



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற - தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 10 **கல்கி** இதழ் 11

# என்ன சேதி ?

## ஆத்மீக வெள்ளம்

**வ**டநாட்டில் பலவிடங்களில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்குகளைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்தோம். சென்னை மாநகரிலும் நாலு தினங்கள் ஒரு பெரு வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்து நகரத்தையே மூழ்க அடித்திருந்தது. ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகளின் விஜயமாகிற பாரமார்த்திகப் பெரு வெள்ளத்தைத்தான் குறிப்பிடுகிறோம். தென்னாட்டில் நாஸ்திகம் பரவி மக்களின் வாழ்க்கையைக் கெடுத்து வருகிறது என்று பயப்படுகிறவர்கள் இந்த நாலு தினங்களும் சென்னையில் இருந்திருந்தால் தங்கள் கருத்தை நிச்சயம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் எங்கெங்கே சென்றாலும் அங்கெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து அவரைத் தரிசனம் செய்தார்கள். சுவாமிகள் திருவாய் மலர்ந்து பேசிய இடங்களிலெல்லாம் மண்டபத்துக்கு உள்ளும் புறமும் கணக்கில்லா மக்கள் கூடியிருந்து அவருடைய அமுத மொழிகளைக் கேட்டார்கள். வேத வியாஸரும், அகஸ்தியரும், வள்ளுவரும், திருநாவுக்கரசரும், நம்மாழ்வாரும், சங்கரரும், தாயுமானவரும், சுவாமி விவேகானந்தரும் எந்த அநாதியான தெய்வீக தத்துவங்களைப் போதித்தார்களோ, அதே தத்துவங்களைத்தான் ஸ்ரீ சிவானந்தரும் தற்காலத்து மக்களுக்கு நன்கு விளங்கக் கூடிய முறையில் எடுத்துச் சொன்னார். கேட்டவர்கள் புனிதமடைந்தார்கள். கேட்க முடியாமல் சுவாமிகளைத் தரிசித்தவர்களும் பெரும் பாக்கியமடைந்தோம் என்று மகிழ்ந்தார்கள். சுவாமிகளின் விஜயம் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்வதற்கும், சென்னை நகரில் சுவாமிகளுக்குச் சிறந்த வரவேற்பு அளிப்பதற்கும் வரவேற்புக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கமிட்டியின் தலைவராயிருந்து நடத்திவைத்த நீதிபதி ஏ. வி. விசுவநாத சாஸ்திரி அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். சுவாமிகளின் விஜயம் சம்பந்தமாகச் சுமார் ஒரு மாத காலம் அல்லும் பகலும் பாடுபட்டுச் சகல ஏற்பாடுகளையும் குறைவறச் சிறப்பாக நடத்தி வைத்த "மை மேகஸைன்" ஆசிரியர் ஸ்ரீ பி. கே. விநாயகம் அவர்களையும், உதவி ஆசிரியர் ஸ்ரீ கே. ஆர். சேஷாத்ரி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.


## கைவிடப்பட்டார் !

'**ம**ன்னரைக் காட்டிலும் மன்னரிடம் அதிக விசுவாஸம் உள்ளவர்' என்று அதிதீவிர ராஜ பக்தர்களை வர்ணிப்பது உண்டு. அதைப் போல ஸ்ரீ ஜோகேந்திர நாத் மண்டல் பாகிஸ்தானிகளைக் காட்டிலும் பாகிஸ்தானிடம் பரம பக்தராக விளங்கினார். பாகிஸ்தானில் சிறுபான்மையோருக்கு உயர்தரப் பதவி கிடைப்பது என்பது கனவிலும் கருத முடியாத விஷயம். அப்படியிருந்தும் பாகிஸ்தான் சிருஷ்டியான தி லிருந்து பாகிஸ்தான் தலைமை அரசாங்கத்தில் ஸ்ரீ மண்டல் சட்ட மந்திரி பதவி வகித்து வந்தார். காயிதே ஆஜம் ஜின்னாவினால் அவர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார் எனில், ஸ்ரீ மண்டலின் பாகிஸ்தான் பக்தியைக் குறித்து அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா?


ஸ்ரீ மண்டல் அப்பதவியில் நியமிக்கப்பட்டபோது பாகிஸ்தான் அதிகாரிகள் பிரமாதமாகப் பிரசாரம் செய்தார்கள். தங்களுடைய ராஜ்யத்தில் சிறுபான்மையோருக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்குச் சகல உரிமைகளும் அளிக்கப்படும் என்பதற்கு மண்டலின் நியமனத்தைக் காட்டிலும் அத்தாட்சி வேறு வேண்டியதில்லை என்று பெருமையடித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய வண்டவாளம் இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.

ஸ்ரீ மண்டல் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இந்தியாவுக்கு வரும்படி நேர்ந்திருக்கிறது. பாகிஸ்தானில்

# நம்பிக்கைத் துரோகம்


1947-ல்
அன்பார்ந்த சகோதரர்களே! கவலைப் படாதீர்கள்! நீங்கள் கடைத்தேறுவதற்குச் சரியான திட்டம் போட்டிருக்கிறேன்.
லியாகத் அலி
சிறைக் கூடம்
மலை வாசிகள்
பட்டாணியர்கள்
திட்டம் அமுலுக்கு வருகிறது!
பட்டாணியர்கள்
லியாகத் அலி
பாக் - விமானப் படை
ஆப்கானிஸ்தான்
1950-ல்
இத்தனை தொல்லைகளுக்கும் அதோ அந்த ஆப்கானியன் தான் காரணம்!
லியாகத் அலி

- சாஸ்திரி



1947-ல்
என் அருமைச் சகோதாரரே! உங்களுக்கு வேண்டிய வசதியெல்லாம் செய்து கொடுக்கிறேன்.
பாகிஸ்தான்
நாங்கள் சிறுபான்மையோரைக் கொடுமைப் படுத்துவதாக யாராவது சொல்ல முடியுமா?
பேஷ்! உங்களை நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன்
எனக்குச் சற்று விசிறுங்கள்
என்ன?... ...சரி!
1950
... ஆனால் இறுதியில் கிடைத்த பலன் இதுதான்!



ரிஷிகேசம் ஆனந்த ஆசிரமத்து ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகள்.

பிரதம மந்திரி பதவிக்கு அடுத்தபடியாகப் பொறுப்புள்ள உயர் பதவியை வகித்த ஸ்ரீ மண்டலே பாகிஸ்தானிகளால் கைவிடப்பட்டு லக்ஷோப லக்ஷம் அகதிகளைப் போல் இந்தியாவுக்கு வந்து அடைக்கலம் புகும்படி நேர்ந்திருக்கிறதென்றால், அங்குள்ள கோடிக் கணக்கான அனாதை ஹிந்துக்களின் கதி என்ன என்பதை ஊகித்துக் கொள்வது கஷ்டமல்ல.

## பயங்கர நிலைமை

ஸ்ரீ மண்டல் விடுத்துள்ள அறிக்கை பாகிஸ்தானில் ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமையைச் சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் காட்டுகிறது. பாகிஸ்தானில் சென்ற மூன்று வருஷ காலமாக நடந்து வந்துள்ள அக்கிரமங்களைப் பொறுமையுடன் சகித்து வந்த ஸ்ரீ மண்டலே இப்போது பொறுமையை இழக்கும்படி நேர்ந்திருக்கிறது. பாகிஸ்தானிகளின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து மேற்கு பஞ்சாபில் தங்கிய சுமார் ஒரு லட்சம் ஹரிஜனங்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டு விட்டார்கள் என்று ஸ்ரீ மண்டல் கூறியிருப்பதைக் கேட்பவர்கள் பதை பதைக்காமல் இருக்க முடியாது.

"பாகிஸ்தானில் ஹிந்துக்களுக்கு இழைக்கப்படும் கொடிய அட்டூழியங்களைப் பாகிஸ்தான் தலைவர்களிடம் எடுத்துக் காட்டிப் பரிகாரம் தேட முயற்சித்தேன். ஆனால், என் முயற்சியெல்லாம் வீணாகி விட்டன. இனி பாகிஸ்தானில் ஹிந்துக்களுக்கு இடம் இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். ஒன்று அவர்கள் முஸ்லிம்களாக மாற்றப்படுவார்கள். இல்லாவிடில் ஹிந்துக்களின் பூண்டே இராமல் அழிக்கப் படுவார்கள். இதுதான் பாகிஸ்தான் தலைவர்கள் தீர்க்காலோசனையுடன் வகுத்துள்ள திட்டம்" என்று ஸ்ரீ மண்டல் கூறியிருக்கிறார். இதிலிருந்து அங்கு மீதியுள்ள ஹிந்துக்களை எத்தகைய பேராபத்து எதிர் நோக்கி நிற்கிறது என்பதை இந்தியத் தலைவர்கள் உணர்ந்து சிறிதும் காலதாமதமின்றித் தகுந்த முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்கள் அத்தகைய ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழி இல்லையெனில், அவர்களை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மகத்தான செலவை, காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டன் கூறுவது போல தலை வரி விதித்தாவது சமாளிக்கவேண்டும். அந்தப் பிரச்னை திருப்திகரமாகத் தீர்ந்தாலன்றி இந்தியாவின் நற்பெயருக்கு ஏற்படும் இழுக்கு எக்காலத்திலும் மறையாது.

# எல்லைப் புறத்தில் இடிமுழக்கம்

உலகப் பிரசித்தி பெற்று விளங்கும் தாஜ் மகாலைச் சிருஷ்டித்த சிற்பிகளின் கைகளை ஷாஜஹான் சக்கரவர்த்தி ஈவு இரக்கமின்றி வெட்டியதாகச் சரித்திரக் கதைகள் கூறுகின்றன.

இந்திய நெசவுத் தொழிலாளர்களின் அபூர்வமான திறமையைக் கண்டு அசூயை கொண்ட ஆங்கிலேயர்கள், அவர்களுடைய விரல்களை வெட்டி நெசவுக் கலையை நாசமாக்கியதாகச் சொல்லப் படுகிறது.

மேற்படி சம்பவங்கள் ஆதாரமற்ற கட்டுக் கதைகளாக இருக்குமோ என்று சந்தேகப் படுகிறோம். ஆறு அறிவு படைத்த நாகரிக மனிதர் அத்தகைய கொடுமைகளைச் செய்திருக்க முடியுமா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் அவற்றைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகக் கொடூரமான சம்பவங்கள் நம் கண்முன் நிகழ்வதைக் காணும் போது, அக்காலத்தில் நடந்த சம்பவங்கள் அற்பமானவையாகவே தோன்றுகின்றன.

நாகரிகமும் சுதந்திர உணர்ச்சியும் முதிர்ச்சி அடைந்துள்ள இக்காலத்தில் தான், சுதந்திர இந்தியாவைச் சிருஷ்டிக்கப் பாடுபட்ட சிற்பிகளைப் பிரிட்டிஷார் சிறையில் போட்டு வாட்டினார்கள்.

ஆனால் அதையும் காட்டிலும் கொடிய சம்பவம் இப்போது உலகம் அறிய நடந்து வருகிறது.

பாரத நாட்டின் சுதந்திர மாளிகையைச் சிருஷ்டித்த சிற்பிகள், பிரிட்டிஷார் போன பின் அதிகார பீடத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்து வருகிறார்கள்.

எனினும் அத்தகைய சிற்பிகளில் இருவர் இன்னும் சிறையில் தவம் கிடக்கிறார்கள் எனில், இதைக் காட்டிலும் கொடுமையான சம்பவம் வேறு என்ன இருக்க முடியும்?

*     *     *

**பா**ரதநாடு சுதந்திரம் பெற்றதால் தான் பாகிஸ்தான் உருவாக முடிந்தது. எனவே. பாகிஸ்தானிகள் பாரத நாட்டுக்கும் பாரதநாடு சுதந்திரம் பெறுவதற்காகப் பாடுபட்ட தலைவர்களுக்கும் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்று நாம் காண்பது என்ன? எல்லை காந்தி என்று புகழ் பெற்ற கான் அப்துல் கபார்கானையும் அவரது சகோதரர் டாக்டர் கான் சாகிபையும் பாகிஸ்தான் அதிகாரிகள் சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாகச் சிறையில் அடைத்திருக்கிறார்கள்.

கான் சகோதரர்கள் சாதாரணமான தலைவர்கள் அல்ல. இந்தியா இருநூறு வருஷ காலம் பிரிட்டிஷாரிடம் அடிமைப் பட்டிருந்த காலத்தில் கூட அவர்களுக்கு அடிபணியாமல் தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்த பட்டாணிய சமூகத்தின் தனிப் பெரும் தலைவர்கள்.

பட்டாணியர்கள் பட்டாக் கத்தியுடன் பிறப்பவர்கள், பட்டாக் கத்தியுடன் வாழ்பவர்கள், கடைசியில் பட்டாக் கத்தியுடனேயே இறப்பவர்கள்.

பலாத்காரம்தான் அவர்களுடைய உயிர்; சுதந்திரம்தான் அவர்களுடைய உடைமை; வீரப் போர்தான் அவர்களுடைய பரம்பரைத் தொழில்.

பிரிட்டிஷாருக்குப் பஞ்சணையாக இருந்து வந்த பாரத நாட்டில் பட்டாணியர்கள் அவர்களுக்கு முள்ளைப் போல இருந்து வந்தார்கள்.

எல்லைப்புற மலைவாசிகளான பட்டாணியர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்தப் பிரிட்டிஷார் எத்தனையோ பாடுபட்டார்கள். கோடிக் கணக்கில் செலவழித்தார்கள். ஓய்ச்சல் ஒழிவின்றி அவர்களுடன் போராடினார்கள். மலைவாசிகள் வசிக்கும் கிராமங்களின்மீது வாரந் தோறும் வெடிகுண்டுகளை வீசி வந்தார்கள்.

எனினும் பட்டாணியர்கள் கட்டுப் படவில்லை; பணிந்து போர்க்குணத்தை மாற்றிக் கொள்ளவில்லை; சுதந்திரத்தைக் கைவிடவும் இல்லை.

கடைசியில் பிரிட்டிஷார் சோர்ந்து போய் அவர்களுடன் வலுவில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

எனினும் போர்க்குணமே உருவான பட்டாணியர்களின் வாழ்க்கையில் 1930-ம் வருஷத்திலே திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது.

காந்தி மகானின் சாத்துவிக முறையினால் ஆகர்ஷிக்கப் பட்ட கான் அப்

துல் கபார்கான், தலைமுறை தலைமுறையாகப் போர்க்குணம் படைத்திருந்த பட்டாணியர்களின் மனதை அடியோடு மாற்றி அவர்களைக் காந்தி மகானின் சாத்துவிக வழிக்குத் திருப்பினார்.

துப்பாக்கிகளையே தங்களுடைய உயிராகவும் உடைமையாகவும் கருதிய பட்டாணியர்கள் அவற்றைத் தூக்கி எறிந்து விட்டுச் சாத்விகக் கொள்கையைக் கடைப் பிடித்ததைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர்.

* * *

பாகிஸ்தான் சிருஷ்டிக்கப் பட்டதும், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் பாகிஸ்தானில் சேருவதா வேண்டாமா என்ற பிரச்னை எழுந்தது.

அப்போது எடுக்கப்பட்ட சர்வஜன வாக்கு எடுப்பில் கான் அப்துல் கபார் கான் கட்சியினர் கலந்து கொள்ள மறுத்து விட்டார்கள் என்பது உலகம் அறிந்த விஷயமாகும்.

பலாத்காரத்தையும் இரத்தக் களரியையும் தடுப்பதற்காகவே அப்துல் கபார்கான் அதில் கலந்து கொள்ளவில்லை என்று தீர்மானித்தார்.

அவ்வாறாக, மேற்படி தேர்தலில் முஸ்லிம் லீக் தன் இஷ்டப்படி நடந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தும் கூட, பாகிஸ்தானில் சேர வேண்டும் என்பதை ஆதரித்துச் சில வோட்டுகளே அதிகம் கிடைத்தன.

சர்வஜன வாக்கு எடுப்பில் கபார்கான் கோஷ்டியினர் தீவிரமாகக் கலந்து கொண்டிருப்பார்களாயின் முடிவு எவ்வாறு ஆகியிருக்குமோ சொல்ல முடியாது.

எல்லைப்புற மாகாணம் பாகிஸ்தானில் சேர்ந்த பிறகு பட்டாணியர்களின் நல்லுறவையும் நம்பிக்கையையும் பெறுவதற்கான காரியங்களைப் பாகிஸ்தான் அதிகாரிகள் செய்திருந்தால் நிலைமை இன்றிருப்பதுபோல் மோசமாயிராது.

ஆனால் பாகிஸ்தான் அதிகாரிகள் செய்த முதல் காரியம் என்னவெனில், பிரிட்டிஷார் காலத்தில் பட்டாணியர்களைக் கொடுமைப் படுத்திய ஓர் ஆங்கிலேயரையே அந்த மாகாணத்தின் கவர்னராக நியமித்தார்கள்.

பாகிஸ்தான் பார்லிமெண்டில் மேற்படி அநீதியைச் சுட்டிக் காட்டியதற்காக கான் அப்துல் கபார்கானைச் சிறைப்படுத்தினார்கள்.

பாகிஸ்தான் அரசியலில் கலந்து கொள்ளாமல் விலகி நின்ற டாக்டர் கான்சாகிபைக் கூடச் சிறைப் படுத்தப் பாகிஸ்தான் தயங்கவில்லை.

பாகிஸ்தான் சர்க்காரின் அத்தகைய அக்கிரமம் காரணமாகப் பட்டாணியர்களிடையே புகைச்சலும் போராத்திரமும் மூண்டிருக்கின்றன.

அவர்களுடைய கிளர்ச்சியை அடக்குவதற்காகப் பாகிஸ்தான் வெடிகுண்டு விமானங்கள் குண்டு மாரி பொழிந்ததில் நூற்றுக் கணக்கானவர் மாண்டனர் என்று செய்திகள் கூறுகின்றன.

தங்களுடைய சுதந்திரத்துக்காகப் பிரிட்டிஷாருடன் போராடித் தோல்வி என்பதையே கண்டறியாத பட்டாணியர்களை, பாகிஸ்தான் அதிகாரிகள் பலாத்கார முறைகளைக் கொண்டு பணிய வைக்கப் பார்ப்பது பலிக்கக் கூடிய காரியமா?

மேற்படி பட்டாணியர்களைக் கொடுமைப் படுத்துவதே, பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் தற்போது முற்றி வரும் தகராறுக்கு முக்கிய காரணம் ஆகும்.

எல்லைப்புற மாகாணம் வெகு காலம் வரையில் ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த பிரதேசமாக இருந்தது. பிரிட்டிஷார் தங்கள் சுயநலனை முன்னிட்டு அந்த மாகாணத்தை ஆப்கானியர்களிடமிருந்து பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

ஆப்கானியர்கள் பட்டாணியர்களேயாதலால், தங்கள் எல்லையை அடுத்துள்ள தங்களுடைய சகோதர சகோதரிகள் இப்போது பாகிஸ்தானிகளின் பலாத்கார வெறிக்கு இரையாகி வருவதைப் பார்த்து மௌனமாகச் சகித்துக் கொண்டிருக்க முடியுமா?

எனவே, எல்லைப்புற மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தொல்லை தீர வேண்டுமானால், ஆப்கானிஸ்தானுடன் ஏற்பட்டுள்ள பகை ஒழிய வேண்டுமானால் பாகிஸ்தான் பட்டாணியர்களைக் கொடுமைப் படுத்துவது நிற்க வேண்டும்.

பட்டாணியர்களின் நட்பைப் பாகிஸ்தான் பெற வேண்டுமாயின், சிறையில் உழன்று வரும் கான் சகோதரர்களைப் பாகிஸ்தான் அதிகாரிகள் உடனே விடுதலை செய்ய வேண்டும்.

அது மாத்திரமல்ல, அவர்களை எல்லைப்புற மாகாணத்தின் அதிகார பீடத்தில் அமர்த்த வேண்டும்.

அவ்விதமின்றேல், பாகிஸ்தான்-பட்டாணியர் புகைச்சலும் பாகிஸ்தான் — ஆப்கானிஸ்தான் பகையும் என்ன விபரீதத்தில் வந்து முடியுமோ!

# ஆடல் பாடல்

## கர்நாடகம்

## கவியின் கனவு

கவிகள் என்பவர்கள் உலகத்தில் எதற்காகத்தான் பிறக்கிறார்களோ, தெரியவில்லை. பிறந்தவர்கள் சும்மா இருக்கிறார்களா? பட்டப் பகலில் ஏதாவது கனவு காண்கிறார்கள். பகற் கனவு காண்பதே அவர்களுடைய வேலை என்றுகூடச் சொல்லலாம். அப்படித்தான் கனவு காண்கிறார்களே? அதை வெளியில் சொல்லாமல் தங்கள் மனதிற்குள்ளே மூடி மறைத்து வைத்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. அந்தக் கனவுகளை வைத்துக் கவி பாடுகிறார்கள். பிறகு அக் கவிகளை ஊரெல்லாம் பரவச் செய்கிறார்கள். தங்களை இல்லாத கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிக் கொள்கிறார்கள். பிறரையும் கஷ்டப்படுத்துகிறார்கள். கடைசியில், என்ன ஆகிறது? நம்முடைய தலையில் எப்போது எந்தப் பாறாங்கல் விழப் போகிறதோ என்று நாம் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டி வருகிறது!

ஒரு நாடகத்தில் தலைமை வகிப்பதென்றால் ஏதோ எளிதான காரியம் என்றும், உல்லாசமாக முதல் வரிசையில் உட்கார்ந்து நாடகத்தைப் பார்த்துக் களித்துவிட்டு வரலாம் என்றும் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். அது வீண் கனவுதான் என்று "கவியின் கனவு" என்னும் நாடகத்தைச் சென்ற வாரத்தில் பார்த்தபோது நான் உணர வேண்டியதாயிற்று. அந்தப் பொல்லாத ராஜ குரு அவ்வளவு பெரிய பாறாங்கல்லைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வருகிறானே, அவன் அதைத் தலைமை வகிக்கும் நமது தலையில் போட்டு வைக்கப் போகிறானே என்று எனக்குப் பெருங்கவலையாகி விட்டது! தலை போனால் பாதகமில்லை; ஆனால் நாடகத்தை முழுதும் பார்த்து முடிவு தெரிந்துகொள்ள முடியாமல் போய் விடுமே? இதுதான் அதிகமான கவலையை அளித்தது.

கவிஞர் ஒருவர் விதியை வெல்ல வேண்டும் என்றும், உலகத்தில் வறுமையே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றும், உயர்வு தாழ்வுகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்றும், — இப்படியெல்லாம் கனவு காண்கிறார்! இந்த இலட்சியங்களையெல்லாம் எதுகை மோனையுடன் பாடல்களாகப் பாடுவதினாலேயே சாதித்துவிடலாம் என்றும் அக்கனவிலே கருதுகிறார். ஆனால் உண்மையில் இதெல்லாம் லேசில் நடக்கிற காரியமா? அந்த தேசத்து அரண்மனை ராஜகுரு வந்து குறுக்கிடுகிறான். கனவு காண்கிற கவியைச் சிறையிலே பிடித்து அடைக்கிறான். கவிஞர் சித்த சுவாதீனத்தை இழந்து பித்தராகிறார். பிதற்றிக்கொண்டே சிறையில் வசிக்கிறார். அவருடைய மகனும் மகளும் வயதாகி வளர்ந்து நாடகக் கலைஞர்கள் ஆகிறார்கள்.

ராஜ குரு என்னும் வேஷதாரியோ, ருஷியா தேசத்து ஸார் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் இளவரசன் இளவரசி முதலியோரையும் தன்னுடைய கண்களின் காந்த சக்தியினாலும், மனோவசிய மாய சக்தியினாலும், இஷ்டம்போல் பலகாலம் ஆட்டி வைத்து வந்த ரஸ்புடீன் என்பவனை ஒத்தவன். அந்த தேசத்து அசட்டு ராஜா, அகம்பாவம் பிடித்த ராணி, அவர்களுடைய செல்வக் குமாரி—ஆகியவர்களை அந்த ராஜகுரு ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான்! அவர்கள்மீது தனக்குள்ள ஆதிக்யத்தின் மூலம் நாட்டில் பல அக்கிரமங்களைச் செய்து வருகிறான். ஆனால் சேனாபதி சுகதேவனும் அவனுடைய சகோதரி கனிமொழியும் மட்டும் ராஜகுருவின் மாயவலையில் சிக்கவில்லை. அதற்கு மாறாக, சேனாபதியின் சகோதரி, கவியின் குமாரன் மணிவண்ணனுடைய மோக வலையில் சிக்கி, அவனை மணக்க விரும்புகிறாள்.

ராஜகுரு இளவரசியின் கற்பைக் கெடுத்த பிறகு, அவளை நாடகக் கலைஞன் மணிவண்ணனுக்கு மணஞ் செய்துவைக்கச் சூழ்ச்சி புரிகிறான். அந்தச் சூழ்ச்சியைக் கெடுக்கத் தீர்மானித்த சேனாபதியின் சகோதரி கல்யாணப் பந்தலில் திடீரென்று தோன்றி மணமகன் கழுத்தில் சடாரென்று மாலையைப் போட்டு விடுகிறாள்!

ராஜகுருவின் மோசச் சூழ்ச்சிகள் எல்லாம் வெளிப்படப் பார்க்கின்றன. அவன் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிக் கொண்டு யார் தலையிலோ போடுவதற்கு ஓடுகிறான். பிறகு சேனாபதியுடன் கத்திச் சண்டை யிட்டுத் தோல்வி யடைகிறான். முடிவில், ஒரு பெரிய வீராவேசப் பிரசங்கம் செய்துவிட்டுத் தன்னைத்தானே குத்திக்கொண்டு


ராணி ஊர்வசி


வியாக்ரசிம்மன்



கனிமொழி


சுகதேவன்

சாகிறான்! அவன் உண்மையில் பகை நாட்டைச் சேர்ந்த ஐந்தாம் படைக்காரன் என்று வெளியாகிறது. அதோடு கவியின் குமாரன் நிடீரென்று அரச குமாரனாக மாறுகிறான். இரண்டு ஜதை இனிய திருமணங்கள் நடைபெறுகின்றன. கவிஞர் தமது கனவு நிறைவேறிவிட்டதாக எண்ணி ஆனந்தப் படுகிறார். பேஷாக ஆனந்தப் படட்டும்! முப்பது வருஷம் கஷ்டப்பட்டவர் கொஞ்சம் சந்தோஷப் பட்டுவிட்டுப் போகட்டுமே!

"கவியின் கனவு" என்னும் இந்த நாடகம் முன்னொரு சமயம் சக்தி நாடக சபையாரால் சேர்ந்தாற் போல் 150 நாட்கள் நடிக்கப்பட்டுத் தமிழ்நாட்டில் மிகப் பிரசித்தி அடைந்தது.

ஒரு நாடகத்தில், —நடிக்க வேண்டிய நாடகத்தில்,—இருக்கவேண்டிய உணர்ச்சி வேகங்கள், வெவ்வேறு குண சித்திரங்களையுடைய பாத்திரங்கள், கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகள், விரு விருப்பான சம்பாஷணைகள்—ஆகிய எல்லா நல்ல அம்சங்களையும் வைத்து இந்த நாடகத்தை இயற்றிய ஆசிரியர் ஸ்ரீ எஸ். டி. சுந்தரம் என்னும் இளைஞர். 1942-ல் பத்து மாதம் சிறைப்பட்டிருந்த தேச பக்தரும் தேசிய வீரருமாகிய ஸ்ரீ எஸ். டி. சுந்தரம் பல உயர்ந்த இலட்சியங்களையும், புரட்சிகரமான கருத்துக்களையும் புகுத்தி இந்த நாடகத்தை அமைத்திருக்கிறார்.


ராஜகுரு (ஐந்தாம் படை)

தற்சமயம் தமிழ் நாட்டில் உள்ள தலை சிறந்த நாடக ஆசிரியர்களில் ஸ்ரீ எஸ். டி. சுந்தரம் ஒருவர் என்று சொன்னால், அது மிகையாகாது. நாடகத்தைப் புத்தக வடிவில் படித்ததிலிருந்தே இந்த அபிப்பிராயம் என் மனதில் தோன்றியது. சென்ற வாரத்தில், சென்னை 'அமைச்சூர் ஆக்டர்கள்' என்ற பொழுதுபோக்கு நாடக கோஷ்டியார் இந்த நாடகத்தை நடித்தபோது பார்க்கும்படியான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. "கவியின் கனவு" நாடகத்தை அரங்க மேடையில் நடித்துப் பார்க்க வேண்டும் என்ற என் நெடுநாளையக் கனவும் நிறைவேறியது.

• • •

நடிகர்களில் ராஜ குருவாக நடித்த ஸ்ரீ வி. ஜி. விசுவநாதன் அவர்களுடைய நடிப்புத் திறமையைப் புகழ்ந்து பாராட்டலாமா, அல்லது அழுத்தமாகக் கண்டிக்கலாமா என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. "போதும் நீங்கள் ராஜகுரு வேஷம் போட்டு நடித்தது! வேறு நல்ல வேஷம்,—ஒரு அசட்டு ராஜாவாகவோ அல்லது சமத்து ஏழைவரசியாகவோ,—வேஷம் கிடைத்தால் போட்டுக்கொள்ளுங்கள். கிடைக்கா' விட்டால் தயவு செய்து சும்மா இருங்கள்!" என்று சொல்லத் தோன்றுகிறது. அவ்வளவு தூரம் நம்மை அந்த ராஜகுரு பயங்கரப் படுத்தி விடுகிறார். அவர் தம் கண்களைத் தீ எழும்படி விழிக்கிற விழிப்பும், கரிய பெரிய புருவங்களை நெரிக்கிற நெரிப்பும், பற்களையும் உதடுகளையும் கடிக்கிற கடிப்பும், தோளையும் கழுத்தையும் அசைக்கிற அசைப்பும், குரோதம் ததும்பச் சிரிக்கிற



சாந்தி



மணிவண்ணன்



ஷியாமளா



கண்டாகர்ணன்

சிரிப்பும்.—நாடகம் பார்த்துச் சில நாள் வரையில் என்னுடைய கனவிலே திடீர் திடீரென்று தோன்றிப் பயங்கரப் படுத்தி வந்தன. அவர் பேசிய வார்த்தை ஒவ்வொன்றும் கடு சரம் போலப் பாய்ந்து வந்து செவியைத் துளைத்தன. இன்னமும் அந்த ராஜகுருவை நினைத்தால் என் நெஞ்சு பக், பக் என்று அடித்துக் கொள்கிறது. நல்ல வேளையாக அவர் நாடக மேடையில் ஆயிரம் பேரைச் சாட்சி வைத்துக் கொண்டு கத்தியால் மார்பில் குத்திக் கொண்டு செத்ததை நினைத்து ஆறுதல் பெறுகிறேன். சர்வாதிகாரி ராஜகுரு வீழ்க! நடிகர் ஸ்ரீ வி. ஜி. விசுவநாதன் வாழ்க!

கவியாக நடித்து நல்ல பெயர் வாங்குவது கடினமான காரியம். அதற்கு மேலே அந்தக் கவி சிறைக் கைதியாகவும், பைத்தியக்காரனாகவும் மாறுவதைச் சேர்த்து நடிப்பதென்றால் சாமான்யமல்ல. பைத்தியக்காரன் வீதியில் தோன்றினாலும், அல்லது அரங்க மேடையில் தோன்றினாலும், பார்ப்பவர்களுக்குச் சாதாரணமாகச் சிரிப்பு வருவதே இயல்பு. பைத்தியக்காரன் வேஷம் போட்டுச் சபையோரின் அநுதாபத்தைப் பெறுவது மிகவும் கடினமான காரியம். இதை ஸ்ரீ வி. வி. ஜயராமன் என்பவர் நன்கு சாதித்து வெற்றி பெற்றார். அவர் "விதியை வெல்வோம்" என்று பாடிய போதும் சரி, குயில்—மயில் என்றெல்லாம் பிதற்றிய போதும் சரி, சபையோரின் அநுதாபத்தைக் கொள்ளை கொண்டார். ஆகவே நாடக முடிவில் நடக்க முடியாத காரியங்கள் எல்லாம் நடந்து அவருடைய கவிக்கனவு நனவானதாகச் சொன்னபோதும் நாம் அவநம்பிக்கை கொள்ளவில்லை. "ஐயோ! போகட்டும்!" என்று ஆறுதல் அடைந்தோம்.

மற்றப்படி சேனாபதி சுகதேவனாகவும், மணிவண்ணனாகவும், கார்மேகனாகவும், கண்டா கர்ணனாகவும் நடித்தவர்களும், அரசி, எழுவரசி, கனிமொழி முதலிய பெண் பாத்திரங்களாக நடித்தவர்களும் பிரமாதமாக ஒன்றும் செய்யாவிட்டாலும் அமெச்சூர் நாடக மேடையின் மானத்தை ஒருவாறு காப்பாற்றினார்கள்.

* * *

கொஞ்ச காலமாகவே, தமிழ் நாட்டில் நாடகங்கள் புத்துயிர் பெற்றுத் தழைத்து வருவதைப் பார்க்கிறோம். ஆங்காங்கு 'அமெச்சூர்' நடிக கோஷ்டிகள் ஏற்பட்டு நாடகங்கள் நடத்துகிறார்கள். மூடிய நாடகக் கடைகளையும் திறக்கிறார்கள். இம்மாதிரி ஒரு கலை புத்துயிர் பெறும்போது, எல்லாம் முதல்தரமாயும் குற்றங்குறை இல்லாமலும் இருந்துவிட முடியாது. 'பத்துக்கு ஐந்து பழுதில்லை' என்று சொல்ல முடிந்தால் அதுவே பெரிய காரியந்தான்.

சில சமயம் நாடகமேடையில் பாத்திரங்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். அச்சமயம் மேலேயிருந்து திரை அவிழ்ந்து இறங்கத் தொடங்கும். அது நாடக பாத்திரங்களின் தலையிலே விழாமலிருக்க



கனவு கண்ட கவி

வேண்டுமே என்று சபையில் உள்ள நாம் நடுங்கிக் கொண்டிருப்போம்.

இன்னும் சில சமயம் எதிர்பாராத சமயத்தில் திரை திடீரென்று விலகிக் கொள்ளும். முதல் காட்சியில் செத்துப் போனவன் உல்லாசமாக உள்ளே உலா விக் கொண்டிருப்பதைக் காண்போம்.

இந்தமாதிரி ஏற்படும் சில்லறை விபரீதங்களைப் பொருட்படுத்தாமல் பார்த்தோமானல், சென்னை அமெச்சூர்கள் நடித்த "கவியின் கனவு" நாடகம் முதல்தரமான வெற்றி என்று சொல்லலாம்.

• • •

நாடகக் கலைக்குப் புத்துயிர் ஏற்பட்டு வருகிறது என்று சொன்னேன் அல்லவா? இதன் காரணமாக, கொஞ்சம் அசந்து தூங்கிக் கொண்டிருந்த சில பழைய நாடக சபைகள் விழித்து எழுந்து "என்ன சேதி?" என்று கேட்கத் தொடங்கியிருக்கின்றன. 'எக்மோர் டிரமாடிக் ஸொஸைட்டி' என்னும் எழும்பூர் நாடக சங்கத்தார் சில வருஷங்களுக்கு முன்பு நல்ல நல்ல நாடகங்கள் நடத்திப் பெயர் பெற்றவர்கள். சென்ற மாதத்தில் இச் சங்கத்தார் "கபீர்தாஸ்" என்னும் பழைய பக்த விஜய நாடகத்தை நடத்தினார்கள். புதிய முறையில் புதிய நாடகங்கள் அதிகமாக எழுதப் படவேண்டும் என்பதை இது நன்கு எடுத்துக் காட்டியது.'

மற்றப்படி "கபீர் தாஸ்" நாடகம் நடிப்புத் திறமை, நல்ல சங்கீதம், நகைச்சுவை முதலிய அம்சங்களில் சிறந்து விளங்கியது. ஸ்ரீ எம். டி. பார்த்தசாரதியைக் 'கபீர்' வேஷத்தில் பார்த்த பிறகு, வேறு யாரும் அந்த வேஷத்துக்கு லாயக் இல்லை என்றே தோன்றும். கடவுளைக் கண்ட மகா பக்தரின் சாந்தமும், பூரண ஞானப் பொலிவும் அவரிடம் குடி கொண்டிருந்தன. கபீர்தாஸரின் ஆழ்ந்த கருத்தடங்கிய பக்திப் பாடல்களை அவர் அபூர்வமாகப் பாடினர். வார்த்தைகள் நன்றாக காதில் விழா விட்டாலும், பொருள் முழுதும் விளங்கா விட்டாலும், முகபாவமும் இசையின் இனிமையும் மனதை உருக்கி விட்டன. கபீர்தாஸின் குமாரன் கமால் தாஸ¬ம் மணி மணியாகப் பாடி அழகாகப் பேசி நன்கு நடித்தான்.

பக்தர்களுக்கு' உணவு அளிப்பதற்காகக் கபீர்தாஸ் ஒரு செட்டியார் வீட்டில் கன்னம் வைத்துத் தானியம் முதலியவற்றைத் திருடிக்கொண்டு வருகிறார். திருட்டுக் கொடுத்த செட்டியாரும். அவர் மகனும் நகரின் கொத்தவாலும் பஞ்சாயத்தார்களும் சேர்ந்து கொட்டம் அடிக்கும் கட்டத்தில் சபையோர் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாக வேண்டியதாயிருந்தது.

எழும்பூர் நாடக சங்கத்தார் மேலும் மேலும் இத்தகைய பக்தி மயமான பழைய நாடகங்களையும் புதிய கருத்துக்கள் அடங்கிய புதுமை நாடகங்களையும் நடத்தி நாடகக் கலையின் புதிய வளர்ச்சிக்கு உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன்.

# திகம்பர சாமியார்

★ ★ ★ சட்டநாதப் பிள்ளை என்ற பிரசித்தி பெற்ற கும்பகோணம் வக்கீலின் கொட்டத்தை அடக்கி அவரால் கஷ்டப்படும் ஏழைகளைக் காப்பாற்ற முற்படுகிறார் திகம்பர சாமியார்.

வடிவாம்பாள் என்னும் பெண்ணை அவளுடைய 'பெற்றோர்கள்' வக்கீலின் காலாடிச் சகோதரனுக்குக் கலியாணம் செய்து கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். வடிவாம்பாள் அதற்கு இஷ்டப்படாமல் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். அவளைத் திகம்பர சாமியார் அவள் தாத்தாவின் வீட்டில் சேர்ப்பிக்கிறார். அங்கு வடிவாம்பாள் ஒரு மிராசுதாரின் மகனைக் காதலிக்கிறாள். அவளை எப்படியாவது பிடித்துக் கொண்டு வந்து தன் தம்பிக்குக் கலியாணம் செய்து வைக்க முயலும் வக்கீலின் சூழ்ச்சிகளிலிருந்து வடிவாம்பாளைக் காப்பாற்ற பல வேடங்கள் புனைகிறார் திகம்பர சாமியார். கடைசியில் வக்கீலின் அக்கிரமச் செயல்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. வக்கீல் சிறைப்படுகிறார். வடிவாம்பாளுக்கும் அவள் காதலித்த மிராசுதார் மகனுக்கும் திருமணம் நடக்கிறது.

இந்தக் கதையில் ஸ்ரீ கே. நம்பியார் திகம்பர சாமியாராகவும், ஸ்ரீ டி. பாலசுப்ரமணியம் வக்கீல் சட்டநாதப் பிள்ளையாகவும், ஸ்ரீமதி எம். எஸ். திரௌபதி வடிவாம்பாளாகவும் நடித்து ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். லலிதா—பத்மினி கோஷ்டியாரின் கதம்ப நடனத்துடன் குமாரி கமலாவின் புதுமை நடனமும் சேர்ந்து படத்துக்கு விருவிருப்பைக் கொடுக்கின்றன.

"திகம்பர சாமியார்" என்னும் இந்தப் பிரபலமான நாவல் வடுவூர் ஸ்ரீ துரைசாமி ஐயங்காரின் பல கதைகளில் மிகப் பிரசித்தமானது. சிக்கலான பல சம்பவங்கள் கொண்ட இந்தக் கதையைச் சம்பவங்கள் விடுபடாமல் கோவையாகத் தயாரித்து வெளியிட்ட மாடர்ன் தியேட்டர்ஸாரைப் பாராட்ட வேண்டும். படம் இப்பொழுது சென்னை நகரில் ராஜகுமாரி, பாரகன், பிராட்வே ஆகிய மூன்று தியேட்டர்களிலும் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தப் படத்தில் வரும் பிரதான காட்சிகளை அடுத்த பக்கங்களில் காண்க.


மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர
சாமியார்



# சந்திராபீடன் கனவு

**ஆனை. ஸ்ரீ. குஞ்சிதபாதம்**

காஷ்மீர் தேசத்தின் மன்னனான சந்திராபீடன் ஜலதோஷத்தினால் மூச்சுக் கூட விடுவதற்குச் சிரமமடைந்து திணறித் திக்குமுக்காடிக் கொண்டிருந்தான். மருத்துவ நூல்களையெல்லாம் குறைவறவும், நிறைவுறவும் கற்றுத் தேர்ந்த அரண்மனை வைத்தியரான கல்யாணமல்லர் அழகிய வர்ணமுடைய குங்குமப் பூவையும், வாசனை மிகுந்த பச்சைக் கற்பூரத்தையும், பரிசுத்தமான கஸ்தூரியையும், தேர்ந்தெடுத்த கோரோசனையையும் ஒட்டகத்தின் பாலில் குழைத்துப் பட்டுத் துண்டு ஒன்றில் தடவி அரசன் நெற்றியில் பற்றுப் போட்டார். வேந்தனின் ஜலதோஷம் குறைவதாக இல்லை. ராணியும் சேடியரும் சைத்தியோபசாரம் செய்து கொண்டிருந்தனர்.

சந்திராபீடனுக்குத் தலைநோயும் வந்து விட்டது. சப்பிரகூட மஞ்சத்தின் மீது பஞ்சணை மெத்தையில் இப்படியும் அப்படியுமாகப் புரண்டு துடித்துத் தத்தளிக்கலானான். தலையணைகளைப் பல்லினால் கடித்துக் கிழித்தான். அப்படியும் தலைவலி நிற்பதாக இல்லை. குமுறிக் குமுறி உள்ளத்திலே ஆவேசம் கொந்தளிக்க, கண்கள் சிவப்பேற, மீசை படபடக்க வீர கர்ஜனை செய்தான்.

"கல்யாணமல்லரே! ஆஸ்தான வைத்தியர் என்று பொன்னையும், பொருளையும் பற்றிக் கொண்டு செல்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறீர்! என் ஜலதோஷத்தையும் தலை நோயையும் போக்கும் வல்லமை உமக்கு இல்லையே! இதுதான் உங்கள் பெருமையோ? இனி என்னால் பொறுக்க முடியாது. ஒரு முகூர்த்த நேரத்திற்குள் என் தலையிலிருந்து வேதனையை நீக்காமலிருந்தால் உமது தலையை உடலிலிருந்து நீங்கச் செய்வேன்" என்று கடிந்துரைத்தான் அரசன்.

வெண்சாமரம் சுழற்றுவாரும், மயில் தோகை விசிறி வீசுவாருமான பணிப் பெண்கள் இடியோசை கேட்ட நாகம் போல் கதிகலங்கி நின்றனர். ராணியும் திகைத்தாள். கல்யாண மல்லர் மரண பீதியினால் வெலவெலத்துப் போய்த் திசை யறியாத மரக்கலம் போலச் சுழன்றார். திடீரென்று ஒரு யோசனை அவருடைய மனத்திலே தோன்றியது.

"அரசே! உத்தரவு!" என்று சொல்லி விட்டு வெளியே சென்றார் வைத்தியர். அவசர அவசரமாகக் கஞ்சா இலைகளையும், அபினையும் அரைத்துத் தேனுடனும், பழ ரஸங்களுடனும் கலந்து, வாசனைத் திரவியங்களால் நறுமண மூட்டி இரண்டு பொற் கிண்ணங்களிலே கொண்டு வந்து அரசனிடம் ஒரு கிண்ணத்தைக் கொடுத்துப் பருகும்படி கேட்டுக் கொண்டார்.

அரசன் புதியதோர் கிளர்ச்சியுடன் அந்த வாசனைத் திராவகத்தைப் பருகலானான். அவன் முகம் திடீரென்று புதியதொரு சோபையையும் பெற்றது.

"ஆஹா! பிஷக் ரத்னமே! மருத்துவ திலகமே! தன்வந்திரியோ நீர்! அசுவனி தேவர்களிடம் வரப்பிரசாதம் அடைந்தவரோ நீர்? தெவிட்டாத அமுதம் போல் தித்திப்பாக இருக்கிறதே இது! கவிதையின் இனிமையும், காமினியின் தேன் மொழிச் சுவையும், நல்லிசையின் இன்பமும், மற்றெல்லா நுண்கலைகளின் ஆனந்தமும் ஒருங்கே கலந்தது போலல்லவோ இருக்கிறது இதன் ருசி! ஆ! நன்று, நன்று! உங்களுடைய உயர்ந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! இந்த நவரத்தின ஹாரத்தை என் அன்பளிப்பாக வாங்கிக் கொள்ளுங்கள். இன்னொரு கிண்ணத்தையும் இப்படிக் கொடுங்கள்!" என்று உவகையுடன் சொன்னான் அரசன்.

"அரசர் பெருமானே! முதலில் பருகிய ஒன்றே போதும். தங்கள் தலைவலி அதிலேயே மறைந்துவிடும்" என்றார் மருத்துவர்.

"இல்லை! கொடுங்கள், அதையும் கொடுங்கள்."

"அதிகம் பருகுவது தங்கள் உடல் நலத்துக்கு ஏற்றதன்று. ஒரு கிண்ணமே போதும்!" என்றார் மீண்டும்.

"அந்த அற்புதத் திரவத்தைக் கொடுங்கள்! உலகத்தின் இன்பத்தையெல்லாம் பிழிந்து கூட்டிய சாரமான அந்த ரஸத்தைக் கொடுங்கள்!"

கெஞ்சும் பாவனையில் கொஞ்சும் மொழிகளால் அரசன் யாசித்த அந்தக் கிண்ணத்தையும் கல்யாணமல்லர் கொடுத்து விட்டார், தயங்கித் தயங்கி. அரசன் ரஸித்து ரஸித்து அக்கிண்ணத்திலிருந்த ரஸத்தைப் பருகினான்.

சற்று நேரத்தில் அரண்மனையே சுழல்வது போலிருந்தது அரசனுக்கு. ராணியும் சேடிகளும், வைத்தியரும், தூண்களும் அவன் கண்களெதிரேயிருந்து மறையும்படி இமைகள் மூடிக்கொண்டன. சோபை படர்ந்திருந்த முகத்தில் அப்பொழுது விவரம் புரியாத மாயக் கலவரங்களின் சாயை படிந்து மூடியது. அவன் மெய் மறந்து அசைவில்லாமல் கிடந்தான். தூக்

கத்தின் சாயையும் படர்ந்து வெளியுலக நினைவு தேய்ந்தது. கனவுலகின் கதவுகள் சத்தமின்றித் திறந்து கொண்டன.

*　　　　*　　　　*

கதவுகள் திறந்து கொண்டதும் அந்தப் பாழ் மண்டபத்தினுள்ளே ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டான் சந்திராபீடன். இருளை இன்னும் பயங்கரமானதாகச் செய்வதாக இருந்தது அதன் மங்கிய ஒளி. ஒரு மேடையின் மேலே தலைவிரி கோலமாய்க் கரிய நிற முள்ள ஆடையணிந்து ஒரு பெண் குப்புறப் படுத்துக் கொண்டு விசித்து விசித்து அழுது கொண்டேயிருந்தாள். இருளுடன் விளக்கின் ஒளி போராடிக் கொண்டிருந்தது போல, பயங்கரமான அந்த இடத்தின் மௌனத்துடன் அவளது தீனமான அழுகை ஒலி போராடிக் கொண்டிருந்தது.

"ஏ பெண்மணி! நீ ஏன் தனியான இந்த இடத்தில் இப்படி அழுது புலம்பிக் கொண்டிருக்கிறாய்? உன் சோகத்தின் காரணம் யாதோ?" என்று அருகில் நெருங்கிக் கேட்டான் சந்திராபீடன்.

அந்தப் பெண் தலையைத் திருப்பி அரசனைப் பார்த்தாள். பூரண சந்திரன் போன்ற எழிலுடன் விளங்கிய அவள் முகத்தில் சோகத்தின் சின்னம் களங்கமாக இருந்தது. அவள் நெற்றி திலகமில்லாமல் பாழாக இருந்தது. கரிய நிற வஸ்திரத்தைத் தவிர அவள் எழிலுடலில் எவ்வித ஆபரணமும் இல்லை. அலங்கோலமாக விழுந்த புடவையைச் சீர்படுத்திக் கொண்டு அவள் எழுந்து உட்கார்ந்தாள். பிழையில்லாத லாவண்யத்துடன் இருந்த அப் பெண்ணைக் கூர்ந்து நோக்கினான் சந்திராபீடன். அவள் அழகிய கண்கள் மந்தஹாசம் செய்தன.

"சந்திராபீட மகாராஜனே! மூதேவி என்னும் பெயருடையவள் நான்தான். துர்ப் பாக்கியவதியான நான் எப்பொழுதுமே துக்கப்பட்டுக் கொண்டிருக்கவே தோன்றியவள்."

"ஐயோ, மூதேவியா!"

"எதற்காகப் பயமடைகிறாய் நீ? ஆட்டு மந்தையுள் புகுந்த வேங்கைப் புலியே போலச் சத்துரு சைன்யத்தினிடையே புகுந்து ஹதாஹதம் செய்து போரில் வெற்றி வீரனாக விளங்கும் நீ கேவலம் ஒரு பெண் பேதையைக்கண்டு இப்படி கதி கலங்குகிறாயே! இதுவோ உன் சூரத்தனம்? இதுவோ உன் தைரியம்?"

"இல்லை, மூதேவி என்றால் க்ஷாமத்தின் அதிதேவதை என்று சொல்லுகிறார்களே?"

"அப்படி யென்று ஏதாவது ஒரு புராணத்திலிருக்கிறதா, என்ன? இராது; சில சமயங்களில் நல்லவர்களுக்குக் கெட்ட



பெயர் ஏற்பட்டு விடுகிறதல்லவா? அப்படித்தான் எனக்கும் கெட்ட பெயர் வருகிறது! துர்ப்பிட்சத்தை, துயரமுள்ள வாழ்க்கை நிலையை நானா உண்டாக்குகிறேன்? ஐயோ! தேவ தேவியர்களுக்குள்ளே நானே நெகிழ்ந்த இதயம் உடையவள். வறுமையையும், பிணியையும், இயற்கையின் வெறியையும் காணும் போது கண்ணீர் உகுப்பேன். நீ வாழும் பூமியையே பார். எப்பொழுதாவது நிம்மதியுடன் வாழ்ந்திருக்கிறீர்களா? சுயநலம், சுயநலம், எப்பொழுதும் சுயநலம். அடுத்தவன் நன்றாக இருக்கக் கூடாது. யுத்தம் செய்வதற்காகச் சைன்யத்தை வளர்க்கிறீர்கள்; சைன்யத்தை வளர்ப்பதற்காக யுத்தம் செய்கிறீர்கள். வாழத் தெரியாமல் வாழ்கிறீர்கள்!"

சந்திராபீடன் அவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அவளும் அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

சந்திராபீடன் சொன்னான்: மனிதன் மனிதன்தான். அவன் தேவனும் இல்லை; அசுரனும் இல்லை. நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும் அவன் வாழ்க்கையிலே. சுகப்படுகிறபோது சுகப்படுகிறான்; துக்கப்படுகிறபோது துக்கப்படுகிறான்.

மூதேவி சொன்னாள்: மனிதர்கள் தேவர்களாகக் கூடாதா? பூமி சொர்க்கமாகக் கூடாதா? க்லேசமின்றி எப்பொழுதும் ஆனந்தமடைந்தே இருக்கக் கூடாதா மனிதர்கள்?

"அப்படியானால் நீ எப்பொழுதும் துக்கப்பட்டுக் கொண்டேதான் இருக்க வேண்டும். எங்களிடம் உனக்கு அநுதாபம் இருக்குமானால், தெய்வங்களாகிய நீங்கள் எங்களைச் சிருஷ்டிப்பதற்கும் நாங்கள்

வாழ்க்கை நடத்துவதற்கும் காரண பூதங்களாக இருக்கலாம். ஆனால் எங்கள் மனோபாவத்தை ஸ்திரமான நல்ல நிலைமையில் இருக்கும்படி உங்களால் செய்ய முடிகிறதா? அப்படிச் செய்த பிற கல்லவா நீங்கள் எங்கள் சுக சௌக்கியங்களைக் கண்டு சந்தோஷமோ, துக்கமோ அடையலாம்? உலகத்தைச் சிருஷ்டி செய்து விட்டீர்கள். ஆனால் இயற்கையின் இயற்கைத் தன்மை மாறுபாடடைந்து வெள்ளமும், புயலும், வறட்சியும், பூகம்பமும் ஏற்படுவதை உங்களால் தடுக்க முடிகிறதா?"

"போ! போ! உன் கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடிய தர்க்க புத்தி எனக்கு இல்லை. நான் அழப் பிறந்தவள். நான் துக்கத்திலே சுகம் காண்கிறேன். என் கண்ணீரே என் இதயத்தைக் குளிரச் செய்கிறது. துன்பத்தின் இன்பமே எனக்கு நிம்மதி தருகிறது. என் அழுகையை மாற்ற முயற்சி செய்ய வேண்டாம். உலகமும், வாழ்க்கையும் எனக்கும், உனக்கும் புரியாத புதிராகவே இருக்கட்டும்."

ஸ்ரீதேவி மறுபடியும் படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். சந்திராபீடன் பாழடைந்த அந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்தான். வானம் தெளிவாக இருந்தது. சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி மின்னின.

* * *

சந்திராபீடன் மறுபடியும் கண்விழித்த போது வானத்தில் சந்திரன் தாராகணங்களுடன் ஆனந்தோத்ஸவம் கொண்டாடிக் கொண்டிருந்ததைத் திறந்திருந்த சாளரத்தின் வழியே பார்த்தான். ராணியும், பணிப் பெண்களும் நித்திரையில் மெய்மறந்திருந்தனர். அரசனுக்குத் தூக்கம் வரவில்லை. தலைவலி இல்லாவிட்டாலும் கை கால்கள் ஓய்ச்சல் அடைந்து மரத்துப் போயிருந்தன. பொழுது புலரும் வரை அந்தக் கனவைப்பற்றியே சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருந்தான். "நான் கண்ட காட்சியை என்னவென்று நினைப்பது! சுகம் துக்கம், வெற்றி தோல்வி, அழுகை ஆனந்தம் என்ற இந்த மாயச் சக்கரங்களின் மேல் வீழ்ச் சுழலில் தான் மன்னாதி மன்னனுகிய நானும் சிக்கியிருக்கிறேன்" என்று தனக்குள் கூறிக் கொண்டான். பொழுது புலர்ந்ததும் சபையோர்களிடம் கனவை எடுத்துச் சொல்லி அதன் பலாபலன்களை ஆராய்ந்துரைக்கும்படி ஆக்ஞாபித்தான். அவர்களில் ஒருவராவது பதில் சொல்லவில்லை. எல்லோரும் தலை குனிந்து மௌனமாகச் சிந்தித்தவண்ணம் இருந்தனர்.

ரகசியம்

ஸ்ரீ வி. என். குமாரஸ்வாமி

சலபாசனம் வெட்டுக்கிளியைப் போல் தோற்ற முடையது. இதைப் பயின்றால் பாரதியார் கேட்டது போல, பந்து போன்ற லேசான உடல் உணர்ச்சி உண்டாகும். உடல் நம்சொற்படி கேட்கும்.

இத்தனை நாள் நம் கைதானே, நம் கால் தானே நம் முதுகுதானே என்று நினைத்திருப்போம். ஆனால் ஆசனங்கள் போட்டுப் பழக ஆரம்பித்தால்தான் அந்த உரிமை உணர்ச்சிக்கு இடம் உண்டு. இல்லாவிட்டால் அவயவம் ஒவ்வொன்றும் தன்னிச்சைப்படி வளர்ந்து நாம் சொன்னபடி கேட்க மாட்டா. குழந்தைக்கு அளவுக்கு மீறிச் சலுகை காட்டி வளர்த்து விட்டால் அது யார் பேச்சையும் கேளாது.

சிலருக்கு, உடலுழைப்புக் குறைவால் சாப்பிடும் ஆகாரத்திலுள்ள கொழுப்புகள், முதலில் வயிற்றில் இடம் தேடிக் கொள்ளும். பிறகு தொடை முதலியவைகளில் மூட்டையாய்ச் சேரும். இவைகளில் நல்ல ரத்த ஓட்டம் இருப்பது கஷ்டம். இவைகளைக் கரைக்க, நல்ல ரத்த ஓட்டம் உண்டாக முறையான தேகப் பயிற்சி தேவை.

பிரபல பயில்வான்கள்கூட தொப்பையும், தொந்தியுமாக இருப்பார்கள். இவர்கள் செய்யும் தேகப் பயிற்சி லேசானதா? இவர்களின் குஸ்தி, குத்துச் சண்டை, பஸ்கி முதலியவைகளுக்குக்கூடத் தளராமல் தொந்தி வளர்ந்திருக்கும். அதிலிருந்து அவர்களுடைய தேகப் பயிற்சியால் தொந்தியைக் கரைக்க முடியவில்லை என்று தீர்மானமாகிறது. அதனைப் படிப்படியாகக் கரைக்கும் மார்க்கம் யோக ஆசனங்களில்தான் உண்டு.

எல்லோருக்கும் அவரவர் கைமுஷ்டி அளவு


செய்தாலோ, ஏன், சாதாரண வேலைகளைச் செய்தாலும்கூட, பெருமூச்சு வாங்கும். இஞ்சினைப் போல புஸ், புஸ் என்று மூச்சு விடுவார்கள். அப்பொழுது அவர்கள் மார்பைத் தொட்டுப் பார்த்தால் வெகு வேகமாய் அடித்துக் கொள்ளும்.

காரணம்: வேலை செய்யும் பாகத்துக்கு, அசையும் பாகத்துக்கு ரத்தம் அதிகம் போகவேண்டும். சாதாரண தேகிகளாய் இருந்தால் பரவாயில்லை. கனமானவர்களுக்கு அதிகப்படியான பாகங்களுக்கும் ரத்தம் அனுப்ப வேண்டும். அதற்காக இருதயம் மிக வேகமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

சாதாரணமாக ஒரு வில் வண்டியை எடுத்துக் கொள்ளுவோம். அதில் ஆறு அந்தர் வரைப் பாரம் ஏற்றலாம். அதற்கு மேற்பட்டு, இடம் இருக்கிறதே என்று ஏழு, எட்டு அந்தர் பாரத்தை ஏற்றினால் என்ன ஆகும். சில நாட்களில் வில் வளைந்து, இருசு முறிந்து வண்டி உபயோகமில்லாமல் போய்விடும்.

அதைப் போல நம் இருதயமும் ஒரு அளவு சுமையைத்தான் சுமக்கும். அதிகமானால் இருசு முறிவதுபோல் சீக்கிரமாக வேலை நிறுத்தம் செய்துவிடும். வண்டிக்கு வில் வளைந்தால் வேறு வில் அடித்துப் போட்டு விடலாம். இருசு முறிந்தாலும் வேறு வாங்கிப் போடலாம். இருதயம் நின்றால் ஈஸ்வர சிருஷ்டிக்கு யாராவது போட்டி போட முடியுமா?

ஆகையால் உடல் பெருக்குமுன், ஊனை வளர்க்கு முன், உயிர் குறையும் முன், வியாதி வருமுன் இந்த ஆசனப்



## 10. சலபாசனம்

பயிற்சி முறையைக் கைக் கொள்ளுங்கள். வளர்ந்த தொந்தியை மேலும் வளர விடாதீர்கள். அதுவே வியாதிகளுக்குப் புகலிடம்.

நம்முடைய உடலில் இரண்டு விதமான உறுப்புக்கள் இருக்கின்றன. கை, கால், கண், வாய், நாக்கு, காது முதலியவைகளை நம் இஷ்டப்படி உபயோகிக்கலாம். ஆனால் நம்முடைய அனுமதியில்லாமலேயே சில உறுப்புகள் வேலை செய்து கொண்டே இருக்கின்றன. இருதயம் வேலை செய்ய அதை நாம் ஏவ வேண்டியதில்லை. நுரை ஈரல், குடல்கள், பித்தப் பை, மற்றும் வயிற்று உறுப்புகள் நம் உத்தரவில்லாமலே அதனதன் வேலையைச் செய்கின்றன. நாம் கையையும், காலையும் ஆட்டி அதற்குப் பயிற்சி கொடுக்கிறோம். வயிற்றுள் புதைந்து கிடக்கும் இவைகளுக்குப் பயிற்சி எப்படி உண்டாகிறது? அதற்கும் கடவுள் சிருஷ்டி செய்திருக்கிறார்.

நாம் மூச்சு விடும்போதும், வாங்கும் போதும், வயிறு பெருக்கவும், சுருங்கவும் செய்கிறதே! எதனால்? காற்று நேராக வயிற்றில் போய் நிறைவதாலா? இல்லை. கழுத்துக்குக் கீழேயும் கால்களுக்கு மேலேயிருக்கும் பாகத்தை இரண்டாகப் பிரித்தால் மேல் பாகம், இருதயமும், நுரை ஈரலும் கொண்ட பெட்டி போல் இருக்கிறது. கீழே இரைப்பை, குடல்கள், பித்தப்பை, மூத்திரப்பை மற்றும் பல இருக்கின்றன. இவைகள் ஒன்றையொன்று அடுத்து, சவ்வுகளினால் பின்னப்பட்டு, முதுகுச் சதையுடனும் வயிற்றுச் சதையுடனும் பிணைந்திருக்கின்றன. மேல் பாகமாகிய இருதயம், நுரை யீரலுக்கும் அடியில் ஒரு தோல் போன்ற சவ்வு வயிற்று உறுப்புகளையும், மேல் பாகத்தையும் தடுத்துப் பிரிக்கிறது. அதற்கு விதானம் என்று பெயர். நாம் மூச்சு வாங்கும்போது நுரை ஈரல் விரிந்து அந்த விதானத்தை அமுக்குகிறது. அப்பொழுது விதானம் கீழே இறங்கி வயிற்று உறுப்புகளை அமுக்குகிறது. மூச்சு விடும் போது நுரை ஈரல், விதானம் மேலே எழும்புகிறது. அப்பொழுது வயிற்று உறுப்புகள் தாராளமாய் விரிந்து சிரம பரிகாரம் செய்து கொள்ளுகின்றன. இம்மாதிரி இயற்கையாய் வயிற்று உறுப்புகளுக்குப் பயிற்சி ஏற்பட்டிருக்கிறது.

பெரும் தொந்தி விழுந்தவர்களுக்கு மேற்படி விதானம் அமுக்கும் பயிற்சி கிட்டாது. ஏனெனில், தொந்தி கனத்து விதானத்தை விட்டுக் கீழே இறங்கி விட்டிருக்கும். அதனால் வயிற்றிலுள்ள உறுப்புகளுக்குப் போதிய பயிற்சி கிட்டாமல் மேலும் மேலும் கொழுப்புகள் சேர இடமுண்டாகி விடுகிறது.

சில மாதர்களுக்கு அதிகப் பிரசவங்களினாலும், பிரசவ காலத்தில் சரியானபடி ஓய்வு எடுத்துக்கொண்டு உடலைக் கவனிக்காததினாலும் வயிறு சரிந்துவிடும். மடிப்பாய்த் தொங்கும். அவர்களுக்கு எந்த மருந்தினாலும், வைத்தியத்தினாலும் சரிந்த வயிற்றைச் சீர்செய்ய முடியாது. விதானத்தை விட்டுக் கீழே இறங்கிய வயிற்று உறுப்புகளுக்குத் திருப்பவும் அமுக்கும் பயிற்சி ஏற்படுத்த முடியாது. அது சலபாசனம் ஒன்றினால்தான் முடியும்.

இந்த ஆசனத்தைப் பழகும் முறை:— மிருதுவான விரிப்பில் குப்புறப் படுத்து, முகவாய்க்கட்டையைத் தரையில் ஒட்ட வைத்து, இரண்டு கால்களையும் நீட்டிச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். பக்கங்களில் இரண்டு உள்ளங் கைகளையும் மேல் பார்க்க நீட்டி வைத்துக்கொண்டு முஷ்டியை மடக்கிக்கொள்ளவும். இப்பொழுது மூச்சைப் பிடித்து, இரண்டு கைகளின் முஷ்டியைப் பலங்கொண்ட மட்டும் தரையில் ஊன்றி, இரண்டு கால்களையும் சேர்த்தாற்போல் இடுப்புவரை விறைப்பாய்த்

தூக்கிப் படத்திலுள்ள நிலைமைக்கு வரவும். இப்படி இரண்டு, மூன்று விநாடி இருந்து பிறகு மூச்சை விட்டுக்கொண்டே, கால்களை இறக்கிக் களைப்பாறவும்.

இந்த ஆசனத்தை மூன்றிலிருந்து ஆறு தடவை செய்யலாம். இது பார்க்கச் சுலபமாகத் தோன்றினாலும், செய்து பார்த்தால் இதன் கஷ்டம் தெரியும். சிலருக்கு இரண்டு கால்களும் சேர்ந்தாற் போல் தூக்க வராது. முட்டிவரை மடக்குவார்கள். தொடையும் சேர்ந்து மேலே எழும்பாது. அப்படி எழும்பினாலும் சப்பைக் கால் போல வளைந்து அகன்றுவிடும். சிலருக்குக் கால் எழும்பும் போது தலையும் மேலே எழும்பும். இவைகளையெல்லாம் சிறுகச் சிறுகத் திருத்திச் சரியான நிலையை மனதில் இருத்தி, அதன்படி செய்ய முயற்சி செய்யவேண்டும். சரியாய் வந்தால்தான் பலன் என்பது இடையாது. ஒவ்வொரு சிறு முயற்சிக்கும் பலன் உண்டு. கனத்தவர்களும், தொப்பை விழுந்தவர்களும் இதைச் செய்தால் நாளடைவில் தொந்தி கரையும்.

சலபாசனத்தினால் நமக்கு ஏற்படும் பலன்கள் :—வயிற்று உறுப்புக்களுக்கு இறுக்கம் கிடைக்கிறது. பயிற்சி ஏற்படுகிறது. பெரும் தொப்பை கரையும். கால்கள், தொடைகள் பலம் பெறும். இருதயம் பலப்படும். முதுகெலும்பின் அடி பாகத்திற்குப் பயிற்சி ஏற்படும்.

வழக்கமாக ஆசனம் செய்துவரும் சகோதரிகள் கர்ப்பங்கொண்ட இரண்டு மாதங்கள் வரையில் செய்யலாம். கர்ப்ப ஸ்திரீகள் புதிதாக ஆரம்பிக்கக் கூடாது. இருதயம் பலவீனமானவர்கள் இந்த ஆசனம் செய்யக் கூடாது. அதற்காகச் சொல்லும் வேறு ஆசனங்களைச் செய்து பழகிக்கொண்டு, பிறகு இதைச் செய்யலாம். (தொடரும்)

# அக்கப்போர்

"பாகிஸ்தானில் என்ன நேர்ந்தாலும் சரி, இந்தியாவில் ஒரு முஸ்லிம்கூடக் கஷ்டப்பட அனுமதியோம்" என்று பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் கூறினாராம்.

இவரல்லவா புருஷோத்தமர் !

★

"என்னுடைய வாழ்க்கையின் மீதி நாட்களை புத்தமதப் பிரசாரத்திலேயே செலவிடுவேன்" என்று சட்ட மந்திரி அம்பேத்கார் பம்பாயில் ஒரு கூட்டத்தில் கூறினர். —செய்தி.

அம்பேத்கார் இந்தியாவிலேயே பெரிய புத்தக நிலையத்தை வைத்திருப்பவர். அவர் புத்த மதத்தைப் பரப்புவதைவிட எழுத்து அறிவு இல்லாதவர்களிடையே சென்று புத்தக மதத்தைப் பரப்ப முயற்சி எடுத்துக்கொண்டாரானால் எவ்வளவோ பயனுடையதாயிருக்கும்.

★

"1952 க்குள் லிபியா தேசம் சுதந்திரமடையும்." —செய்தி.

லிபியாவின் லிபி எப்படி இருக்கிறதோ, பார்க்கலாம் !

★

"பரிசுக் கோப்பைகளைத் திருடி அகப்பட்டுக் கொண்டவருக்கு மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது."

—மதுரைச் செய்தி.

திருடப்பட்ட பரிசுக் கோப்பைகளில் ஓட்டப் பந்தயத்துக்கான கோப்பையையும் சேர்த்து அவர் திருடவில்லை என்பது தெரிகிறது !

★

"38-வது அட்சரேகை எல்லையைக் கடந்து வட கொரியாவுக்குள் அமெரிக்கப் படைகள் புகுந்து விட்டன." —கொரியாச் செய்தி.

சமாதானப் பிரியர்களுக்கு இது எல்லை கடந்த கவலையை உண்டாக்கி இருக்கிறது.

வார்த்தைகளுக்குள் ஒற்றுமை கண்டுபிடித்து (Pun) ஹாஸ்யம் செய்வதில் வல்லவர் ஒருவரை அவர் நண்பர் ஒருவர் சந்தித்து "நீர் 'பன்' செய்வதில் விற்பன்னர், நான் உங்கள் அன்பன்." என்று அந்த 'பன்' என்ற பதத்தையே பன்னிப் பின்னி விட்டாராம் !

★

"பாகிஸ்தான் மந்திரி சபையிலிருந்த ஒரே ஹிந்துவான ஸ்ரீ ஜே. என். மண்டல் ராஜிநாமா செய்து விட்டார்." —ஒரு செய்தி.

ஸ்ரீ மண்டல் இனி கையில் கமண்டலத்துடன் கிளம்பி அரசியல் துறவு பூணுவார் என எதிர்க்கலாமா ?

★

காந்திஜியால்தான் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது என்பதை இலங்கை சர்க்கார் அறிய வேண்டுமென்று யாழ்ப்பாணம் மேயர் ஸ்ரீ பொன்னம்பலம் கூறினாராம்.

ஸ்ரீ பொன்னம்பலம் பேச்சு அம்பலம் ஏறுமா !

★

தான் கைது செய்யப்பட்டதன் காரணத்தைத் தெரிவிக்கும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் திருப்பதிக் கைதி ஒருவர் தீர்மானித்திருக்கிறாராம்.

காரணத்தைக் காட்டி அவரைத் திருப்தி செய்வதுதானே !

★

"ட்ருமனுக்கும், ஸ்டாலினுக்கும் வேதாந்தம் தெரிந்திருந்தால் அவர்கள் அணுகுண்டை உற்பத்தி செய்திருக்க மாட்டார்கள்."

—சுவாமி சிவானந்தர்.

"உலகம் அநித்தியம்" என்ற வேதாந்த ஸாரமான கொள்கையை நிலை நாட்டத்தான் அவர்கள் அணுகுண்டு உற்பத்தியை அதிகரித்திருப்பதாகச் சமாதானம் சொல்லலாம்.

# பொழுது போக்கு

"தும்பி"

காமன்வெல்த் நாடுகளிலிருந்து சென்ற வாரம் இந்தியாவுக்கு ஒரு கிரிக்கெட் கோஷ்டி வந்திருக்கிறது. ஒவ்வொரு தடவையும் ஒரு கிரிக்கெட் கோஷ்டி ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப் புறப்படும் போதெல்லாம் இரு தேசங்களுக்கிடையே நல்லெண்ணத்தை அதிகமாகப் பரப்புவதற்குத் தான் இந்தக் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப் படுகின்றன என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் அரசியல் தலைவர்களும் தேசத் தலைவர்களும் சாதிக்காதவைகளைக் கூட இந்தக் கிரிக்கெட் விளையாட்டுகள் சாதித்து விடும் என்றெல்லாம் என் காதில் விழும்போது எனக்கு மிகவும் வருத்தமாய்த் தானிருக்கிறது.

அரசியலில் ஈடுபடாத வெறும் கிரிக்கெட் மட்டும் ஆடத் தெரிந்தவர்களுக்கே தேசங்களிடையே நல்லெண்ணத்தை உண்டாக்கவும் அதை அளவில்லாமல் அதிகமாக்கவும் சக்தியிருந்தால், அரசியலிலேயே மூழ்கித் திளைத்தவர்களுக்கும் தேசத்தின் தலைமையைத் தாங்குபவர்களுக்கும் இந்தக் கிரிக்கெட் விளையாட்டு மட்டும் ஆடத் தெரிந்தால் உலகம் முழுதும் உண்டாகும் நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ள ஆளில்லாமல் தவிப்போம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக உலகமெங்கும் தேசத் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கிரிக்கெட் ஆட்டங்களில் தலைமை வகிக்கவும் அவைகளை (கும்பலில் இடிபடாமல் டிக்கட்டும் வாங்காமல் குடும்பத்தோடு) பார்க்கவும் தான் தெரியுமே தவிர, கிரிக்கெட் மட்டையைப் பிடித்து ஆடத்தெரியாமலிருக்கிறது.

இந்த நிலைமை மாறித் தேசத் தலைவர்களும் அரசியல் வாதிகளும் எல்லோரும் கட்டாயம் கிரிக்கெட் ஆடத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு வந்தால் எங்கும் வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை மலியும்.

இதையொட்டி, பண்டித நேருவை 'காப்டனா'கக் கொண்ட இந்தியக் கோஷ்டிக்கும், ஜனாப் லியாகத் அலிகானை 'காப்டனா'கக் கொண்ட பாகிஸ்தான் கோஷ்டிக்கும் காஷ்மீர் பள்ளத் தாக்கில் ஒரு 'டெஸ்ட் மாட்ச்' நடந்தால் இரு நாடுகளுக்குமிடையே யிருக்கும் வித்தியாச மனப்பான்மை யொழிந்து சௌஜன்ய நிலைமை ஏற்படத் தொடங்கும்.

ஆனால் இருபத்தைந்து பேர்களைக் கொண்ட நம் மத்திய மந்திரி சபையில் இந்த இந்தியா பாகிஸ்தான் (மந்திரி சபை) கிரிக்கெட் பந்தயத்துக்கு யாரைத் தேர்ந்தெடுப்பதென்ற விஷயத்தைப் பிரதம மந்திரி பண்டித நேருவுக்கே விட்டு விடுவோம். 'அம்பயர்'களாக யாரைப் பொறுக்குவதென்பதையும் ஐ. நா. சபைக்கு விட்டுவிடுவோம்.

இன்னும் ஒற்றுமையில்லாத குடும்பங்களிடையே கூட இந்த ஆட்டத்தை நடத்திப் பார்க்கலாம். உதாரணமாக, பிள்ளை வீட்டாருக்கும் பெண் வீட்டாருக்கும் கல்யாண சத்திரத்தின் முன்பே புரோகிதர்களை 'அம்பயர்'களாக வைத்துக் கொண்டு ஒரு கிரிக்கெட் ஆட்டம் போடும் போது கல்யாணப் பெண் குறி பார்த்து (வரப்போகும்) தன் மாமனார் தலையை நோக்கிப் பந்தை 'போல்' செய்தவுடனே எல்லா வித்தியாசங்களும் நீங்கி இருதரப்பாருக்குமிடையே சௌஜன்யம் அதிகரிக்காவிடில் என்னைக் கேளுங்கள் !

* * *

கல்யாணம் என்றவுடனேயே நம் சுகாதார மந்திரி(ணி) பூ[illegible]தி ராஜகுமாரி அமிர்த கௌரி அவர்கள் சில நாட்களுக்கு முன்பு கூறிய யோசனைகள் ஞாபகம் வருகிறது. கல்லூரி மாணவர்களிடம் அவர் பேசும் போது அவர்கள் தாங்களே சம்பாதிக்கத் தொடங்கிய பிறகுதான் மணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், அப்படி மணம் செய்து கொள்ளப் போகும் போது பெண்ணை இருபத்திரண்டு வயதுக்கு மேற்பட்டவளாகப் பார்த்துக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றும் அவர் சொன்னார். கல்லூரி மாணவிகளுக்கும் அருமையான யோசனைகளைக் கூறியிருக்கிறார்.

ஆனால் மாணவர்களுக்கு அவர் கூறிய யோசனையைக் கேட்டதும் தான் எனக்குக் கலக்கம் உண்டாகிறது. அந்த யோசனையில் புருஷ வர்க்கத்தையே ஆழ அமுக்கும் ஒரு நயமிருப்பது ஊன்றிக் கவனித்தால் தெரியும். அவர் மதிப்பிற்குரிய மந்திரியாயிருந்தாலும் ஒரு ஸ்திரீ தானென்பது என் கலக்கத்தையும் சந்தேகத்தையும் மேலும் ஊர்ஜிதம் செய்கிறது. சற்றுக் கவனியுங்கள் :—

சம்பாதிக்கத் தொடங்குமுன்பு கல்யாணம் செய்துகொள்ள வேண்டாமாம். ஆனால் சம்பாதிக்கத் தொடங்கிய உடனேயே மணம் செய்து கொள்ளலாம். இதன் மறைமுக அர்த்தம், "சம்பாதிக்கும் பணத்தைத் தடிப் பிரம்மச்சாரிகளாகிய நீங்கள் கண்டபடி செலவழித்துக்கொண்டு காலத்தைக் கழிக்காதீர்கள்; நீங்கள் சம்பாதிக்கத் தொடங்கியவுடனேயே இருபத்திரண்டு வயதிற்கு மேற்பட்டவளாக (அதற்காக ஐம்பது வயதிற்குள் என்று அர்த்தமில்லை!) ஒரு சிறு கல்யாணத்தை மட்டும் பண்ணிக்கொண்டால் போதும். அப்போது வரப்போகிறவள் மாதம் முதல் தேதியன்று உங்கள் காதைத் திருகிக் கை (பை) யிலுள்ள பணத்தை எடுத்துக்கொண்டு விடுவாள்!" என்பதைத் தவிர வேறு என்னவாயிருக்கும்?

"இருபத்திரண்டு வயதுக்கு மேற்பட்டவளாகப் பார்த்துப் பொறுக்குங்கள்" என்பதன் அர்த்தம், "அப்போதுதான் வரப்போகிறவளுக்கு உலக அனுபவம் நிறைய இருக்கும் உங்களை அடக்க" என்றுதான்.

ஆகையால், இளம்மாணவர்களே! உங்களுடைய இனிய மனதில் இதுமாதிரி ஆபத்தான யோசனைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள்! குடும்பிகளாகிய நான் (அல்லது நாங்கள்) இப்போது படும் அவஸ்தைகளைக் கண்டாவது விழியின்! அல்லது ஆயுள் வரைக்கும் ஓரேயடியாக அல்லல் படுமின்!

* * *

நல்ல சங்கீதம் என்ற அதிசயத்தை ரேடியோவில் கேட்பதைவிட எனக்கு வானிலை அறிக்கைகள் என்ற அம்சம் தான் அதிகமாகப் பிடித்திருக்கிறது. இந்த அறிக்கைகளின் சாரத்தை என்னால், சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் போனாலும், அபஸ்வரத்தில் ஆறு மணி நேரம் தவிப்பதை விட ஐந்து நிமிஷம் இதைக்கேட்பதே எனக்குத் தனி இன்பமாகவிருக்கிறது.

"காலை மாலை கொங்கணத்திலிருந்து கொரமாண்டல் வரையில் விடாமல் மழையடிக்கும்" என்ற செய்தியை ரேடியோவில் கேட்டதும் எனக்குப் பல சந்தேகங்கள் தோன்றி விடுகின்றன.

முதலில், கொங்கணம் என்பதும் கொரமாண்டல் என்பதும் உலகத்தின் எந்தப் பாகத்தில் இருக்கிறது என்ற சந்தேகம். பிறகு என் வீடும் ஆபீஸும் கொங்கணத்திற்கும் கொரமாண்டலுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறதா அல்லது அவைகளின் எல்லைக்கு வெளியிலிருக்கிறதா என்ற சந்தேகம். கடைசியாக, இந்த அறிக்கையை நம்பி ஆபீஸுக்குக் குடையை யெடுத்துக் கொண்டு போகலாமா, வேண்டாமா என்ற சந்தேகம்.

இதனால் வானிலை அறிக்கை விடுபவர்கள் செய்தியை முடிக்கும் போது, "அறிக்கையின் படி குடையெடுத்துக் கொண்டு போனால் மழை வராது" என்றோ, அல்லது "விடாது குடையெடுத்துக் கொண்டு போனாலும் அடாது மழை வரத்தான் வரும்" என்றோ தெளிவாகவும் நிச்சயமாகவும் சொன்னால் என் போன்ற மதியுள்ளவர்களுக்கு எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?

# ‘அலாஸ்கா’ சந்திப்பு

[உலக நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு ஸ்டாலின், ட்ருமனை சந்திக்க விரும்புவதாகவும், இந்தச் சந்திப்பை அலாஸ்காவில் வைத்துக் கொள்ள ஸ்டாலின் யோசனை கூறியிருப்பதாகவும் ஒரு செய்தி வந்திருக்கிறது. நிஜமாகவே இந்தச் சந்திப்பு ஏற்பட்டால் பின்வரும் சம்பவங்கள் நடக்குமென்று நமது நிருபர் கூறுகிறார்.
ஆசிரியர்.]

ட்ருமன் :—ஹலோ! மிஸ்டர் ஸ்டாலின்! வரணும்! வரணும்!

ஸ்டாலின் (ஒரு பர்லாங்குக்கு அப்பால் நின்றுகொண்டு, கையில் தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பிடித்த வண்ணம்) :— மிஸ்டர் ட்ருமன்! வந்தேன்! வந்தேன்!

ட்ருமன் :—உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. வீட்டில் எல்லோரும் சௌக்கியந்தானே?

ஸ்டாலின் :-ஆமாம்; என்ன கேட்டீர்கள்?

ட்ருமன் :—நாம் இவ்வளவு தூரத்தில் நின்று பேசுவதைவிடக் கொஞ்சம் கிட்ட வந்து பேசக் கூடாதா?

ஸ்டாலின் :— மாஸ்கோவிலிருந்து நான் இவ்வளவு தூரம் வந்திருக்கும்போது நீங்கள்தான் கொஞ்சம் அருகில் வந்து பேசுங்களேன்.

ட்ருமன் :—ஆஹா! (ட்ருமன் ஸ்டாலினுக்கு இருபது அடி தூரத்தில் நின்று

கொண்டிருக்கிறார்.) மிஸ்டர் ஸ்டாலின்! நாம் அந்தக் கட்டிடத்திற்குள் போய் சம்பாஷணை நடத்தலாமா? கட்டிடத்தைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம். உமது ரஷ்யப் போலீஸார் அதைச் சோதனை போட்டுப் பார்த்து விட்டார்கள்.

ஸ்டாலின் :—முதலில் நீங்கள் போங்கள்! நான் உங்கள் பின்னால் வருகிறேன்.

[ஸ்டாலின் கொஞ்சம் பின்னால் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு ஜாக்கிரதையாகச் செல்லுகிறார். இருவரும் உள்ளேபோய் எதிரும் புதிருமாக உட்கார்ந்துகொள்கிறார்கள்.]

ட்ருமன் :—மிஸ்டர் ஸ்டாலின்! ஒரு சந்தேகம்! நீங்கள் நிஜ ஸ்டாலின்தானா? அல்லது அவரது 'டபிளா?'

ஸ்டாலின் :—எனக்கும் ஒரு சந்தேகம்! நீங்கள் நிஜ ட்ருமன்தானா? அல்லது ட்ருமனைப்போல 'ஹாலிவுட்'டில் மேக்கப் செய்துகொண்டு வந்திருக்கிறீர்களா?

ட்ருமன் :—நான் நிஜ ட்ருமனே; இது சத்தியம்.

ஸ்டாலின் :—நான் நிஜ ஸ்டாலினே; இது சத்தியம்.

ட்ருமன்:—அப்படியானால் விஷயத்திற்கு வருவோம். நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம்?

ஸ்டாலின் :—அதுதான் தெரியவில்லை.

ட்ருமன் :—நாம் எங்கேயிருக்கிறோம்?

ஸ்டாலின் :—அதுவும் எனக்குப் புரியவில்லை!

ட்ருமன் :—நீர் எங்கேயிருக்கிறீர்? உம்முடைய உருவமும் தெளிவாகத் தெரியவில்லையே!

ஸ்டாலின் :—என்ன ஆச்சரியம்! எனக்கும் அப்படியேதானிருக்கிறது!

ட்ருமன்-ஸ்டாலின் (இருவரும் ஏக காலத்தில்) :—நம்மிருவருக்கும் மத்தியில் ஏதோ ஒரு திரை இருக்கிற மாதிரியல்லவா இருக்கிறது?

ட்ருமன் :—அதனால்தான் உம்மை நான் சரியாகப் பார்க்க முடியவில்லை.

ஸ்டாலின் :—வாஸ்தவம். இந்தத் திரைதான் என் பார்வையையும் மறைக்கிறது!

ட்ருமன்:—இந்தத் திரையை விலக்கினால்தானே சம்பாஷணையை நடத்தலாம்.

ஸ்டாலின்:—நாம் இரண்டுபேரும் சேர்ந்தே இந்தத் திரையைத் தள்ளலாமா?

ட்ருமன் :—ஆஹா! அப்படியே.

[இருவரும் ஒருவரையொருவர் நெருங்கிக் கையைத் தூக்குகிறார்கள். "ஐயோ" என்று சத்தம் போட்டுக் கொண்டு கையைப் பின்னால் இழுத்துக் கொள்கிறார்கள்.]

ட்ருமன் :—உம் கையில் அணு குண்டு இருக்கிறதோ?

ஸ்டாலின் :—உம் கையில் ஹைட்ரஜன் குண்டில்லையே?

ட்ருமன் :—இல்லை.

ஸ்டாலின் :— அப்படியானால் கையைக் கொடுங்கள்.

ட்ருமன் :—ஆனால் திரையருகில் போவதற்கே எனக்குப் பயமாயிருக்கிறது.

ஸ்டாலின் :—எனக்கும்தான். இந்த இடத்தை விட்டு இந்தப் பயங்கரத் திரையில்லாத வேறொரு இடத்துக்குப் போய் விடலாமா? இப்படி நம்மை மறைக்கும் இந்தப் பாழும் திரை என்னவோ தெரியவில்லையே?

[அப்பொழுது "ஹ ஹ ஹா!" என்ற சிரிப்புச் சத்தம் கேட்கிறது. ஸ்டாலினும் ட்ருமனும் திடுக்கிட்டு நிற்கிறார்கள்.]

திரை :—என்னை யார் என்று உங்களுக்கு இன்னும் தெரியவில்லையா? நான்தான் பயத் திரை. இந்த இடமில்லை, நீங்கள் எந்த இடத்திற்குப் போனாலும் உங்களைத் தொடர்ந்து வருவேன். நான் உங்கள் நடுவிலுள்ள வரை நீங்கள் ஒருவரை ஒருவர் தெளிவாகப் பார்க்க முடியாது என்பது மட்டுமல்ல; தெளிவாகப் புரிந்து கொள்ளவும் முடியாது, தெளிவாகச் சிந்திக்கவும் முடியாது. என்னை விலக்கவேண்டுமானால் சுலபமான வழி இருக்கிறது.

ஸ்டாலின்-ட்ருமன் (இருவரும் பரபரப்புடன்) :—என்ன வழி?

திரை:—இருவரும் மனப்பூர்வமாக ஒன்றுபட்ட மனத்துடன் கை கோத்துக் கொண்டு என்னைத் தள்ள வேண்டும்.

ட்ருமன் :—நீ சொல்லுவது சரிதான். ஆனால் இப்பொழுது குளிர் நடுக்குகிறது. கைகால் வெல வெலக்கிறது. இன்னொரு சமயம் இந்த வேலையை வைத்துக் கொள்கிறோம்.

ஸ்டாலின் :—ஆமாம். மாஸ்கோவில்கூட இவ்வளவு குளிரில்லை. வாருங்கள், போகலாம்.

[இருவரும் கோட்டை இழுத்து மூடிக் கொண்டு போகிறார்கள்.]

திரை (உரக்கச் சிரித்துவிட்டு) :— என் பேச்சு இவர்கள் காதில் ஏறுமா? குளிருகிறதாம் குளிர்! பயத்தினால் உடம்பு நடுங்கும்போது ஏன் இந்தப் பொய்? பயத் திரையை விலக்குவதற்குக்கூடப் பயம்!

# ராமகிருஷ்ண உபநிஷதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

## 31. கமலியின் கண்ணாடி

"அம்மா, எனக்கு நீ கொடுத்த கண்ணாடியில் முகம் சரியாகத் தெரியவில்லையே!" என்கிறாள் கமலி.

"கண்ணாடியை நன்றாகத் துடைத்து வைத்துக் கொள்" என்கிறாள் கமலியின் தாயார். "அதன்மேல் எண்ணெயும் தூசியும் படிந்திருந்தால் சரியாகத் தெரியாது. துப்புரவாக வைத்துக் கொண்டால் நன்றாகத் தெரியும், பார்!" என்று சொல்லித் துணி எடுத்துக் கண்ணாடியைச் சுத்தமாகத் துடைத்துக் குழந்தைக்குத் தந்தாள்.

கமலி சிரித்துக் கொண்டு "ஆம், ஆம்!" என்று தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள்.

தியானத்தில் கடவுளைக் காணும் ரகசியமும் இதுவே. உள்ளத்தைத் துப்புரவாக வைத்துக் கொண்டால் அதில் ஆண்டவன் முகத்தைக் காணலாம். ஆசையும் அழுக்கும் படிந்திருக்கும் உள்ளத்தில் அந்த திவ்விய சொரூபம் காணப்படாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியை நேரில் கண்டு மகிழ்ந்து ஆனந்தத்தில் மூழ்கினார் என்றால் அதன் காரணம் இதுவே. அவர் உள்ளத்தில் அழுக்கே இருக்கவில்லை. இதையே அவர் பிறருக்கும் உபதேசித்தது. அந்த உபதேசத்தை உணர்ந்து பயன் படுத்திக் கொள்வோமாக.

குளத்து ஜலத்தில், கரையிலுள்ள மரமும் செடியும் வானமும் வெளிச்சமும் நன்றாகப் பிரதிபலிக்கிறது. காற்றடித்து ஜலம் கலங்கினால் மறைந்து போகிறது. நாம் கடவுளைக் காண்பதும் அவ்வாறே. உள்ளத்தைப் பாசி மூடாமலும் கோபம் துவேஷம் முதலிய காற்று வீசிக் கலங்கிப் போகாமலும் வைத்துக் கொண்டால் அதில் ஆண்டவன் ஒளியைக் காணலாம். கோபமும் ஆசையும் துவேஷமும் பற்றுகளும் பாபங்களும் உள்ளத்தைப் பற்றிக் கொண்டு மூடியும் கலக்கியும் வந்தால் ஒளி மறைந்து போகிறது.



சிறு விஷயங்களில் ஆசைகளைத் தீர்த்துக் கொண்டு, பேராசைகளை விவேகத்தைக் கொண்டு ஒழித்துக் கொள்ள வேண்டும். அறிவை இதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடைந்த அறிவையெல்லாம் வாதிப்பதிலும் அகம்பாவத்திலும் செலுத்தினால் பயனில்லை.


ஆசைகளையும் பற்றுகளையும் நீக்கிக் கொள்ளுவதில் அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் உள்ளம் நிர்மலமான ஜலம்போல் ஒளிவீசும், ஆண்டவனுடைய முகம் பிரதிபலிக்கும்.

உலக வாழ்க்கை ஒரு பெரும் பாதாளக்கிணறு போலாகும். குழந்தை அதன் பக்கத்தில் நின்று கொண்டு எட்டி எட்டிப் பார்த்தால் என்ன சொல்லுவோம்? "அங்கே நிற்காதே, எட்டிப் பார்க்காதே, தூர நில்" என்போம். அவ்வாறேயாகும் வாழ்க்கையின் அபாயங்கள். கிணற்றில் விழுந்து விட்டால் மீள்வது துர்லபம்.

லோபமும் கோபமும் விடமாட்டேன் என்கின்றனவே, இதற்கு என்ன செய்ய?

"ஆசையும் கவலையும் கோபமும் சுபாவத்தில் நிலைத்திருக்கின்றன. அவற்றைப் பிடுங்கி எறிய முடியவில்லையானால் சரியான வழியில் அவற்றைத் திருப்பி அமைத்துக் கொள்ள வேண்டும். உன் காதல் சுபாவத்தைக் கடவுள் மேல் செலுத்து. உன் ஆசையையும் சக்தியையும் ஆண்டவனை அடையும் முயற்சியில்

செலவழிக்கப் பார். உன் கோபத்தைக் கூடக் கடவுள்மேல் செலுத்து! ஏன் எனக்குத் தரிசனம் தரமாட்டாய் என்று அவன்மேல் கோபித்துக் கொள். மக்கள் பேரில் உண்டாகும் ஆத்திரத்தை ஆண்டவன் பேரில் செலுத்தித் தீர்த்துக் கொள்'' என்றார் பரமஹம்ஸர். இது சுபாவத்தை வெல்லும் வழி.



பயனற்ற எண்ணங்களே காடு. அதில் மேய விட்டால் உள்ளம் ஒரு காட்டு யானையாகப் போகும், அடக்கி ஆள முடியாமற் போகும். ஏமாந்து போகாதேயுங்கள். விவேகமே யானையை அடக்கும் அங்குசம்.

பெருங் காட்டு மிருகங்களையெல்லாம் சாதுவாகச் செய்து விடுகிறோமல்லவா? யானையை அடக்கி, சொன்னபடி செய்யப் பண்ணுகிறோம். நம்முடைய மனமும் அடக்கி ஆளக்கூடிய ஒரு மிருகம். முயற்சி வீண்போகாது. உள்ளத்தை அடக்காமல் கண்டபடி காட்டில் திரிந்து மேய விடாதேயுங்கள்.

பற்றுகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொண்டே போக வேண்டும். அவை வளர்ந்தால் விவேகம் வளராது. பூண்டு வளர இடம் கொடுத்து விட்டால் பயிருக்குச் சேதம்; களை பிடுங்கினால் பயிர் நன்றாக வளரும். இல்லாவிட்டால் பயிர் அழிந்து வயல் காடாகிப் போகும். அப்படியே விவேகமும். ஆசைகளையும் பற்றுகளையும் குறைத்துக் கொள்ளாமற் போனால் விவேகம் வளராது.

# உஷாதேவி

ரா. வெங்கடேசுவரன்

அவரும் பென்ஷன் வாங்கிக் கொண்டார். எனக்கும் நிம்மதி ஏற்பட்டது. பாரதநாடு முழுவதையும் சுற்றிப் பார்க்க எனக்கு முன்பே ஆசை. அது நிறைவேறும் சமயம் வந்து விட்டது என்று எண்ணினேன். பூரி, பிரயாகை, காசி, ஹரித்வார், நாஸிக், பந்தர்பூர் இவற்றையெல்லாம் பார்க்க ஆவல் கொண்டு கிளம்பினேன். நாஸிக் வந்தபோதுதான் என் மருமான் பூனாவிலிருப்பது நினைவுக்கு வந்தது. சிவாஜி போன்ற ஒரு ஒப்பற்ற வீரன் இருந்து ஆட்சி செய்த நகரத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் பூனாவுக்கு வந்தேன்.

என் மருமான் பூனாவில் பத்து வருஷங்களாக இருந்து வருகிறான். அப்படியிருந்தும் வீட்டில் ஒருவருக்கும் நன்றாக மராட்டி வராது. அதோடு, பார்க்க வேண்டிய இடங்களைக் கூட ஒருவரும் நன்றாகப் பார்த்தது கிடையாதாம். அப்படியிருக்க அவர்களைத் துணை கொண்டு நான் எப்படி நகரத்தைப் பார்ப்பது! சரி. இவனை நம்பினால் நடக்காது, உள்ளூர்க்காரர்கள் யாருடைய உதவியையாவது கொண்டுதான் நாம் ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

நல்ல வேளையாக, அடுத்த வீட்டிலிருந்தவர்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். அதிலும் அவர்கள் வீட்டுப் பெண் உஷாவைப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்துப் போய் விட்டது. எனக்கு அவள் வெகு சீக்கிரத்தில் உத்தமத் தோழியாகி விட்டாள். முதலில் நாங்கள் இருவரும் ஆங்கிலத்தில்தான் அறிமுகமானோம். பிறகு ஹிந்தியிலே பேச ஆரம்பித்தோம். அவளுக்கும் ஹிந்தி சுமாராகத்தான் வரும் என்று தெரிந்தவுடன் எனக்கும் அந்த மொழியிலே பேசுவதற்குத் தைரியம் வந்து விட்டது! கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு அவள் தன் தாய் மொழியாகிய மராட்டியையும் கற்றுக் கொடுத்தாள். பதிலுக்கு அவளுக்கு நான் தமிழ் கற்றுக் கொடுத்தேன். அவள் 'மணி என்ன?' 'சாப்பிட்டாச்சா?' என்று கேட்பது வேடிக்கையாக இருக்கும். நானும் வந்து பதினைந்து நாட்களுக்கெல்லாம் வாசலில் வரும் பால்காரன், எண்ணெய்க்காரன் இவர்களுடன் மராட்டியில் பேச ஆரம்பித்து விட்டேன். என் மருமானுக்கும் மற்றவர்களுக்கும் அதைக் கண்டு ஒரே ஆச்சரியம்!

ஒருநாள் நான் என் மருமானிடம், "ஆஜ் 'பர்பத் மந்திர்' ஜாயச்சே" என்றேன்.

"இதோ பார், உன் மராட்டியெல்லாம் உன் உஷா காணிட்கரிடமே வைத்துக் கொள்" என்றான் என் மருமான்.

"இந்த மாதிரி இருந்து இருந்துதானே உனக்கு இந்த பாஷை வரவில்லை. நாலு பேரோடு நெருங்கிப் பழகினால்தானே வரும்! சரி, உனக்காகத் தமிழிலேயே சொல்லுகிறேன். நான் இன்று 'பர்பத் மந்திரு'க்குப் போகப் போகிறேன்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன். வாசலில் உஷா எனக்காகத் தயாராகக் காத்திருந்தாள்.

இந்தச் சமயத்தில் உஷா காணிட்கரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி வைக்கிறேன். அவளுக்கு வயது பதினேழு இருக்கலாம். அவளுக்குத் தாய் இல்லை. சிறுவயதிலேயே இறந்து விட்டாளாம். அவளுடைய தந்தை காணிட்கர் ஒரு டாக்டர். சுமாரான வரும்படி. அவளிடம் அவர் உயிரையே வைத்திருந்தார். உஷா நல்ல அழகி. அவள் கோணல் வகிடு எடுத்துத்தான் தலை பின்னிக் கொள்ளுவாள். அவளுக்குக் கோணல் வகிடு எவ்வளவு பொருத்தமாயிருந்தது! அவளை முன்னாலிருந்து அழகு பார்ப்பதா, பின்னாலிருந்து அழகு பார்ப்பதா என்று எனக்குச் சில சமயம் தோன்றும். அந்தக் கொடி போன்ற தேகத்தில் அவள் கட்டும் சேலையும் அவள் நடக்கும்போது பின்னால் நாசூக்காக வீசி ஆடும் அந்தத் தலைப் பின்னலும், இன்னும்கூட என் கண்ணெதிரிலேயே நிற்கின்றன. ஆபரணங்கள் அதிகம் அணியாமல் ஒருத்தி அழகாகக் காட்சியளிக்க முடியும் என்றால், அவளைத்தான் உதாரணமாகச் சொல்ல வேண்டும். 'இந்த மோஹினியை மணக்கப் போகிறவன் எந்தப் பாக்கியசாலியோ?' என்று அடிக்கடி நான் நினைத்துக் கொள்வேன்.

ஆனால் அந்த அழகி உஷா காணிட்கருக்கும் ஒரு குறை இருக்கத்தான் செய்தது. அவளுடைய மோவாய்க்கட்டையையும் கழுத்தையும் பார்ப்பவர்கள், கொஞ்சமாவது திடுக்கிடாமல் இருக்க முடியாது. அவளுடைய அழகுக்கு இந்த மாதிரியும் திருஷ்டி பரிகாரம் ஏற்பட வேண்டுமா என்று எண்ணத் தோன்றும். கழுத்துப் பக்கம் வெந்து போனதுபோல் இருந்தது. ஒரு வேளை பிரும்ம தேவனே இந்தப் பூர்ண சிருஷ்டியிலும் குறை வைக்க வேண்டுமென்று எண்ணித்தான் அப்படிச் செய்தானோ, என்னமோ?

தன்னுடைய அழகையே பங்கப்படுத்தும் இந்தக் குறையைப் பற்றி உஷா கானிட்கர் சிறிதும் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. தன்னைப் படைத்த இறைவன் மேல் அவள் கொஞ்சமும் ஆயாசப் படவும் இல்லை.

நானும் உஷா கானிட்கரும் 'பர்பத் மந்தி'ருக்குச் சென்றோம். வழியிலிருக்கும் முக்கியமான இடங்களையெல்லாம் அவள் எனக்கு மராட்டியிலும், ஹிந்தியிலும் முடிந்தபோது ஆங்கிலத்திலும் விளக்கி வந்தாள். உண்மையில் அது 'பார்வதி மலை' இல்லையாம். அதன் பெயர் 'பர்பத் மந்திர்'தானாம். தமிழர்கள்தான் அதைப் பார்வதி மந்திராக்கி விட்டார்களாம்! தேவ தேவேசுரர், விட்டல், மகாவிஷ்ணு சந்நிதிக்கெல்லாம் போனோம். ஆனால் கார்த்திகேய சந்நிதிக்குப் போகக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். இங்கு கார்த்திகேயர் பிரும்மச்சாரியாம். பெண்வாடையே அடிக்கக் கூடாதாம். 'நம்மூரில் அண்ணன். இந்த ஊரில் தம்பி' என்று எண்ணிக் கொண்டேன்.

பாஜீராவ் பேஷ்வாவின் கல்லறையைப் பார்த்து விட்டு மலையின் படிக்கட்டுக் கருகே யுள்ள சாலை அணுகினேன். செங்கல்லும் சுண்ணாம்பும் போட்டுக் கட்டப்பட்ட ஒரு மேடு தென்பட்டது.

"இது என்ன?" என்று கேட்டேன் உஷாவிடம்.

"இதுவா? இது ஒரு ஞாபகச் சின்னம்!" என்றாள் அவள்.

"எதற்கு இந்த ஞாபகச் சின்னம்?"

"எதற்கா? சிதை ஏறிய ஒரு சதிக்காக!"

"என்ன?"

"அது ஒரு பெரிய கதை!"

"அப்படியா? அது என்ன கதை? எனக்குச் சொல்லேன்!" என்றேன் நான்.

அவள் முதலில் சொல்ல மறுத்தாள். ஆனால் நான் மிகவும் பிடிவாதம் பிடிக்கவே சொல்லச் சம்மதித்தாள்.

"உடன் கட்டை ஏறுவதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று என்னைக் கேட்டாள் உஷா.

"அந்த வழக்கம்தான் இப்பொழுது வழக்கத்தில் இல்லையே. அதைப்பற்றி இப்பொழுது என்ன?" என்றேன் நான்.

"ஏனென்றால் நான் சொல்லப்போகும் கதைக்கும் நான் கேட்கும் கேள்விக்கும் சம்பந்த மிருக்கிறது" என்றாள் உஷா.



"ராஜா ராம் மோஹன் ராய் இதை நிறுத்த முயன்றது ஒரு விதத்தில் சரிதான் என்று எனக்குத் தோன்றுகிறது. எல்லா மனைவிமார்களும் கணவன் இறந்தவுடன் உடன் கட்டை ஏறுவதற்குச் சித்தமாக இருப்பார்கள் என்று எப்படி எண்ண முடியும்? அதோடு உடன் கட்டை ஏறுவதைப் பொறுத்து ஒரு மனைவியின் கற்பை மதிப்பிடுவ தென்பதும் மிக மிகக் குரூரமாக வல்லவா தோன்றுகிறது?" என்றேன் நான்.

"உண்மைதான்; நீங்கள் சொல்லும் கருத்துக்கு இசையவே அந்தக் காலத்திலும் காரியங்கள் நடந்திருக்கின்றன. முன்பு உடன் கட்டை ஏறப் போகும் மனைவி சிதைக்குச் செல்லு முன் நிறைய குங்குமப் பூவைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லுவாளாம். இப்படிச் செய்வதால் உடம்பில் எரிச்சலும் காந்தலும் அதிகமாகுமாம். ஆகவே, சிதையில் ஏறும்பொழுது அவ்வளவாக அக்னியின் வெப்பம் தெரியாதாம். இதுமட்டுமா? சில சந்தர்ப்பங்களில் மனைவியைப் பலவந்தப் படுத்திச் சிதையேற்ற வேண்டியிருக்குமாம். இதையெல்லாம்

நினைத்தால் ராம் மோஹன் ராய் கொண்டு வந்த சீர்திருத்தம் அவசியமானது தான் என்று எனக்கும் தோன்றுகிறது" என்றாள் உஷா.

"சரி, அதைப்பற்றி இப்பொழுது விவாதிப்பானேன்? இந்த ஞாபகச் சின்னத்தில் கதையல்லவா எனக்கு வேண்டும்?" என்றேன் நான்.

"காரியமில்லாமல் உங்களிடம் இவ்வளவு கேள்விகள் கேட்பேனா? காரணம் இருக்கக் கொண்டு தானே நான் கேட்கிறேன்!" என்று சொல்லி விட்டு உஷா மேலும் கதையைச் சொல்லத் தொடங்கினாள்:



**பா**ஜீராவ் பேஷ்வாவின் அரண்மனையில் கௌரிபதிக்கு ஒரு பிரத்தியேக கௌரவம் இருந்தது. அவன் சாதாரணமான அரண்மனைச் சிப்பந்தியாக இருந்த போதிலும், பேஷ்வாவின் பிரதானிகளுடன் சரி நிகர் சமானகப் பழகக்கூடிய அந்தஸ்தைப் பெற்றிருந்தான். எந்தக் காரியமானாலும், பிரதானிகளுக்கெதிரேயும் சரி, பேஷ்வாவுக்கு எதிரேயும் சரி, தன் கருத்தைத் தைரியமாகச் சொல்ல அவன் தயங்கியதில்லை.

ஒரு நாள் பேஷ்வா தன் பிரதானிகளுடன் அளவளாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது உடன் கட்டை ஏறுவதைப் பற்றிய பேச்சு வந்தது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். எல்லோரும் பேஷ்வாவின் அபிப்பிராயத்தை ஆதரித்தே பேசினார்கள். ஆனால் கௌரிபதி ஒருவன்தான் எதிர்த்து வாதாடினான். பேஷ்வாவுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட வாதம் முடிவில்லாமல் சென்று கொண்டேயிருந்தது.

"பெண்களின் விருப்பத்துக்கு விரோதமாக உடன்கட்டை ஏறச் சொல்வது அதமமான காரியம்" என்றான் பேஷ்வா.

"யார் உடன்கட்டை ஏறச் சொல்லுகிறார்கள், மகராஜ்? தாங்கள் இதன் உள்ளர்த்தத்தை உணரவில்லையென்றே எனக்குத் தோன்றுகிறது" என்றான் கௌரிபதி.

"கௌரிபதி, அப்படியென்றால் உடன் கட்டை ஏறுவதில் பெண்கள் எல்லோருமே நம்பிக்கை உள்ளவர்கள் என்று எண்ணுகிறாயா? மேலும் அப்படி ஏறும்படி மனைவிமார்களைப் பலவந்தப் படுத்துவதும், வெட்பம் தெரியாமலிருப்பதற்காக அவர்கள் பல வழிகளைப் பின்பற்றுவதும் உனக்குச் சரியென்று தோன்றுகிறதா?" என்று கேட்டான் பேஷ்வா.

"இவற்றையெல்லாம் சரி என்று நான் சொல்லவில்லை, மகராஜ்! ஆனால் ஒரு விஷயம். உத்தமக் கணவன் மனைவியின் கரத்தை முதல் முதலில் பிடிக்கும் பொழுதே, தன் கடமையை உணர்ந்து விடுகிறான். திருமணத்தின் பொழுது செய்த பிரதிக்ஞையை நடைமுறை வாழ்வில் நிறைவேற்ற முயலுகிறான். அந்த நிலையிலே கணவன் பிரியும் பொழுது, தன் உயிரே பிரிந்து செல்லுகிறது என்று மனைவி எண்ணுகிறாள். உயிர் பிரிந்த பிறகு மிகுதியிருப்பது கட்டை தானே? அதையும் எரித்துவிட வேண்டுமென்று துணிகிறாள்......"

"நீ சொல்லுகிறபடி திருமணத்தின் போது செய்த பிரதிக்ஞையை நிறைவேற்ற முயலும் கணவன்மார்கள் சிறுபான்மையோரே. ஏன், சிலர் திருமணத்தின்போது செய்த பிரதிக்ஞையை கூட மறந்து விடுகிறார்கள். அதே மாதிரி மனைவிமார்களில் எத்தனையோ பேர் கணவன் பிரிவை நீ சொல்கிற ரீதியிலே பார்ப்பதில்லை. எனவே இந்தச் சிறுபான்மையோருக்காக 'சதி' ஒரு மரபாக இருக்க வேண்டியதில்லை" என்றான் பேஷ்வா.

"மகராஜ்! காலம் மாறிவிட்டது என்பது உண்மைதான். ஆனாலும் கணவனு



பத்திரிகை இரவல் கேட்க வந்தவர்:- நீங்கள் எல்லாப் பத்திரிகைகளும் அனேகமாக வாங்கி விடுகிறீர்கள் போலிருக்கிறதே? எந்தப் பத்திரிகைதான் நீங்கள் வாங்குவதில்லை?

நண்பர் :—இரவல் பத்திரிகை மட்டும் வாங்குவதில்லை.

---

டைய பிரிவின் பொழுது நான் குறிப்பிட்டதைப் போன்ற மனோபாவம் ஏற்படவில்லை என்றால் தம்பதிகளின் வாழ்க்கையே வீண். கணவனும் மனைவியும் எந்த ரீதியில் பூர்ணமாக வாழ்ந்து வரவேண்டுமோ, அந்த ரீதியில் அவர்கள் வாழ்ந்து வரவில்லை என்று தான் அதற்கு அர்த்தம். ஏன், அவர்களுக்குக் கல்யாணமே ஆகவில்லை என்றுகூடச் சொல்லி விடலாம். மேலும் இந்தப் பரிசுத்தமான வழக்கம் நம் முன்னோர்களின் காலத்திலிருந்தே இருந்து வருகிறது என்பதைப் பேஷ்வா கவனத்தில் வைக்கவேண்டும்" என்றான் கௌரிபதி.

"கௌரிபதி, உனக்கும் ஒரு மனைவி இருக்கிறாள் என்பதை எண்ணிப் பேசு. அவளுடைய கோணத்திலிருந்து இந்தப் பிரச்னையை உன்னால் பார்க்க முடியவில்லை......"

"வேண்டாம், மகராஜ்! இந்தப் பிரச்னையை நாம் பொதுவாகத்தான் பார்க்க வேண்டும். என் மனைவி எப்படியுமிருக்கலாம்; அதற்காக நான் உண்மையை மறுக்க முடியுமா?"

"நெருப்பு என்றால் வாய் வெந்து விடாது. இன்று இரவு நீ உன் இல்லம் செல்லும் பொழுது இறந்து விடுகிறாய் என்று வைத்துக் கொள்வோம்......"

"அதனாலென்ன? அதைப்பற்றிக் கவலையில்லை, மகாராஜ்! நன்கு கவனியுங்கள். சூட்சமத்திலே கணவனின் பிரிவு மனைவியைச் சுடுப்பொழுது ஸ்தூலத்திலே தோன்றும் சிதை நெருப்பா அவளைச் சுட்டுவிடப் போகிறது?"

வாதம் முடிவில்லாமலே சென்றது. ஆனால் எல்லோரும் பேஷ்வா சொல்வதைத்தான் ஆமோதித்தார்கள். அதுதான் அவர்களுக்கு நியாயமாகத் தோன்றிற்று. 'வாழும் வகை தெரியாத கணவன்மார்கள்' என்று மனம் கசந்து முணுமுணுத்தான் கௌரிபதி.

அன்று பேஷ்வாவின் நாவில் என்ன இருந்ததோ! கௌரிபதி அன்றிரவு உயிருடன் வீடு செல்லவில்லை. கோட்டைக் காவலர்கள் பேஷ்வாவிடம் வந்து, "கௌரிபதி எப்படி இறந்தான் என்றே தெரியவில்லை! கோட்டைக்கருகே அவன் உடலைக் கண்டோம்!" என்று தெரிவித்தார்கள்.

ஆனால் இதென்ன? கௌரிபதி இறந்ததைக் குறித்துப் பேஷ்வா வருத்தப்படவில்லையே? அவன் முகத்திலே ஏன் இந்தப் புன்னகை? பிறப்பில் அந்தணனான பேஷ்வா க்ஷத்திரிய தர்மத்தில் ஈடுபட்டுவிட்டதனால் மனத்திலே நெகிழ்ச்சியே இல்லாமற் போய்விட்டானா? அல்லது வாழும் வகை தெரிந்த கௌரிபதியின் மனைவியின் கற்பு நிலையைத்தான் பார்ப்போமே என்று எண்ணினானா? அவன் முகத்திலே இன்னும் ஏன் அந்தக் குரூரப் புன்னகை?

தானே முன் நின்று கௌரிபதியின் கடைசிக் காரியங்களை நடத்தச் சித்தமானான் பேஷ்வா. எல்லாம் அவன் கட்டளைப்படி நடந்தன. பேஷ்வாவின் முகத்திலே இன்னும் அதே புன்னகை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு பரபரப்பு. கௌரிபதியின் மனைவி உஷா கையில் ஒரு செவ்வரளி மாலையுடனும், நெற்றியில் குங்குமத்துடனும் ஓடி வந்தாள்! கூட்டத்தை விலக்கிக் கொண்டு சிதையை நெருங்கி அவள் தன் கையில் இருந்த அந்த மலர் மாலையைக் கணவனுக்குச் சூட்டினாள்.

மேலே அவள் செய்ய நினைத்த காரியம் நடக்கவில்லை. பேஷ்வாவின் உத்தரவுப் படி அவளுடைய உறவினர்களான சில மாதர்கள் அவளைச் சூழ்ந்து பிடித்துக் கொண்டார்கள். பேஷ்வா அவள் முன் போய் நின்றான்.

"என்ன செய்ய விரும்புகிறாய்?"

"மகராஜ், ஒரு கற்புள்ள ஸ்திரீ செய்ய வேண்டியதைச் செய்யப் போகிறேன், என்னை ஆசிர்வதியுங்கள்!" என்றாள்.

"உஷா, நீ தற்கொலை செய்து கொள்வதை என்னால் அனுமதிக்க முடியாது. நான் சொல்வதைக் கேள்."

"இது தற்கொலையல்ல, மகராஜ்! இது தொன்றுதொட்ட காலமாக நடந்து வரும் தர்மம். எனக்கு முன்னால் பாரத நாட்டுப் பத்தினிப் பெண்கள் கைக் கொண்டு அநுஷ்டித்து வந்த ஸ்திரீ தர்மம். அந்தத் தர்மத்துக்குக் குறுக்கே நிற்க வேண்டாம். என்னைத் தர்மக் கொலை செய்யச் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டாள்.

உஷா கானிட்கர் இங்கு சற்று நிறுத்தினாள். பிறகு தொடர்ந்து மேலும் சொல்ல ஆரம்பித்தாள்:

"பேஷ்வா ஒரு சின்னத்தனமான காரியம் செய்தான். 'உன்னால் சிதை நெருப்பைத் தாங்க முடியாது' என்றான் அந்தக் கற்பின் செல்வியிடம்.

"கணவன் பிரிவு என்னும் நெருப்பை விட இந்தச் சிதை நெருப்புக்கு வெப்பம் அதிகம் உண்டா?" என்றாள் அவள்.

"அப்படியானால் இதோ காய்ந்து கொண்டிருக்கும் இந்தக் கொதிக்கும் நீரைச் சாப்பிடு, பார்க்கலாம்!" என்றார்கள் சூழ்ந்து நின்ற மாதர்கள்.

அதைக் கேட்டுப் பேஷ்வா 'கல கல' என்று சிரித்தான்.

ஆனால் இதென்ன? கற்பரசி உஷா கொதிக்கும் நீரை 'மட மட' வென்று பருகிக் கொண்டிருக்கிறாளே!

பேஷ்வா முதல் எல்லோருக்கும் ஒரே திகைப்பு! அந்தக் கொதிக்கும் நீர் சென்ற இடமெல்லாம் என்ன பாடு படுத்தி விட்டது? எல்லோரும் கண்ணை மூடிக் கொண்டு விட்டார்கள். பேஷ்வாவும் கண்ணை மூடிக் கொண்டான். மறு நிமிஷம் உஷா—கௌரிபதியின் மனைவி உஷா சிதை யேறி விட்டாள்!

உஷா கானிட்கர் கதையை இங்கு வந்து நிறுத்தினாள். நான் அவள் கழுத்திலிருக்கும் அந்தக் கறையைத் திட்சண்யமாகப் பார்த்துக் கொண்டு நின்றேன். அவள் ஒன்றும் சொல்லாமற் போகவே "அப்புறம்?" என்று கேட்டேன்.

"அப்புறம் என்ன? இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் கணவன் வாழ்வோடு உஷா தன் வாழ்வையும் ஐக்கியப் படுத்திக் கொண்டாள். பேஷ்வாவும் தன் விபரீதச் செயலுக்கு வருந்தி இந்த ஞாபகச் சின்னத்தை அவள் ஞாபகார்த்தமாக எழுப்பினான்."

"அதைச் சொல்லவில்லை. அதைத்தான் நானே ஊகம் செய்து கொண்டு விடலாமே! இருந்தாலும்......" என்று இழுத்தேன்.

"நீங்கள் நினைப்பது சரிதான். கொதிக்கும் நீரைச் சாப்பிடச் சொல்லிக் கற்பரசியைச் சோதித்தார்களே, அந்தப் பாவிகளின் வழி வந்தவர்கள் தான் நாங்கள். கற்பை நிலைநாட்ட, இறைவன் சோதனையில் மட்டுமல்ல, மனிதர் இட்ட சோதனையிலும் அவள் தேற வேண்டியிருந்தது. கொதிக்கும் நீரைக் குடித்து அவள் குரல்வளை வேக வேண்டி வந்தது. அந்தக் கற்பின் நிலையை அடிக்கடி ஞாபகப்படுத்தவே அந்த அடையாளம் அவளுடைய சந்ததியில் ஒவ்வொருவர் கழுத்திலும் தலைமுறை தலைமுறையாகத் தோன்றி வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் முதலில் பெண் பிறந்தால் 'உஷா' என்று தான் பெயரும் வைக்கிறார்கள்" என்றாள்.

"உஷா, உன்னிடம் அழகு இவ்வளவு பூர்ணத்துவம் பெற்றிருந்தும், அந்தக் கறை ஒரு குறையாக இருக்கிறதே என்று நான் ஆதங்கப்பட்டதுண்டு. ஆனால் இப்பொழுது அந்தக் குறைதான்—அந்தக் கற்பின் அடையாளம் தான் உனக்கு ஆபரணமாக அமைந்திருக்கிறது. நீ பாக்கியசாலி!" என்றேன்.

வெட்கத்தாலும் பூரிப்பாலும் உஷா கானிட்கர் பேச்சற்று நின்றாள்.

---



டாக்டர்:—என் ஸார், உடம்புக்கு வியாதி வந்து விட்டால் உடனே கவனிக்க வேண்டாமா? நீங்கள் பாட்டுக்குத் தூங்கிக் கொண்டிருந்து விட்டால் வியாதி எப்படி ஸார், சொஸ்தமாகும்?

நோயாளி:—நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லையே, ஸார்! தூக்கம் வராத வியாதியினால்தானே நான் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன்!



# யந்திரக் குதிரை

ரா. நா.

## 1. புது வருஷ விழா

பாரசீக நாட்டில் புது வருஷப் பண்டிகை வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இந்த விழா வஸந்த கால ஆரம்பத்தில் நிகழும். நாடு முழுவதும் பூத்துக் குலுங்கும் சமயத்தில் புது வருஷத் திருவிழா நடப்பதால் ஜனங்களும் உள்ளப் பூரிப்புடன் அதில் கலந்து கொள்ளுவார்கள். பாரசீக நாட்டுப் பெரு நகரங்களில் மட்டுமின்றி, சிறு கிராமங்களிலும் கூட ஜனங்கள் ஆடிப் பாடி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கு வார்கள்.

அச்சமயம் பாரசீக மன்னனின் தர்பாரில் மிக ஆடம்பரமான கேளிக்கைகளும் கண் காட்சிகளும் நடைபெறும். மக்களின் திறமையைக் காட்டும் கலைப் பொருள்களும், அதிசய வஸ்துக்களும் கண் காட்சியாக அரச தர்பாரில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நாட்டு மக்கள் மட்டுமின்றி, வெகு தூரத்திலிருந்து பிறநாட்டுப் பிரமுகர்களும் இந்த விழாவைக் கண்டு களித்துப் போவதற்காக வருவதுண்டு.

பல நூற்றுண்டுகளுக்கு முன்பு பாரசீக நாட்டைப் பிரசித்திபெற்ற மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் ஒரு வருஷம் இந்த வைபவம் ஷிராஸ் என்னும் நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நகரின் நடு மத்தியில் ஒரு அழகான சதுக்கத்தில் கண் காட்சிச் சாலை நிறுவப்பட்டிருந்தது. பாரசீக மன்னனும் அவரது பரிவாரங்களும் கண் காட்சிக்கு வந்திருந்த வஸ்துக்களைப் பார்வையிடுவதற்காக வந்தனர். காட்சிப் பொருள்களில் சிறந்தவற்றுக்கு மன்னன் பரிசு அளித்து வந்தான். சில வற்றை அவனே விலை கொடுத்தும் வாங்கிக்கொண்டான். காட்சியை பார்வையிட்டு விட்டு அரண்மனைக்குத் திரும்பும் சமயம் இந்தியாவிலிருந்து ஒருவன் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த தனது செயற்கைக் குதிரையின் மீது அங்கு வந்து இறங்கினான். அந்தக் குதிரை உயிருள்ள குதிரை தானே என்று எண்ணும்படி அவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் செய்யப்பட்டிருந்தது. மன்

னன் வைத்த கண் வாங்காமல் அந்தக் குதிரையையே பார்க்கலானான். அதைக் கண்ட குதிரைக்காரன் மன்னனுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, "மன்னரே! நான் கடைசியாக வந்த போதிலும் என் குதிரையைப்போல் அதிசயப் பொருளை நீங்கள் இந்தக் காட்சியில் இதுவரை பார்த்திருக்க மாட்டீர்கள்!" என்றான்.

"உன் குதிரை அப்படி ஒன்றும் அதிசயமாயில்லை. உயிருள்ள குதிரை போல் மிகச் சாமர்த்தியமாக ஆக்கப் பட்டிருக்கிறது. இதே மாதிரி குதிரையை என்னுடைய வேலையாட்களும் கூடச் செய்து விடுவார்கள்" என்று மன்னன் பெருமையுடன் சொன்னான்.

அதைக் கேட்ட இந்தியன் "பிரபோ! நான் என் குதிரையை வெளித் தோற்றத்தின் காரணமாக அதிசயப் பொருள் என்று சொல்லவில்லை. இதனுள் இருக்கும் சக்தியை அறிந்து இதை மதிப்பிடுங்கள். இதன் மீது ஏறியவுடன் நாம் உலகத்தின் எந்த பாகத்திற்குப் போக வேண்டுமென்று விரும்புகிறோமோ அங்கே கொண்டு போய்விடும். தாங்கள் அனுமதி யளித்தால் இதை நிரூபித்துக் காட்டுகிறேன்" என்று தன் குதிரையின் சக்தியைப் பற்றி மிகவும் பெருமையுடன் மன்னனுக்கு எடுத்துரைத்தான்.

அதைக் கேட்டுப் பாரசீக அரசன் பிரமித்து விட்டான். எப்பொழுதுமே அபூர்வ வஸ்துக்கள் என்றால் மன்னனுக்கு அலாதி ஆசை உண்டு. இந்தச் செயற்கைக் குதிரைக்கு இவ்வளவு சக்தி இருக்கிறது என்று கேள்விப் பட்டவுடன் அதன் உண்மையைப் பரிசோதிக்க விரும்பினான். உடனே அந்த இந்தியக் குதிரைக்காரனைப் பார்த்து, குதிரையின் சக்தியை நிரூபித்துக் காட்டுமாறு சொன்னான்.

இந்தியனும் தன் குதிரை மீது ஏறி உட்கார்ந்துகொண்டு, "எங்கே செல்ல வேண்டும்?" என்று அரசனைக் கேட்டான். அரசன் தூரத்திலுள்ள ஒரு மலையைக் காட்டி, "அந்த மலைக்குச் செல். அங்கு போய் அந்த மலையடிவாரத்திலுள்ள பேரீச்ச மரத்தின் கிளை ஒன்றைக் கொண்டுவா! அந்த மலை வெகு தூரத்திலுள்ளதுதான். இருந்தாலும் உன் குதிரையின் வேகத்தை அறிந்து கொள்வதற்கு அது போதுமானது" என்றான்.

மன்னன் கட்டளையைத் தெரிந்து கொண்டதும், குதிரைக்காரன் குதிரையின் கழுத்திலிருந்த ஒரு பொத்தானைத் திருகினான். உடனே குதிரை ஆகாயத்தை நோக்கிக் கிளம்பி, மின்னல் வேகத்தில் அரசன் காட்டிய மலையை நோக்கிப் பறந்தது.

அரசனும், அரச சபையினரும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டனர். ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டுநின்ற அவர்களுடைய பிரமை தீருவதற்குள்ளாகவே, குதிரைக்காரன் பேரீச்சங் கிளையுடன் அவர்கள் முன்னிலையில் வந்து இறங்கினான்.

அந்தச் செயற்கைக் குதிரையின் சாமர்த்தியத்தைப் பார்த்துப் பரவசமடைந்த அரசன் அதை அடைய விரும்பினான். குதிரைக்காரனைப் பார்த்து, "இந்தக் குதிரையின் விலை என்ன?" என்று கேட்டான்.

"இந்தக் குதிரை மூலம் எனக்கு ஏராளமாகப் பணமும் புகழும் வந்து சேரும். இருந்தாலும் நான் கேட்கும் விலையைத் தாங்கள் கொடுக்கத் தயாரா யிருந்தால் இதைத் தங்களுக்குக் கொடுத்துவிடத் தயாராயிருக்கிறேன்!" என்று பதில் சொன்னான் குதிரைக்காரன்.

"நீ இதற்காகக் கேட்கும் நியாயமான விலையை நான் தரத் தயார்.





நீ விரும்பினால் என் ராஜ்யத்திலுள்ள பெரிய நகரம் ஒன்றை உனக்கு அளித்து உன்னை அதற்கு அரசனாக்குகிறேன்!'' என்றான் அரசன்.

ஆனால் குதிரைக்காரனுக்கு அரசனின் அந்த வார்த்தைகள் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே, அவன், "பொருளும் பூமியும் என்னைத் திருப்தி செய்யாது. தங்கள் பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாயிருந்தால் நான் இந்தக் குதிரையைத் தங்களுக்கே கொடுத்து விடுகிறேன்!'' என்று கூறினான்.

இவ்வாறு குதிரைக்காரன் கூறியவுடன் சபையிலிருந்த பிரபுக்களும், மக்களும் சிரித்தனர். கேவலம் ஒரு மந்திரவாதி மன்னனின் மகளை மணந்து கொள்ள ஆசைப்படுவது அவர்களுக்குக் கேலியாக இருந்தது. ஆனால் மன்னன் சிரிக்கவில்லை. சிந்தனை செய்தான். 'இவ்வளவு அபூர்வமான வஸ்துவை அடைவதற்குத் தன் மகளை ஏன் விலையாகக் கொடுக்கலாகாது?' என்று அவன் நினைத்தான் போலும்!

இதே சமயத்தில் அரசனின் மகனும் இளவரசனுமான பிரோஸ் ஷா கோபத்துடன் முன் வந்தான். "எங்கிருந்தோ வந்தான் ஒரு மாயாஜாலக்காரன். அவன் 'குலம் என்ன, குடி என்ன?' என்று நமக்குத் தெரியாது. அவன் நமது இளவரசியை மணந்து கொள்ள விரும்பினால் அந்தக் கேலிக் கூத்துக்கு நாம் ஆதரவு அளிக்கலாமா? தந்தையே! இந்த அற்ப யோசனையை விட்டொழியுங்கள். உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறித் தன் தந்தையை வணங்கினான்.

மகன் கூறியதைக் கேட்ட மன்னன் "இந்தக் குதிரையை வேறு அரசன் வாங்கி விடக்கூடாது. வாங்கி விட்டால், 'தன்னிடம் தான் உலகத்தின் மிக மிக அதிசயமான பொருள் இருக்கிறது' என்று அவன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அப்படி வேறு ஒரு அரசன் பெருமை யடித்துக் கொள்வதைக் காண நான் விரும்பவில்லை. நமது பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்காமல் இந்தக் குதிரைக்காரனைத் திருப்திசெய்ய வேறு வழி இருந்தால் சொல்லு. அதன்படியே செய்கிறேன். ஆனால் அதற்கு முன்பாக, இந்தக் குதிரைக்கு இவன் கூறும் அபூர்வ சக்திகள் இருக்கின்றனவா என்பதை நீயே இதன் மீது ஏறிச் சவாரி செய்து பரீக்ஷித்துப் பார்த்துச் சொல்லு'' என்றான்.

அவ்வாறே செய்வதாக இளவரசன் பிரோஸ் ஒப்புக்கொண்டான். உடனே குதிரையின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு அதை எப்படி ஓட்டுவது, திருப்புவது, நிறுத்துவது என்பது போன்ற ரகசியங்களை குதிரைக்காரனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலேயே புறப்பட்டு விட்டான். குதிரையின் கழுத்திலுள்ள பொத்தானைத் திருப்பியதும் அது மாயமாகப் பறந்தது. இளவரசனைத் தூக்கிக் கொண்டு குதிரை வானவீதி வழியே வெகு வேகமாகச் சென்றுவிட்டது. வெகு நேரம் ஆகியும் தன் மகன் திரும்பி வராமற் போகவே, மன்னனுக்குக் கவலை ஏற்பட்டது. தன் மகன் திரும்பி வரும் வகை தெரியாமல் புறப்பட்டுப் போய்விட்டானே என்று அவன் மிகவும் வருந்தினான்.

மன்னன் கோபங்கொண்டு தன்மீது பாய்ந்தால் என்ன செய்வது என்று குதிரைக்காரன் பயந்தான். உடனே அரசன் காலில் விழுந்து "பிரபோ! என்மீது தவறில்லை. குதிரையை எப்

**இரண்டு விடுகதைகள்**

1. ஆற்றிலே இரண்டுமரம் கொக்கரிக்குது
அலையனூர் தேர்வந்து நிலைநிக்குது
வெள்ளைக்காரன் சீமையிலே விளக்கெரியுது
விடியவிடியக் கூத்துப் பார்த்துக் கண்ணெரியுது

2. வாராமலே இருந்து வந்தீர்கள்
வந்து ஒருநாள் போனீர்கள்
போய் மறுபடியும் வந்தீர்கள்
போகிறவர் எப்பொழுது வருவீரோ!

*சென்ற வார விடுகதைகளுக்கு விடை:*

1. நாவற்பழம் 2. படியும் உழக்கும்

படித் திருப்புவது என்று கேட்டுக் கொள்ளாமலே இளவரசர் அவசரமாகப் புறப்பட்டு விட்டார். அவர் எப்படித் திரும்பி வருவாரோ என்று கவலையாக இருக்கிறது" என்று கூறி மன்னனிடம் மன்னிப்புக் கோரினான்.

தன் மகன மிகுந்த 'அபாயத்திற்குள்ளாயிருப்பதை அறிந்து அரசனுக்குக் குதிரைக்காரன்மீது கோபம் கோபமாக வந்தது. உடனே அவன் தன் காவலாளர்களுக்கு அவனைப் பிடித்துச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான். தன் மகன் பத்திரமாகத் திரும்பி வராவிட்டால் குதிரைக்காரனின் தலையை வாங்கிவிட வேண்டும் என்று கூறிவிட்டு அரசன் அரண்மனைக்குத் திரும்பினான். மிகுந்த கோலாகலத்துடன் ஆரம்பித்த அந்த வருஷத்துப் புது வருஷ விழா இப்படியாகத் துக்கத்தில் முடிந்தது. (தொடரும்)

# உண்மை விளங்கியது!

"இதோ பார்த்தாயா? ஒரு பணப் பை கிடக்கிறது!" என்றான் சுபுத்தி.

"நாம் இருவரும் அதிர்ஷ்டசாலிகள்! இல்லாவிட்டால் நமக்கு இப்படி வழியில் கிடந்து பணப் பை கிடைக்குமா?" என்று சொந்தம் கொண்டாடினான் துஷ்ட புத்தி என்னும் நண்பன்.

பிறகு இருவரும் வேண்டும் பொழுது எடுத்துக் கொள்ளலாம் என்று அதை அங்கேயே ஒரு மரத்தடியில் புதைத்து விட்டுத் திரும்பினர்.

கொஞ்ச நாட்கள் சென்றன. துஷ்ட புத்திக்குப் பொன் அனைத்தையும் தானே எடுத்துக் கொண்டு விட்டால் என்ன என்று தோன்றியது. துஷ்ட புத்தியுள்ளவனுக்கு இம்மாதிரியெல்லாம் தோன்றுவது சகஜம்தானே?

சுபுத்திக்குத் தெரியாமல் ஒரு நாள் இரவு போய் புதைத்து வைத்திருந்த பொருளை எடுத்து வந்து விட்டான்! அது மட்டுமா? இரண்டு நாட்கள் கழித்துச் சுபுத்தியிடம் சென்று, "நாம் போய் பணத்தை எடுத்து வருவோமா?" என்றும் கேட்டான். சூது வாது அறியாத சுபுத்தி அவனுடன் சென்றான். ஆனால் அங்கே பணம் இருந்தால்தானே?

துஷ்டபுத்தி பொய்க் கோபத்தை வரவழைத்துக் கொண்டு, "நீதான் எனக்குத் தெரியாமல் பணத்தை எடுத்து வந்து விட்டாய்!" என்றான். அதோடு அவன் நிற்கவில்லை. நியாயஸ்தலத்திலே, சுபுத்தி தன்னை ஏமாற்றி விட்டதாக வழக்கும் தொடர்ந்தான். நீதிபதி நேரில் ஸ்தலத்துக்கே வந்து விசாரணை செய்வதாகச் சொல்லி விட்டார்.

குறிப்பிட்ட தினத்தில், சுபுத்தியுடனும் துஷ்டபுத்தியுடனும் நீதிபதி அந்த மரத்தினடிக்கு வந்தார்.

அவர்கள் வந்து நின்றதும் நிற்காததுமாக, "பணப் பையைச் சுபுத்திதான் எடுத்துப் போனான்!" என்று ஒரு அசரீரி வந்தது. அதைக் கேட்டதும் சுபுத்தி, "நீதிபதி அவர்களே! எனக்கு இந்த வார்த்தையில் நம்பிக்கை இல்லை. ஆகவே, ஒரு காரியம் செய்ய அநுமதி தரவேண்டும். அதில் எனக்கு வெற்றி கிட்டாவிட்டால், எந்தத் தண்டனையளித்தாலும் ஏற்கத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

நீதிபதி அதற்குச் சம்மதித்தார். சுபுத்தி மரத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தான். மரத்திலே ஒரு பெரிய பொந்து இருப்பது தெரிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம், சுபுத்தி தீ வளர்த்து, அந்தப் பொந்தில் கொட்டினான். தீயின் வெப்பம் தாளாமல், 'ஐயோ! அப்பா!' என்ற குரல் வந்தது. அடுத்த கணம் அதற்குள்ளிருந்து ஒரு கிழவன் வெளி வந்தான். அவன்தான் துஷ்டபுத்தியின் தகப்பன். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில், நீதிபதிக்கு உண்மை விளங்கியது. துஷ்டபுத்திக்கும் தகுந்த தண்டனை கிடைத்தது.




## 15. மீண்டும் போர்!

ரேம்பஸ் மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டு விட்டதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். சுகம் ஒன்றையே குறிக் கோளாகக் கொள்ளுவது என்று முடிவு கட்டிவிட்ட மக்கள்—போரை வெறுத்துப் பொன்னுனை தாய் நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் முழுக்குப் போட்டு விடுவதென்று முடிவு கட்டி விட்ட மக்கள்—நாட்டுக்கே தாய் போன்ற மகாராணியை, 'திரும்பிப் போ! நீ வந்த இடத்துக்கே திரும்பிப் போய்விடு!' என்று ஏசி நாட்டைவிட்டு அகற்ற முற்பட்டுவிட்ட மக்கள்—தன் சொற் பொழிவைக் கேட்டு இவ்வளவு தூரம் இவ்வளவு சீக்கிரம் மனம் மாறிவிடுவார்கள் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

நெறி தவறிச் செல்லும் மாந்தர்களை நல்வழியில் திருப்புவதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளுவது நாட்டின் நலனில் நாட்டம் கொண்ட ஒவ்வொருவனுடைய கடமையும் ஆகும் என்று அவன் எண்ணி னுனே ஒழிய, தனி ஒருவனுல் என்ன செய்து விடமுடியும் என்றுதான் நினைத் தான். "நாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டோம். நம் கடமை தீர்ந்தது. அதைக் கேட்பதோ கேட்காமல் இருப் பதோ மக்களின் இஷ்டத்தைப் பொறுத் தது" என்று அவன் தன் மனத்தைத் திருப்தி செய்து கொண்டான். ஆனுல் மக்களின் மனம் இப்படி அடியோடு மாறி விடவே அவனுடைய உள்ளத்திலே மட் டற்ற மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கியது

"எகிப்து நாட்டுக்கு வெற்றி கிட்டட் டும்!" என்று தன் பலம் கொண்ட மட்டில் உரக்கக் கோஷித்தான் ரேம்பஸ்.

மக்களும் அவனுடைய குரலோடு குரல் சேர்த்து, "எகிப்து நாட்டுக்கு வெற்றி கிட்டுக! எகிப்து நாட்டுக்கு வெற்றி கிட்டுக!!" என்று கோஷித்தனர்.

ரேம்பஸ் மறுபடியும் அதே உணர்ச்சி வெறியில், "எகிப்து நாட்டு மக்கள் வீரம் குன்றியவர்கள் அல்ல; எதிரிகளுக்குப் பயந்து சாகிறவர்கள் அல்ல என்பது எனக்கு நன்கு தெரியும். எதிரிகளுக்குப் பயந்து போரை நிறுத்துவது என்பது எகிப்து நாட்டுச் சரித்திரத்திலேயே கண்டி ராத காரியம், கேட்டிராத காரியம். எகிப்து நாட்டு மக்கள் வெற்றி அல்லது வீர மரணம் இந்த இரண்டைத் தவிர வேறு ஒன்றையுமே அறியார்கள். என் சொல்லைக் கேளுங்கள்! இன்றே இப் பொழுதே போருக்குப் புறப்படுவது என்று முடிவு செய்யுங்கள்! எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து விட்டுத் தான் மறுகாரியம் என்று கங்கணம் கட்டிக் கொள்ளுங்கள். கட்டாயம் வெற்றி கிட்டும்; வெற்றி கிட்டியே தீரும்!" என்று சொன்னுன்.

அதைக் கேட்ட மக்கள், "எகிப்து நாட் டுக்கு ஜே!" என்று கோஷம் செய்தனர்.

அரசாங்கப் புரோகிதன் மிகவும் மரியாதையுடனும் பணிவுடனும் நியூனலை மாளிகைக்குள்ளே அழைத்துச் சென்றான். நீக்ரோ தூதர்கள் தங்கள் தங்கள் அக்கினிக் கொப்பறையில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்துவிட்டு வந்த வழியே திரும்பினர். நீக்ரோ தூதர்கள் எரிந்து கொண்டிருக்கும் தங்கள் அக்கினிக் கொப்பறையை அணைத்துவிட்டால் அவர்களுடைய சமாதானப் பேச்சு வார்த்தை அத்துடன் முறிந்துவிட்டது என்பது பொருள்.

மக்களுடைய உள்ளத்திலே வீராவேச உணர்ச்சி பொங்க, 'வெற்றி! வெற்றி!' என்று எட்டுத் திக்கும் அலைகள் மோத அங்கிருந்து கலைந்து சென்றனர்.

*　　　*　　　*

மறு நாள் மறுபடியும் யுத்தம் ஆரம்பமாகியது. அப்பப்பா! என்ன பயங்கரத் தாக்குதல்! இருதரப்புப் படைகளும் மத்த களுங்களைப்போல் ஒன்றை ஒன்று மோதிப் போரிட்டன. ஷம்லார்க்கின் வீரர்கள் உயிரைப் பணயம் வைத்துப் போர் புரிந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய கையிலே பலமும் நெஞ்சிலே உரமும் இருந்தது. ஆனால் அவர்களிடம் ரேம்பஸின் உணர்ச்சி மிக்க வீராவேசப் பேச்சை எதிர்த்து நிற்கும் சக்தி இல்லையே! என்ன செய்வார்கள்? ரேம்பஸினுடைய அந்தச் சொல்லம்பு, எகிப்து நாட்டு வீரர்களின் இதயத்திலே உருவிய கூரிய கத்தியைவிட ஆழமாகப் பதிந்து அபாரமாக அல்லவா வேலை செய்து கொண்டிருந்தது! அன்றைக் கென்று ரேம்பஸுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு பலம் வந்ததோ, தெரியவில்லை! அவன் தனியொருவனாகவே ஆயிரம் பேருக்குப் பதில் சொல்லுவான் போலிருந்தது! அவன் பாயும் இடங்களில் எல்லாம் முண்டங்கள் சாய்ந்தன. வாழைக் கன்றுகளுக்குத் தலை சீவுவதுபோல எதிரிகளின் தலையைச் சீவத் தொடங்கி விட்டான் ரேம்பஸ்.

அவன் ஒருகண நேரமாவது நின்ற இடத்தில் நின்றால் தானே? இப்பொழுது இங்கே இருந்தால், அடுத்த கணம் அங்கே நிற்பான். கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் கண்களெதிரே காட்சி அளித்துக் கொண்டிருப்பவன் மறைந்து விடுவான். அவன் எப்பொழுது, எங்கே, எப்படி இருப்பான் என்பதை எவராலுமே சொல்ல முடியாது. அவன் தரையில் சாய்வோர்களைத் தூக்கி நிறுத்துவான். கஷ்டத்தில் கட்டுண்டிருப்பவர்களைக் காத்து ரக்ஷிப்பான். நம்பிக்கை யிழந்து நிராசை யுற்றிருப்போருக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டி ஊக்கம் அளிப்பான். சோர்வுற்றிருப்போரின் சோர்வை நீக்கக் கடிந்து கொள்ளுவான். நயமாகச் சொல்லவேண்டிய இடத்தில் நயமாகவும், கடுமையாகச் சொல்ல வேண்டிய இடத்தில் கடுமையாகவும் சொல்லிச் சமய சந்தர்ப்பத்துக் கேற்றவாறெல்லாம் அவன் படையை உற்சாகப்படுத்தி வந்தான். இப்படியாக அவன் பற்பல விதங்களில் கிருஷ்ண பரமாத்மாவைப் போலக் கைகொடுத்து உதவி, தானும் போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான்.

அப்பொழுது அவன் வெறும் எலும்பும் தோலும் போர்த்த மாமிச பிண்டமாகக் காட்சி அளிக்கவில்லை. உயிரும் உணர்ச்சியும் ஒருங்கே அமையப்பெற்ற ஒளிப் பிழம்பாகவே திகழ்ந்தான். அவன் போகும் இடங்களில் எல்லாம் உற்சாகமும் உணர்ச்சியும் கரைபுரண்டு பொங்கி எழுவதைப் பார்த்தால் அவனிடம் ஏதோ அரிய பெரிய மாபெரும் மந்திர சித்தி அடங்கியிருக்க வேண்டும் என்று தோன்றியது. கண்களுக்கெதிரே நேருக்கு நேர் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வெற்றி தோல்வியாக மாறியது; தோல்வி வெற்றியாக மாறியது. தோற்றவர் ஜயித்தனர்; ஜயித்தவர் தோற்றனர். தோற்றதோடு மட்டுமா? உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு புறமுதுகிட்டு ஓடவும் ஓடினர்.



அந்திப் பொழுது வந்தது. எகிப்து நாட்டு வீரர்கள் வெற்றிவாகை சூட்டிக் கொண்டு மகிழ்ச்சி வெறியில் நகரத்துக்குள் நுழைந்தனர். வெற்றி மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த அவர்களுடைய முகம் சிவந்து மனோரம்யமாகக் காட்சி அளித்தது.

அவர்களுடைய முகத்தின் சிவப்புத்தான் அந்தி வானத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருந்ததோ, என்னவோ! ஆகாயமும் சிவப்பாகக் காட்சி



அவர் :— என்ன ஸார் இது? உங்கள் தொண்டை ஒரேயடியாகக் கட்டியிருக்கிறதே! நாளைக்கு நாடகத்தில் எப்படி நடிப்பீர்கள்?

இவர் :— அதனால் என்ன? நான் நாடகத்தில் பேசவேண்டியிராது; கணவன் வேஷம் தானே போட்டுக் கொள்ளப் போகிறேன்!

---

யளித்துக் காண்போர் கண்களுக்குக் களிப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அணிவகுத்துச் செல்லும் அவர்களுக்கு முன்னால் வீரன் ரேம்பஸின் ரதம் மிகவும் ஒயிலுடன் சென்றுகொண்டிருந்தது காண்போர் கண்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகத்தான் இருந்தது.

இப்பொழுது நியூனஸ்தான் எகிப்து நாட்டின் மகாராணி. பரூன் அம்னஸ் காலமாகி விடவே, அரசனின் அரியாசனத்துக்கு ஒரு பரூனையும் தனக்கு ஒரு கணவனையும் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் அவளுக்குப் பரிபூரணமான உரிமை இருந்தது. நேற்று வரை அடிமைகளுக்கெல்லாம் அடிமையாக இருந்த அவள் இன்று எகிப்து நாட்டுக்குப் பாதுஷா ஒருவனைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் பூரண உரிமை பெற்றிருந்தாள் என்றால் அதிர்ஷ்ட தேவதையின் சக்தியையோ, கருணையையோ என்னவென்று சொல்லுவது?

நூறு கோட்டை வாசல்கள் கொண்ட பழம் பெருமை வாய்ந்த தீபா நகரத்தின் அரண்மனைப் படிகளிலே, அந்த நாட்டுப் பிரமுகர்களும் செல்வச் சீமான்களும் கூடியிருந்தனர். அவர்கள் அமருவதற்கென்று ஆசனங்கள் பல போடப்பட்டிருந்தன. ஆனால் பொதுமக்களுக்கும் கூட அம்மாதிரி ஏற்பாடு செய்வது என்பது சற்றுச் சிரம சாத்தியமான காரியம் தானே? ஆகவே, அரண்மனையின் எதிரே இருந்த மைதானத்தில் அவர்கள் அமருவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏராளமான பொது மக்களும் அங்கே குழுமியிருந்தனர். 'இன்று யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது? மகாராணி நியூனஸ் யாரைப் பரூனாகத் தேர்ந்தெடுக்கப் போகிறாள்?' என்பதைக் காண வேண்டும் என்ற அவா மக்களுடைய உள்ளத்திலே கட்டுத் தெறித்துக் கொண்டு நின்றது.

கடைசியில் மெதுவாக அரண்மனைக் கதவு திறந்து கொண்டது. அழகி நியூனஸ் ஐந்நூற்றைம்பது பாங்கியர்கள் மனோரம்மியமான மங்கள கீதங்கள் பாடிக் கொண்டு பின் தொடர்ந்து வர, வெளியே வந்தாள். ஆயிரக் கணக்கான கண்கள் அவளுடைய அழகை அப்படியே பருகி விடுவது போல இமை கொட்டாமல் பார்த்தன. ஆயிரக் கணக்கானவர்களின் வாய்கள், "வானுலகத்தில் வாழும் தெய்வங்கள் நம் மேன்மை தங்கிய மகாராணிக்கு நீடூழி வாழ்வும் நீடித்த சுகமும் அளிக்க வேண்டும்" என்ற வேண்டுகோளை விடுத்தன.

அரசாங்கப் புரோகிதன் நியூனஸைப் பார்த்து சிம்மாசனத்தின் பாதி பாகத்தில் அமரும்படி வேண்டிக் கொண்டான். பிறகு, "மகாராணிக்கு வெற்றி கிட்டுவதாக!" என்று வாழ்த்தினான்.

நியூனஸ் சிம்மாசனத்தின் பாதி பாகத்தில் சங்கோசத்தினால் கூனிக் குறுகிக் கொண்டு உட்கார்ந்தாள்.

அரசாங்கப் புரோகிதன் எகிப்து நாட்டின் சம்பிரதாயத்துக்கேற்ப முதலில் தெய்வப் பிரார்த்தனை செய்தான். அதன் பின்னர் எகிப்து நாட்டுத் தேசிய கீதம் பாடப்பட்டது. அவையெல்லாம் முடிந்த பின், காலம் சென்ற பரூன் அம்னஸின் வழக்கு மக்கள் கூடியிருந்த அந்தச் சபையிலே விசாரணைக்கு வந்தது.

புரோகிதன் எழுந்து நின்று, "புதுப் பரூனைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக, பழைய பரூனின் ஆட்சி காலத்தைப்பற்றி விசாரணை நடத்துவது என்பது எகிப்து நாட்டிலே தொன்று தொட்ட காலமாகப் பழக்கத்தில் இருந்து வருகிறது. எந்தச் சிம்மாசனத்தில் உட்கார்ந்து பரூன் நம்முடைய வழக்குகளை விசாரித்து வந்திருக்கிறானோ, அந்தச் சிம்மாசனத்துக்கு எதிரே அமர்ந்து நாம் அவனுடைய

வழக்கை விசாரிக்க வேண்டும். இது நம் நாட்டின் சம்பிரதாயம். ஆகவே, யாருக்காவது காலஞ்சென்ற பருன் வழங்கிய நியாயத்துக்கெதிராக, ஏதாவது குறையிருக்கிறதா? இருந்தால், இங்கே வந்து அவர்கள் தாராளமாக எடுத்துச் சொல்லலாம். எகிப்து நாட்டின் அரசாங்கத்துப் புரோகிதனை நான், குறையுள்ளோர்களைப் பருனின் சிம்மாசனத்துக்கு எதிரே வருமாறு அழைக்கிறேன். எகிப்து நாட்டின் சுதந்திரச் சிப்பாய்கள் சூழ்ந்துள்ள இந்தச் சபையிலே அவர்களுடைய உயிரும் உடலும் ரக்ஷிக்கப்படும் என்றும் உறுதிமொழி கூறுகிறேன். ஆகவே, குறையுள்ளவர்கள் தாராளமாக முன் வந்து கூறலாம்" என்றான்.

அதைச் சொல்லி முடித்து அவன் உட்கார்ந்ததும் நூற்றுக் கணக்கான பெண்கள் முன் வந்தனர். அவர்களுடைய கண்களிலே நீர் முத்துப்போலக் கோத்து நின்றது. அவர்களுடைய முகங்கள் ஏழ்மைக்கும் எளிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கின. அவர்களில் ஒருத்தி எல்லோருக்கும் முன்னால் வந்து நின்று கொண்டு, "நாங்கள்தான் அந்த அபாக்யவதிப் பெண்கள். எங்கள் கணவன்மார்கள்தான் பருனின் பொக்கிஷ மாளிகையைக் கட்டி முடித்தவர்கள். மாளிகை கட்டி முடிந்தானதும் பருன் அவர்கள் எல்லோரையும் நீல நதியின் ஆழங்காண இயலாத நீர்ப் பரப்பிலே கைகளையும் கால்களையும் கட்டிப் போட்டு மூழ்க அடித்துக் கொன்று போட்டான். பருனின் பொக்கிஷ மாளிகை கட்டி முடிவதற்கு இரவு பகலாக அவர்கள் உழைத்தார்கள் அல்லவா? அதுதான் அவர்கள் இழைத்த மாபெரும் குற்றம்!" என்றாள்.


அதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அந்த விதவைக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அவள் அழுவதைக் கண்டதும், மற்ற பெண்களும் அவளுடன்கூடச் சேர்ந்து அழத் தொடங்கி விட்டனர். அதைக் கண்ணுற்ற மக்களும் மனம் வெதும்பி அழலாயினர்.

புரோகிதன் எழுந்து அவர்களைப் பின் நகர்ந்து போய் விடுமாறு கட்டளை யிட்டான். சிறிது நேரம் சென்றதும், "வேறு யாராவது ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்று கேட்டான்.

மக்களிடையே மறுபடியும் ஒருமுறை சலசலப்பு ஏற்பட்டது. அநேக குழந்தைகள் 'தடதட'வென்று படிக்கட்டுகள் மீது ஏறி வந்தனர். அந்தக் குழந்தைகளுடன் கூடவே, ஒரு கிழவனும் கையில் தடியூன்றியவண்ணம் தட்டுத் தடுமாறிக் கொண்டு படியேறி வந்தான். அவனுக்குக் கைத்தடியை ஊன்றி நடந்து வருவதுகூட மிகவும் சிரமமாக இருந்தது. ஒரு காலை ஒரு இடத்தில் வைக்கும்பொழுது இன்னொரு கால் இன்னொரு இடத்துக்கு இழுத்துச் சென்றது. ஒவ்வொரு தடவை அடி எடுத்து வைக்கும்பொழுதும் எங்கே கீழே விழுந்து விடுவானோ என்று எண்ணத் தோன்றியது. மெதுவாக எப்படியோ தட்டுத் தடுமாறிக் கொண்டு சிம்மாசனத்தண்டை வந்து நின்றான். பிறகு சற்று ஆச்வாசப்படுத்திக் கொண்டு நடுங்கும் குரலில், "இந்தக் குழந்தைகள் யார், தெரியுமா? இவர்கள் எகிப்து நாட்டின் எண்ணற்ற செல்வச் சீமான்களின் குழந்தைகள். அந்தச் செல்வச் சீமான்களின் தலைகளைச் சீவித்தான் பருன் தன் பொக்கிஷத்தை நிரப்பினான். செல்வச் சீமான்கள் செய்த குற்றம் என்னவென்றால், அவர்கள் செல்வச் சீமான்களாகப் பிறந்தார்களே, அதுதான்! பணக்காரனாய்ப் பிறந்தது அவர்கள் செய்த பாவம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது" என்று சொல்லி முடித்தான்.

புரோகிதன் எழுந்து அவர்களையும் பின் நகர்ந்து போகுமாறு சமிக்ஞை செய்தான். அவர்கள் நகர்ந்ததும், "இன்னும் யாருக்காவது ஏதாவது சொல்ல வேண்டும் என்று தோன்றினால் சொல்லலாம்!" என்றான்.

அப்பொழுது ஒரு கிழவி எழுந்தாள். அவளுக்குக் கண்கள் குருடு. அவள் எப்படியோ தட்டுத் தடுமாறிக் கொண்டு சிம்மாசனத்தின் அருகே வந்து விட்டாள். "நான் நான்கு வயதுப் பையன் ஒருவனின்



தகப்பனார் (வயிற்றெரிச்சலுடன்):- ஏண்டா, ஐம்பது ரூபாய்க்கா ஒரு கோட்டுத் தைத்துக்கொள்ளுவது?

பையன்:—நான் என்ன பண்ணட்டும், அப்பா? அவ்வளவு தான் கையில் பணம் இருந்தது!

தாயார். என் குழந்தையைப் பருன் தன் மாளிகையின் மேல் தளத்திலிருந்து கீழே விட்டெறிந்து கொன்று போட்டு விட்டான். அந்தச் சின்னஞ் சிறு அறியாக் குழந்தை செய்த குற்றம் என்ன தெரியுமா? அது பருனின் மாளிகை என்பதை அறிந்து கொள்ளாமல் அந்த மாளிகைக்குள் நுழைந்து விட்டதே, அது தான்! அறியாமற் செய்த பிழைக்காக அது தன் உயிரையே இழக்கும்படியாகி விட்டது!" என்று தன் துயரக் கதையைக் கூறிப் பெருமூச்சுவிட்டான். அவளுடைய குருட்டுக் கண்களின் இரு ஓரத்திலும் துயர நீர் சுரந்து வந்து கீழே விழுவோமா, வேண்டாமா என்று ஊசலாடிக் கொண்டு நின்றது.

அந்தக் கிழவியினுடைய சொற்களைக் கேட்டுப் பரிதாப நிலையைக் கண்ணுற்ற மக்களின் உள்ளத்திலே வேதனைக் கடல் குமுறிற்று. அவர்கள் தங்களையும் அறியாமல் விசித்து விசித்து அழலானார்கள். இளகிய நெஞ்சம் படைத்தவர்களைப் பற்றியோ கேட்க வேண்டியதே இல்லை. விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டார்கள். அதையெல்லாம் கேட்கத் தியூனஸின் உள்ளமும் உடைந்து விட்டது. அவனும் அழத் தொடங்கி விட்டான். அரசாங்கப் புரோகிதனும் அழத் தொடங்கி விட்டான்; யுத்த மந்திரியும் அழத் தொடங்கி விட்டான்; பிரதான மந்திரியும் அழத் தொடங்கி விட்டான். அங்கே கூடியிருந்தவர்களில் அழாதவர்களே இல்லை. கூடியிருந்த மக்கள் அனைவரும் கண்ணீரும் கம்பலையுமாகவே நின்று கொண்டிருந்தார்கள் என்றால் அதிகம் சொல்லுவானேன்?

இன்னும் எத்தனை எத்தனையோ ஏழை எளியோர்களும் கஷ்டப்பட்டோர்களும் தங்கள் தங்கள் துயரக் கதையைத் தெரிவிப்பதற்காக அங்கே வந்த வண்ணம் இருந்தனர். பருனின் கர்ண கடூரமான கல் நெஞ்சத்துக் கதைகளைக் கல்லும் கரையும் வண்ணம் சொல்லி அழுதனர். மக்களும் அழுத வண்ணமே அவற்றைக் கேட்டனர். அங்கே தன் துயரக் கதையைச் சொல்ல வந்தவர்களில் ஒருவராவது மக்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பாமல் இருந்தால் அல்லவா அவர்கள் அழாமல் இருப்பதற்கு? வந்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் துயரக் கதைகளைச் சொல்லித் தீர்த்து விட்டால் அழாமல் எப்படியிருக்க முடியும்? மக்கள் அக்கதைகளைக் கேட்டுப் பிழியப் பிழிய அழுது விட்டனர்.

கடைசியில் அரசாங்கப் புரோகிதன் உலர்ந்த கட்டைகளைப் போன்ற தன் கிழட்டுக் கைகளைத் தூக்கி நிறுத்தி, 'போதும்!' என்று ஜாடை காட்டினான். அப்புறம் தான் குறை கூற வருவோரின் கும்பல் குறைந்தது.

கூட்டத்திலே சந்தடி சற்று அடங்கியதும், அரசாங்கப் புரோகிதன், "பருன் அம்னஸ் செய்த பாவச் செயல்களின் குற்றப் பத்திரிகை மிக நீளமானது. அவன் செய்த குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. வேண்டுமளவு அவற்றைக் கேட்டு நமக்குக் காது புளித்து விட்டது. மிகுந்தவற்றைக் கேட்க நமக்கு நேரமும் இல்லை; கேட்பதனால் ஏதாவது பயன் விளையப் போவதும் இல்லை. பயனற்ற பேச்சைக் கேட்டுப் பொழுதை வீணாக்குவதனால் என்ன பயன்? ஆகவே, அவற்றை ஒரு புறம் மூட்டை கட்டி வைத்து விடுவோம். இனி நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றே ஒன்று தான். பருன் மூலம் யாராவது ஏதாவது நன்மை அடைந்திருக்கிறார்களா? அப்படிப்பட்டவர்கள் இச்சபையில் யாரேனும் இருந்தால் முன்வந்து சொல்லட்டும்!" என்றான்.

நாற்புறமும் நல்ல அமைதி நிலவியிருந்தது. மக்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளலாயினர். ஒன்று, இரண்டு... மூன்று......பத்து என்று கணங்கள் கழிந்து கொண்டேயிருந்தன. ஆனால் யாராவது நன்மையடைந்தவர்கள் இருந்தால் அல்லவா எழுந்து வருவதற்கு? ஏன்! அரசாங்கப் புரோகிதன், யுத்த மந்திரி, பிரதான மந்திரி, பருனின் சொந்த ஆலோசனையாளர்கள் முதலியவர்களில் கூட ஒருவருமே எழுந்து பருனின் தரப்பில் ஒரு வார்த்தை வாய்தவறிக் கூடச் சொல்ல முன்வரவில்லை. பருன் விரோதிகளை வேண்டுமளவு உண்டாக்கிக் கொண்டிருந்தான். ஆனால் ஒரு நண்பனைக் கூடத் தனக்கென்று ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அதைக் கண்ணுற்ற தியூனஸுக்குப் பருன் மீது கட்டுக்கடங்காத கருணை பிறந்தது. அவன் உலக மனைத்துக்கும் வேண்டுமானால் கொடிய காட்டு மிருகமாயிருக்கலாம்; விஷ ஜந்துவாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு அவன் எவ்வளவு நல்லவனாக இருந்தான்! அவளிடம் அவன் நடந்து கொண்ட விதம் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளுவதாக அல்லவா இருந்தது! அவனைப் போன்ற கருணையுள்ளம், நல்ல இதயம், விநய சுபாவம் படைத்தவனைத் தியூனஸ் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை! பருனைப் பற்றி நினைக்க நினைக்க அவளுடைய மனதிலே அவன்மீது அலாதிப் பற்றுதலும் பக்தி சிரத்தையும் ஏற்படலாயிற்று. அவனுடைய நன்றியை மறக்கலாகுமா? மறக்க முயன்றாலும் மறக்கத்தான் முடியுமா? (தொடரும்)




## 10. கார் விபத்தா, காதல் விபத்தா?

ஒரு நாள் திடீரென்று பிரேமாவுக்கு மோட்டார் விபத்து என்று கேள்விப்பட்டு அப்பு அவர்களுடைய வீட்டை நோக்கி ஓடோடியும் வந்தான்.

உண்மையாகவே மோட்டார் விபத்துத்தான். ஆனால் எவ்வித அபாயமும் இல்லாத மோட்டார் விபத்து. பிரேமாவின் தேகத்தில் இந்த விபத்தினால் கடுகளவு கூடக் காயம் ஏற்படவில்லை. முதல் நாள் மாலை பிரேமா லேடீஸ் கிளப்புக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்கு ரஸ்தாவின் குறுக்கே நடந்து போக யத்தனித்தாள். அப்போது இந்த விபத்து ஏற்பட்டது. பிரேமாவுக்கு இருபது கஜ தூரத்தில் ஒரு கார் அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. பாதி ரஸ்தா தாண்டியவுடன் பிரேமாவுக்கு இது தெரிந்தது. அது அந்தக் கணத்திலேயே தன் மீது மோதி விட்டதாகப் பிரேமா பீதியடைந்து விழுந்து விட்டாள். நல்ல வேளை, அந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்த வாலிபர் அவளுக்குப் பத்தடி முன்னாலேயே காரை 'பிரேக்' போட்டு நிறுத்தி விட்டார். இதனால் பிரேமாவுக்கு ஏற்பட்ட விபத்திற்கும் காருக்கும் சம்பந்தமில்லை. 'கார் தன் மீது மோதி விடுமோ!' என்று பிரேமா மூர்ச்சை போட்டு விழுந்தது தான் விபத்திற்கு முழுக் காரணம். எப்படியோ எல்லோரும் பிரேமாவுக்கு ஏற்பட்ட விபத்தைக் கார் விபத்தாகவே கருதினர். இதற்கு இன்னொரு ஆதாரபூர்வமான காரணமும் இருந்தது. காரைச் செலுத்தி வந்த வாலிபர் மூர்ச்சையடைந்த பிரேமாவைத் தம் காரிலேயே தூக்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய் அவள் மயக்கத்தைத் தெளிவித்து அவளுடைய வீட்டில் கொண்டு வந்து விட்டார். இதுவே பிரேமாவுக்குக் கார் விபத்துத்தான் என்று நம்ப முக்கிய காரணமாகி விட்டது. இது பிரேமா வீட்டில் மாத்திரம் இல்லை; ஊரிலேயும் சிறிது பரபரப்பை உண்டாக்கியிருந்தது.

அப்பு இந்தச் செய்தியைக் கேட்டதும் பிரேமாவுக்கு ஏதேனும் அபாயமான காயங்கள் ஏற்பட்டிருக்குமோ என்று துடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

வீட்டு வாசலில் முனுசாமியும் அவன் சம்சாரம் காமாட்சியும் ஏதோ மலர்ந்த முகத்துடன் சிரித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும்தான் அவன் மனது நிம்மதியடைந்தது. இருந்தாலும் படபடப்போடு, "என்ன, முனுசாமி! பிரேமா ஏதோ காரில் அடிபட்டு மிகவும் அபாயகரமாய்..." என்று அவன் சொல்லி முடிப்பதற்கு முன்னால் முனுசாமி அவனைத் தடுத்து, "பதட்டப்படாதீங்க; ஒன்றும் அபாயகரமில்லை. எல்லாம் மங்களகரமாய்த்தான் முடிந்திருக்கிறது. சின்னம்மா கார் தன் மேலே மோதிடுமோன்னு தான் பயந்து மயக்கம் போட்டு விழுந்துட்டாங்க. வேறொரு அபாயமுமில்லை!" என்றான் சிரித்துக் கொண்டே.

"கார் அவள் மீது மோத வந்தது உண்மைதானே! அந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்தவன் யார்! அந்தக் கார் யாருடையது! அவனைப் போலீசில்..." என்று படபடப்புத் தணியாமலேயே ஏதோ சொல்லிக் கொண்டு போனான் அப்பு.

"போலீசா......! அவரை ஏன் போலீசிலே பிடிக்கக் கொடுக்க வேணும்! அவர் ரொம்ப நல்ல மனிதர். சின்னம்மாவைக் காரிலே தூக்கிப் போட்டுக்கொண்டு, மயக்கத்தைத் தெளிய வைத்து வீட்டிலே கொண்டுவந்து சேர்த்தார். அது மட்டுமா! மணிக்கு ஒரு தடவை காரிலேயே வந்து பார்த்துவிட்டுப் போகிறார். எல்லாம் ஒரு தினுசா கடைசியில் மேளதாளத்தோடு மங்களமாகத்தான் முடியும் போலிருக்கிறது!" என்றான் முனுசாமி பெருமூச்சு விட்டுக் கொண்டே.

"இப்படி ஏதாவது தெய்வமாய்க் கொண்டு வந்து விட்டுத்தான் நல்ல காரியங்களெல்லாம் நடக்கிறது வழக்கம்", என்றாள் காமாட்சி.

"ஆமாம், நீயும் நானும் எப்படி! நீ ஒரு நாள் வாய்க்காலில் விழப் போனாய். அப்போது நான் உன் கையைப் பிடிச்சு மேலே தூக்கி விட்டேன். அதிலிருந்துதானே நாம் இருவரும் கல்யாணம் செய்துக்கலாம்னு தீர்மானித்தோம்!" என்றான் முனுசாமி.

"நான் வாய்க்காலில் விழப்போகல்லே; வாய்க்காலில் இறங்கித் தண்ணீர் குடிக்கப் போனேன். நீதான் நான் வாய்க்காலில் விழப்போகிறேன் என்று மிரண்டு ஓடிவந்து என் கையைப் பிடித்து இழுத்தாய்!" என்றாள் காமாட்சி.

"எப்படியோ! அதுதானே நாம் கல்யாணம் செய்துக்கவே காரணமாய் இருந்தது! அதைப் போலத்தான் சின்னம்மா காரில் அகப்பட்டுக்கிட்டாப்போலே மிரளவும், அந்த ஐயா காரை அவங்க மேலேயே விட்டுவிட்ட மாதிரி நினைச்ச, அவங்களைக் காரிலேயே

வீட்டிலே கொண்டுவைக்து விட்டாங்க. அதிலே இருந்து ஒருவர் மேலே ஒருவருக்கு ஆசை ஏற்பட்டு......'' என்று இழுத்தான் முனுசாமி.

அப்புவுக்கு முனுசாமியின் பேச்சு சிறிது குழப்பத்தையும் சம்சயத்தையும் கொடுத்தது. ''முனுசாமி, நீ சொல்லுகிறது தோன்றும் எனக்குப் புரியவில்லையே!'' என்றான் அவன்.

''புரியும்படியாச் சொல்லணுமா! கூடிய சீக்கிரம் சின்னம்மாளுக்குக் கல்யாணம் நடக்கும்போலிருக்குது. கடவுள் செயலிலே நடந்தா நல்லதுதானே!'' என்றான் முனுசாமி.

''அப்படி யென்றால் மாப்பிள்ளை......'' என்று இழுத்தான் அப்பு.

''நீங்க பயப்படாதீங்க! உங்களை மாப்பிள்ளையாக்கிட மாட்டாங்க; மாப்பிள்ளையாகிறதுக்குத்தானே அந்த ஐயா சின்னம்மா மேலே காரைவிட நினைச்சாரு!'' என்றான் முனுசாமி.

''சின்னம்மாவும் அப்படி மயக்கம் போட்டுக் கீழே விழுந்தது அதற்காகத்தான்னு நான் நினைக்கிறேன்!'' என்றான் காமாட்சி.

''இதென்ன, ஆச்சரியமாயிருக்கிறதே! தன் மீது காரை ஏற்ற வந்தவனையே அவள் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாளா!'' என்றான் அப்பு துடித்துக் கொண்டே.

''இதிலே ஒண்ணும் ஆச்சரியம் இல்லேங்க. அவங்க ரெண்டு பேரும் பார்த்தவுடனேயே ஒருத்தர் மேலே ஒருத்தர் ஆசைப்பட்டு விட்டாங்க. விஷயம் ரொம்ப மிஞ்சிப் போச்சுங்க. நீங்களும்தான் மாசக் கணக்கா சின்னம்மாளைக் கல்யாணம் செய்துக்கணும்னு முயற்சி செய்தீங்க. வெறும் பேச்சிலே இதெல்லாம் பலிக்குமா! இப்படி காரை, சைக்கிளை அவங்க மேலே மோதி ஒரு ஆசை உண்டாகும்படி செய்திருக்கணும். சும்மாப் பேசிப் பேசியே ஏமாந்து போயிட்டீங்க!'' என்றான் முனுசாமி.

''அவன் யார்!'' என்றான் அப்பு.


''அவன் இவன்னு சொல்லாதீங்க. அவர் இந்த வீட்டு மருமகப்பிள்ளையாகப் போகிறார். மரியாதையாய்ப் பேசணும். அவர் சும்மா வாய்ப் பந்தல் போடறவராய் இல்லே. பெரிய டாக்டராம். அவர் பேரு நீலகண்டனாம். சொந்தத்திலே கார் வைத்திருக்கிறார். பார்வைக்கும் பெரிய மனுசனாத் தான் தெரியுது!'' என்றான் முனுசாமி.

''ஆமாம், நல்லா அழகா உருவாக இருக்கிறார். சின்னம்மாவுக்கு ஏற்ற ஜோடிதான்!'' என்றாள் காமாட்சி.

இதையெல்லாம் கேட்கக் கேட்க அப்புவுக்கு ஆத்திரமும் கோபமும் புகைந்து வந்தன. தன்னுடைய முயற்சி பலிக்காமல் போனதில் ஏற்பட்ட ஏமாற்றமும் வெட்கமும் அவன் நெஞ்சை வாட்டி எடுத்தன. வரும்போது பிரகாசமாக இருந்த அவனுடைய முகம் கறுத்து வாடி வதங்கியது. அவன் தயங்கியபடியே நின்று கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் அந்த வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரிலிருந்து சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் கையில் ஒரு தோல் பெட்டியுடன் இறங்கினார். அவர் கழுத்தில் மாட்டப்பட்டிருந்த 'ஸ்டெதஸ்கோப்'பிலிருந்து அவர் ஒரு டாக்டர் என்பது எளிதில் விளங்கியது. அவர் அதி வேகமாக வீட்டிற்குள் நுழைந்தார். அப்பு அவரைப் பார்த்ததும் பிரமிப்படைந்து நின்றுவிட்டான். முனுசாமி சிரித்துக் கொண்டே உடம்பை வளைத்து அவருக்கு நமஸ்காரம் செய்தான்.

அவர் உள்ளே சென்றவுடனே முனுசாமி அப்புவைப் பார்த்து, ''பார்த்தீங்களா! இப்படித்தான் மணிக்கொரு தடவை வந்து சின்னம்மாவைப் பார்த்துவிட்டுப் போகிறார். சின்னம்மாவுக்கும் அவருக்கும் என்னதான் பேச்சு இருக்குமோ! ஓயாமல் மணிக்கணக் காப் பேசுறாங்க! ஒரே சிரிப்பும் கொம்மாளமும் தான்!'' என்றான்.

இந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து சங்கரன் வெளியே வந்தான். அப்பு முனுசாமியோடு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ''அடடே! அப்புவா!



வா! நான் இப்பொழுதுதான் உன்னைப் பார்க்கலாம் என்று கிளம்பினேன்!" என்றான்.

"நானும் உன்னைப் பார்க்கலாமென்றுதான் வந்தேன்" என்றான் அப்பு, தன் முகத்தில் புன்சிரிப்பைச் சிரமத்தோடு உண்டாக்கிக் கொண்டு.

"ரொம்ப சரி! வா, போவோம்!"

அப்புவும் சங்கரனும் மௌனமாக நடந்து வந்து கொண்டே இருந்தனர். அப்பு மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"என்ன சங்கர், பிரேமா ஏதோ காரில் அடிபட்டு விபத்தாமே!"

"ஆமாம், எல்லாம் முட்டாள் தனம்; அசட்டுத் தனம். பத்தடிக்கு முன்னாலேயே அவன் காரை 'பிரேக்' போட்டு நிறுத்தி விட்டான். அப்படி யிருக்கும்போது அது எப்படிக் கார் விபத்தாகும்!"

"பிரேமாகூட ஏதோ மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாளாமே!"

"சாதாரணமாகவே அவளுக்கு எப்பொழுதாவது திடீரென்று மயக்கம் வந்து விடுவது வழக்கம். அது அந்தச் சமயத்தில் வந்து விட்டது; அவ்வளவுதான்!"

"அதிருக்கட்டும்; அவளுக்கும் அவனுக்கும் ஏதோ காதல் ஏற்பட்டு விட்டது, கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று......!"

"ஆமாம், அதுதான் முட்டாள் தனம். அதைத்தான் நான் பயித்தியக்காரத்தனம் என்கிறேன்! உண்மையாக அவர்களுக்குள் காதல் ஏற்பட வேண்டுமென்றால் அவன் பத்தடிக்கு முன்னாலேயே காரை 'பிரேக்' போட்டு நிறுத்தி யிருக்கமாட்டான். இவளும் கார் சமீபத்தில் வருவதற்கு முன்னால் மூர்ச்சை போட்டு விழுந்திருக்க மாட்டாள்!"

"ஆமாம், இது ஏதோ முன் ஏற்பாடாகத் தான் நடந்திருக்கிறது."

"அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். ஆகவே அவர்களுக்குள் காதல் ஏற்பட்டு விட்டது. அதை நாம் தடுக்க முடியாது. ஆனால் எனக்கு அந்த டாக்டர் நீலகண்டனின் கொள்கை பிடிக்கவே இல்லை. அவனுக்குத் துளிக்கூடச் சமதர்மத்தில் நம்பிக்கை இல்லை."

"அப்படியா!" என்றான் ஆச்சரியத்துடன் அப்பு. அவன் சங்கரனோடு பேசிக் கொண்டு வந்தானே தவிர அவன் மனது வேறு ஏதேதோ திட்டங்களெல்லாம் போட்டுக் கொண்டிருந்தது.

"துளிக்கூட அவனுக்குச் சமதர்ம நோக்கமே கிடையாது. ஏழைகளுக்குப் பணமில்லாமல் வைத்தியம் செய்கிறானாம். பணக்காரர்கள் என்றால் பணம் கொடுத்தால்தான் வைத்தியம் செய்வானாம். என்ன வித்தியாசம், பார்! இது பணக்காரர்களைத் தாழ்மைப் படுத்தும் ஒரு சார்பான கயவலக் கொள்கை அல்லவா!"

"ஆமாம், அதிருக்கட்டும். அவனுக்குப் பிரேமாவைக் கல்யாணம் செய்து கொடுக்க உன் தகப்பனார் சம்மதித்து விட்டாரா!"

"அவர் சம்மதித்து விட்டார். எங்கேயாவது அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கட்டும். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் அவனுக்கு வரதட்சிணை பதினாயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறாராம். இதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

இதைக் கேட்டதும் அப்பு துள்ளிக் குதித்தான். "ஹா! என்ன அநியாயம்! பதினாயிரம் ரூபாய் வரதட்சிணையா! இதை நீ எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறாய், சங்கர்! உன்னுயிரை விட்டாவது இந்த வரதட்சிணைக் கொடுமையை நீ தடுத்தாக வேண்டும்" என்றான் அப்பு.

"நான் உண்ணாவிரதம் இருக்கத் தயார்; உயிரை விட்டு விடவும் தயார்! ஆனால் மிஸ்டர் அப்பு! அவன் வரதட்சிணையைப் பணமாக வாங்கிக் கொண்டால் அதைத் தடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். ஆனால் என் தகப்பனார் பதினாயிரம் ரூபாய் செலவில் அவனுக்கு ஒரு ஆஸ்பத்திரியல்லவா கட்டிக் கொடுக்கப் போகிறார்! இதை நான் தடுப்பதில் என்ன பிரயோஜனம்! ஆனால் நான் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்—ஆஸ்பத்திரி வைப்பதாய் இருந்தால் அதில் ஏழை, பணக்காரர் என்று வித்தியாசம் பாராமல் எல்லோரிடமும் பணம் வாங்கிக் கொண்டுதான் வைத்தியம் செய்ய வேண்டுமென்று!"



மனைவி:—எப்போது பார்த்தாலும் என் வீடு, என் வாசல், என் தோட்டம், என் துரவு என்றே சொல்லுகிறீர்களே! ஒருதரமாவது என்னையும் சேர்த்துக்கொண்டு நம் வீடு, நம் தோட்டம் என்று சொல்லுகிறீர்களா என்று பார்க்கிறேன்; உங்கள் வாயில் அந்த வார்த்தையே வரமாட்டேன் என்கிறதே?

புருஷன்:—சரி, இனிமேல் வரும். எங்கே நம் வேஷ்டி? எடு, பார்ப்போம்!

"பதினுயிரம் ரூபாயில் ஆஸ்பத்திரி வைப்பதைவிட நம்முடைய நான்கு வருஷ திட்டப்படி மலபாரில் ஒரு காடு வாங்கி அதை அழித்துப் பேப்பர் மில் வைத்தால் உலகத்தில் எவ்வளவு ஏழைத் தொழிலாளர்கள், பணக்கார முதலாளிகளெல்லாம் பிழைக்க வழி ஏற்படும்! ஆஸ்பத்திரி வைக்க, வைக்க உலகத்தில் வியாதிகள் அதிகமாகுமே தவிர வேறொரு புண்ணியமும் இல்லை"

"நீ சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது. ஆனல் நான் என்ன செய்ய முடியும்! பிரேமா உன்னைக் காதலிக்காததுதானே பிசகாய்ப் போய் விட்டது! தவிர என் தகப்பனரும் இந்தக் கார் விபத்திலாவது ஒரு நல்ல வரன் கிடைத்ததே என்று சந்தோஷப்படுகிருர்!"

"அப்படி என்றல் நான் கெட்ட வரனு!" என்றுன் அப்பு ரோசத்துடன்.

"நான் உன்னைக் கெட்ட வரன் என்று சொல்லுகிறேன்! உன்னைப் போல் உலக நலனுக்காகப் பெரிய பெரிய திட்டங்களை வகுக்கக்கூடிய மேதைகளை லேசில் கண்டு பிடிக்க முடியுமா! ஆனல் என் தகப்பனருக்கும் பிரேமாவுக்கும் அது விளங்காமல் போய் விட்டது தானே தப்பாய்ப் போய்விட்டது!"

"போனல் போகட்டும். பிரேமா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் போனல் போகட்டும். மூன்று முறை உலகம் சுற்றின நான் எவ்வளவு பெண்களைப் பார்த்திருப்பேன்! ஹாலிவுட்டில் 'ரோஸ் யங்' என்னும் பிரபல சினிமா நடிகை என்னைக் கண்டதும் அடங்காத காதல் கொண்டு விட்டாள். தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று என்னிடம் மன்ருடினள். அவளை நான் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் பெரிய கோடீசுவரனுகி இருப்பேன். ஆனல் நம் நாட்டுப் பெண்களைத் தவிர வேறு பெண்களைக் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று நிர்யாணித்து விட்டு விட்டேன். இப்பொழுது ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. மறுபடியும் ஹாலிவுட் போனல் அவளையே கல்யாணம் செய்து கொண்டு விடுவேன். போகட்டும்; நீ என் தங்கை மீனுவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிருயல்லவா!"

"அதிலென்ன சந்தேகம்! சூரியன் மேற்கே உதித்துக் கிழக்கே அஸ்தமிப்பதானலும் எனக்கும் மீனுவுக்கும் கல்யாணம் நடக்கத்தான் போகிறது. நான் அவளைத் தவிர வேறொரு பெண்ணையும் கண்ணெடுத்தும் பாரேன்!" என்றுன் ஆவேசமாகச் சங்கரன்.

"சரி, அவளுடைய கல்யாணச் செலவுக்ாக ஐயாயிரம் ரூபாய் பாங்கியில் போட்டு வைக்க வேண்டுமென்று கேட்டேனே, மறந்து விட்டாயா! அது தவிர இன்னொரு ஐயாயிரம் இருந்தாலும் என்னிடம் கொண்டு வந்து கொடுத்து விடு. ஏனென்றல் மீனுவுக்கும் உனக்கும் கல்யாணமானவுடன் அடுத்தபடியாக நம்முடைய நாலு வருஷ திட்டத்தில் கவனம் செலுத்தவேண்டும். அதற்கு ஐயாயிர ரூபாய் ஆரம்ப மூலதனமாக பாங்கியில் இருப்பது நல்லது!" என்றுன் அப்பு, மனதிற்குள் ஏதோ திட்டமிட்டு வைத்துக் கொண்டவன்போல.



கடைக்காரர்:—என்ன ஜோஸ்யரய்யா! போன வாரம் 'யமலோகம்' என்ற பத்திரிகை வாங்கினீர்கள்; அதற்கு முந்திய வாரம் 'கின்னர லோகம்' என்ற பத்திரிகை வாங்கினீர்கள்; அதற்கும் முந்தின வாரம் வேறு ஏதோ வாங்கினீர்களே ......!

ஜோஸ்யர்:—ஆமாம்; எந்தப் பத்திரிகைக்காரன் போடுகிற வார பலன் நமக்குப் பலிக்கிறது என்று மூன்று வாரமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன் ......!

"சரி, நானே பணம் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன். ஆனல் எல்லாம் ரகசியமாக இருக்கட்டும். பாங்கியில் அந்தப் பணத்தைப் போடுவதை விட உன் வீட்டிலேயே வைத்துக் கொண்டால் நல்லது!" என்றுன் சங்கரன்.

"இதோ பார், சங்கர்! என்னிடம் ஒரு ரகசியம் அகப்பட்டுக் கொண்டால் அது நான் சாகிற வரையில் என்னுடனே ரகசியமாய் இருந்து செத்தால்தான் உண்டு. மற்றபடி வெளியே கிளம்பவே கிளம்பாது. ஆகையால் நீ பயப்படாதே! அதை நான் பாங்கியில் கூடப் போடவில்லை. அதனல் ஏதேனும் சந்தேகம் எழலாம். என் வீட்டிலேயே ரகசியமாக வைத்துக் கொள்கிறேன்" என்றுன் அப்பு.

"அதுதான் சரி! அப்படி உன் கையில் பணம் இருப்பது வெளியே தெரிந்தால்கூட நான் கொடுத்தேன் என்று தெரியக் கூடாது!"

"நான் நீ கொடுத்தாய் என்று சொல்லி விடுவேனு! அப்படிச் சொன்னல் என்னைவிட முட்டாள் வேறு யாராவது இருக்க முடியுமா, சங்கர்! என் சொந்தப் பணம் என்றுதான் வெளியே சொல்லுவேன். பயப்படாதே!" என்றுன் அப்பு.

பிரேமாவைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாவிட்டாலும் சங்கரன் மூலமாகத் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதில் அப்பு கண்ணுய் இருந்தான். (தொடரும்)

# பாலும் பாவையும்

## 13

நெடுநாட்களுக்குப் பிறகு அன்று சந்தித்த சியாமளாவும் அகல்யாவும் சாப்பிட்டு முடித்ததும் நிம்மதியாக உட்கார்ந்து, நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர். மணிவண்ணனுக்குத் தன்னைத் தனியாக விட்டு விட்டு அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தது பிடிக்கவில்லை. எனவே, அவன் கைக் கடிகாரத்தை அடிக்கடி பார்ப்பதும், புருவங்களை உயர்த்தி அவர்களைப் பார்த்துத் தனக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொள்வதுமாகக் கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

திடீரென்று என்ன தோன்றிற்றோ என்னவோ, அவன் 'திடுதிடு' வென்று எழுந்து வாசலுக்குச் சென்று வானத்தைப் பார்த்தான். 'என்னவோ, ஏதோ' என்று எண்ணிச் சியாமளா, அகல்யாவுடன் அவனைப் பின்தொடர்ந்து வந்து, "என்ன பார்க்கிறீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டாள்.




"ஒன்றுமில்லை; வானத்திலிருந்து நட்சத்திரங்கள் விழுகின்றனவா என்று பார்க்கிறேன்!" என்றான் அவன்.

"வானத்திலிருந்தாவது, நட்சத்திரங்கள் விழுவாவது!—உங்களுக்கென்ன. பைத்தியமா பிடித்திருக்கிறது!"

"எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை; தமிழ்க் கவிஞர் ஒருவர், 'பெண்ணிருவர் பேசில் விழும் வான் மீன்கள்' என்று பாடியிருக்கிறார் அல்லவா! அவருடைய வாக்கு பலிக்கிறதா என்று பார்க்கிறேன்!" என்றான் அவன்.

"ஆணிருவர் பேசில் அலைகடலும் ஓயுமோ!" என்றான் அவன் பதிலுக்கு.

அகல்யா சிரித்துக் கொண்டே அவனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

மீண்டும் இருவரும் பேசத் தொடங்கினர்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, சமையற்காரன் இரண்டு 'சோடா பாட்டில்'களை வாங்கிக் கொண்டு வந்து அவர்களுக்கு முன்னால் 'புஸ்ஸ்' என்று திறந்தான்.

"சோடா யாருக்கு...!" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் சியாமளா.

"உங்களுக்குத்தான்!" என்றான் அவன்.

"எதற்காம்......!"

"தொண்டை வறண்டு போகாமல் இருப்பதற்காக ஐயா கொடுக்கச் சொன்னார்!" என்றான் அவன்.

"சரி, 'ரொம்ப தாங்ஸ்' என்று நான் சொன்னதாக அவரிடம் சொல்லு!" என்று ஒன்றை வாங்கி அகல்யாவிடம் கொடுத்துவிட்டு, இன்னொன்றை வாங்கிச் சியாமளா சாப்பிட்டு வைத்தாள்.

மறுபடியும் பேச்சு தொடங்கிற்று.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இரண்டு நாய்கள் ஒன்றை யொன்று பார்த்து வெகுண்டு, 'உர்ர்ர்...வள், வள்...!' என்று உச்சஸ்தாயியில் குரைக்கும் சத்தம் கேட்கவே, சியாமளா வெளியே வந்து பார்த்தாள். மணிவண்ணன் கர்ம சிரத்தையோடு எதிர் வீட்டு நாயை அவிழ்த்துக் கொண்டு வந்து, தன் வீட்டு நாயுடன் மோத விட்டுக் கொண்டிருந்தான்.

"ரொம்ப அழகாய்த்தான் இருக்கிறது! — உங்களுக்கு வேறே வேலை யொன்றும் இல்லையா! — இதற்குத்தானா இன்று 'லீவ்' எடுத்துக் கொண்டு விட்டீர்கள்!" என்று சியாமளா எரிந்து விழுந்தாள்.

"வேலை யிருந்தால் நான் இப்படி நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருப்பேனா!" என்றான் அவன்.

"சரி, நாங்கள் 'பீச்'சுக்காவது போய்த் தொலைகிறோம்; நீங்கள் நிம்மதியாக இருங்கள்!" என்று சொல்லிவிட்டு, "டிரைவர், காரைக் கொண்டு வா!" என்று அவள் உத்தரவிட்டாள்.

"நான் வர வேண்டாமா!" என்றான் அவன்.

"வேண்டாம்......"

"ஏன், ஏதாவது இரகசியம் பேசப் போகிறீர்களோ!"

"ஆமாம்."

"பெண்களைவிட ஆண்கள் இரகசியத்தைக் காப்பாற்றுவதில் கவனமா யிருப்பார்கள்..."

"இருக்கலாம்; இருந்தாலும் உங்களுடைய வாலைச் சுருட்டிக் கொண்டு நீங்கள் வீட்டிலேயே இருப்பதுதான் நல்லது!" என்று சொல்லி விட்டுச் சியாமளா, அகல்யாவை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

"சரி, போய்த் தொலையுங்கள்!" என்று ஆசிர்வதித்து விட்டு, "டேய், சம்பு! வீட்டுக்

● "கடைசியில் 'என்ன இருந்தாலும் பெண் பெண்தான்!' என்பதை நீ காட்டிவிட்டாயே?" —மணிவண்ணன்.

● "நீங்களும்தான் 'என்ன இருந்தாலும் ஆண் ஆண்தான்!' என்பதைக் காட்டிவிட்டீர்கள்!" —சியாமளா.



கச்சேரிக்கு ஆட்களைத் தயார் பண்ணுடா!" என்றான் மணிவண்ணன், சமையற்காரனை நோக்கி.

"அப்படியே ஆகட்டுங்க!" என்றான் அவன்.

* * *

'ஏதையும் ஒளிக்கக் கூடாது; எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும்' என்று வரும்போது தீர்மானித்துக்கொண்டு வந்த அகல்யா, வந்த பிறகு சியாமளாவிடம் ஒன்றும் சொல்லவில்லை; சொல்வதற்கு வேண்டிய தைரியமும் அவளுக்கு ஏனோ வரவில்லை. ஆரம்பத்தில், "சௌக்கியந்தானே!" என்று சம்பிரதாயத்தையொட்டி அவள் விசாரித்தபோது, "சௌக்கியந்தான்!" என்று அகல்யா ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டாள். அது மட்டுமல்ல; "அவரையும் அழைத்துக்கொண்டு வருவதுதானே!" என்று அவள் மேற்கொண்டு கேட்டதற்கு, "அவர் ஏதோ வேலையாகப் பம்பாய்க்குப் போயிருக்கிறார்; வருவதற்கு ஒரு வாரமாவது ஆகும் என்றார். எனக்கு வீட்டில் தனியாக இருக்கப் பிடிக்கவில்லை; அதனால் தான் உன்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டேன்!" என்று வேறு சொல்லித் தப்பித்துக் கொண்டு விட்டாள்.

இவ்வாறு சொல்லிவிட்ட பிறகுதான் கனகலிங்கத்தைப் பற்றிய ஞாபகம் அகல்யாவுக்கு வந்தது. 'ஒருவேளை அவர் நம்மைக் காணாமல் என்ன பாடு பட்டுக்கொண்டிருப்பாரோ!' என்று ஒரு கணம் எண்ணி அவள் வருந்தினாள். மறுகணம், 'நம்மைக் காணவில்லை என்பதற்காக அவர் ஒருவேளை சந்தோஷப்பட்டாலும் பட்டிருப்பார்!' என்று எண்ணி அவள் ஆறுதல் அடைந்தாள்.

இப்பொழுது கடற்கரை நெருங்க, நெருங்க அவளுக்கு இந்திரனைப்பற்றிய ஞாபகம் வந்தது. 'அவன் நம்மை அழைத்துக்கொண்டு எத்தனை முறை இங்கே வந்திருக்கிறான்! என்னவெல்லாம் பேசியிருக்கிறான்! எப்படி எப்படியெல்லாம் நம்முடன் விளையாடியிருக்கிறான்!—எல்லாவற்றையும் ஒரு நொடியில் மறந்துவிட்டு அந்தப் பாவி போயே போய் விட்டானே!' என்று எண்ணி அவள் நெட்டுயிர்த்தாள்.

அடுத்தாற்போல் தசரத குமாரனின் ஏக்கம் நிறைந்த முகம் அவள் மனக் கண்ணில் வந்து உதித்தது. 'பாவம், அவர் எத்தனை முறை இங்கு வந்து நம்மைச் சுற்றிச்சுற்றி வந்திருக்கிறார்! — அவரிடம் இப்பொழுது கொண்டும் அநுதாபத்தை நாம் அப்பொழுதுகொள்ள வில்லையே! அவர் எவ்வளவுக் கெவ்வளவு நம்மை நெருங்க அஞ்சினாரோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் அவரைக் கண்ட போதெல்லாம் சிரித்துத் தொலைத்தோமே!' என்று எண்ணி, அவள் உள்ளம் புழுங்கினாள்.

இந்தச் சமயத்தில், "கோட்டையைப் பிடித்தது போதும்; இறங்குடி அம்மா, இறங்கு!" என்று யாரோ சொல்வது போலிருக்கவே, அகல்யா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். கார் மெரினா கடற்கரை யருகே நின்றிருந்தது; சியாமளா கீழே இறங்கி யிருந்தாள்.

அவ்வளவுதான்; "இதோ, இறங்கிவிட்டேன் மகனே, இறங்கி விட்டேன்!" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, அகல்யா பரபரப்புடன் கீழே இறங்கினாள். இருவரும் கைகோத்த வண்ணம் 'அன்ன நடை'க்குப் பதிலாக 'யானை நடை' நடந்து சென்றார்கள்.

"இந்த மணலுக்கு வாய் மட்டும் இருந்தால் எத்தனை காதல் கதைகள் சொல்லும், தெரியுமா!" என்றாள் அகல்யா.

"ஆமாம்; உன்னைப்போல் எத்தனையோ காதல் பைத்தியங்களை இந்த மணல் பார்த்திருக்குமல்லவா!" என்றாள் சியாமளா சிரித்துக்கொண்டே.

"போடி, எனக்கு எல்லாம் தெரியும்!" என்று அகல்யா, அலைகளுக்கு இடையே சியாமளாவைப் பிடித்துத் தள்ளினாள்.

"சரி, வாடி! எனக்கும் எல்லாம் தெரியும்!" என்று சியாமளா, அகல்யாவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அலைகளுக்கு இடையே நின்றாள்.

"நான் மணிவண்ணன் இல்லேடி, மணிவண்ணன் இல்லே!" என்று அகல்யா, சியாமளாவைக் கிள்ளினாள்.

"நானும் இந்திரன் இல்லேடி, இந்திரன் இல்லே!" என்று சியாமளா, அகல்யாவைக் கிள்ளினாள்.

இம்மாதிரி, கரையோரத்தில் நின்று இருவரும் கொஞ்ச நேரம் அலைகளுடன் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, ஒரு படகின் மறைவில் உட்கார்ந்தார்கள்.

அப்பொழுது கடலில் குளித்துவிட்டு நிலவு மேலே மேலே வந்து கொண்டிருந்தது. அந்த அற்புதமான காட்சியை அகல்யாவும் சியாமளாவும் பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவன் வேட்டைக்காயைப் போல இரைக்க இரைக்க வந்து, அவர்களை உற்று உற்றுப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்!—நாங்கள் காதலர்களென்று பார்க்கிறீர்கள்!—இல்லை, இல்லை.

ளாலும் பெண்தான்; இவளும் பெண்தான்!" என்றாள் சியாமளா.

"ஒன்றாய்ச் சொன்னாய்!—ஊருக்குப் பயந்து, உற்றாருக்குப் பயந்து, சிறிது நேரம் இங்கேயாவது நிம்மதியா யிருக்கலாம் என்று வரும் காதலர்களைப் படாத பாடுபடுத்துவதே இவர்களுடைய வேலையாய்ப் போய் விட்டது!" என்றாள் அகல்யா வெறுப்புடன்.

அந்த ஆசாமி அப்புறம் அவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை; வெட்கித் தலை குனிந்தபடி 'விறுவிறு' வென்று நடந்து அப்பால் சென்று விட்டான்.

இருவரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்!

"அது சரி; நீ என்னவெல்லாமோ சொன்னாய்—உன்னுடைய காதலன் யார் என்று மட்டும் இதுவரை எனக்குச் சொல்லவேயில்லையே!" என்றாள் சியாமளா.

"சொன்னால் தெரியுமா!—பார்த்தால்தானே தெரியும்!" என்றாள் அகல்யா.

"பார்ப்பதற்குத்தான் நீ அவரை அழைத்துக் கொண்டு வரவில்லையே!"

"அவர் ஊரில் இருந்தால்தானே அழைத்துக் கொண்டு வருவதற்கு......!"

"அவன் யார், அவன்!—யாராயிருந்தாலும் அவன் நம்முடன் படித்துக் கொண்டிருந்தவனாய்த்தானே இருப்பான்!"

"இல்லை; நீ கலாசாலையை விட்டு நின்ற பிறகுதான் அவர் வந்து சேர்ந்தார்......"

"அப்படிச் சொல்லு; அதுதான் எனக்கு அவரைத் தெரியவில்லை!" என்றாள் சியாமளா.

அகல்யா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அதற்குப் பிறகு நடுக்கடலைப் போல இருவரும் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார்கள். மறு நிமிஷம், "நீ இங்கே வந்த பிறகு உன் அப்பாவைப் பார்த்தாயோ!" என்று சியாமளா திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவள்போலக் கேட்டாள்.

"இல்லை—அவர் இங்கே இருக்கிறாரா என்ன, நான் அவரைப் பார்ப்பதற்கு!" என்றாள் அகல்யா.

"உனக்கு விஷயம் தெரியாதா! அவர் இங்கே வந்து விட்டார். நான் இருக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில்தான் அவர் இருக்கிறார்!" என்றாள் சியாமளா.

அகல்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "நிஜமாகவா சொல்கிறாய்!" என்று அவள் வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம்; ஒரு வாரத்துக்கு முன்னால் அவரை நான் இங்கே சந்தித்து உன்னைப் பற்றி விசாரித்தேன். நீ இறந்து விட்டதாகவும், அதற்குப் பிறகு ஊரில் இருக்கத் தமக்குப் பிடிக்காமற் போய் விட்டதாகவும் அவர் என்னிடம் சொன்னார். எனக்கு விஷயம் புரிந்து விட்டது; பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் நான் நழுவி விட்டேன்!" என்றாள் சியாமளா.

இதைச் சொல்லிவிட்டு அவள் அகல்யாவின் முகத்தைச் சந்தேகக் கண்களோடு பார்த்தாள். அவள் எதிர்பார்த்தபடி அவளுடைய கண்களிலிருந்து நீர் 'பொலபொல' வென்று உதிர்ந்து கொண்டிருந்தது. அவ்வளவுதான்; "சரி சரி! வா; போவோம்!" என்று அவள் கரத்தைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வந்து காரில் உட்கார வைத்தாள்.

வழியில் இருவரும் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் வீட்டை அடைந்தபோது மணிவண்ணன் ரேடியோவைத் திருப்பி அன்றையச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஏற்கெனவே ரொம்ப சுறுசுறுப்பு; இந்த ரேடியோக்காரர்கள் வேறு அன்றாடச் செய்தியைச் சொல்லி உங்களைப் போன்றவர்களுக்குப் பத்திரிகை படிக்கும் அவசியம்கூட இல்லாமற் செய்து விடுகிறார்கள்!" என்று சொல்லிக் கொண்டே சியாமளா உள்ளே நுழைந்தாள்.

"அப்படியானால் நீ என்னைச் சோம்பேறி என்று சொல்கிறாயா!" என்றான் மணிவண்ணன்.

"இல்லாமல் என்ன......!"

"ரொம்ப சந்தோஷம்; சோம்பேறித்தனத்தில்தான் சுகமும் இருக்கிறது......!"

"ஆமாம், ஆமாம், அதனால்தான் ஊரில் சாமியார்களின் கூட்டம்கூட வர வர அதிகமாகிக் கொண்டே போகிறது. நீங்களும் வேண்டுமானால் சாமியாராய்ப் போய் விடுங்களேன்!" என்றாள் சியாமளா.

"உன்னை விட்டு விட்டா!—ஊஹூம்; ஒரு நாளும் முடியாது!" என்று மணிவண்ணன் அவளை நெருங்கினான்; அவள் விலகினாள்.

இருவரும் சிரித்தார்கள்; அகல்யாவும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தாள்.

இம்மாதிரிப் பேச்சும் சிரிப்புமாக அன்றையப் பொழுது எப்படியோ கழிந்தது. மறு நாள் மாலை மணிவண்ணன் காரியாலயத்திலிருந்து வரும்போது வழக்கத்துக்கு விரோதமாக இரண்டு முழம் கதம்பம் வாங்கிக்கொண்டு வந்தான். "ஒரு முழம் போதாதா!—இரண்டு முழங்கள் என்னத்துக்கு!" என்று சியாமளா கேட்டாள்.

"உன் சிநேகிதிக்கு வேண்டாமா!" என்றான் அவன்.

"ஓஹோ!" என்று அவள் தன் விழிகளை உயர்த்தி அவனை ஒரு தினுசாகப் பார்த்தாள்; அவனும் பதிலுக்கு அவளை ஒரு தினுசாகப் பார்த்து வைத்தான்.

அவ்வளவுதான்; அடுத்த நாள் முதல் அந்த வீட்டிலிருந்த கலகலப்பு அடங்கி விட்டது. மணிவண்ணன் அதைப் பொருட்படுத்தவில்லை. அன்றிலிருந்து எதை வாங்கிக் கொண்டு வந்தாலும் அவன் இரண்டிரண்டு வாங்கிக்



கொண்டு வந்தான். ஸியாமளாவுக்கு இது பிடிக்கவில்லை. அவள் என்ன சொல்வது, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள். ஆனால், அதற்காகத் தன்னுடைய வெறுப்பை அவள் வெளியே காட்டிக்கொள்ள விரும்ப வில்லை; ஏனெனில், அவள் படித்த பெண்ணா யிருந்தாள். இல்லை யென்றால், 'பெண்கள் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் சிநேகம் செய்து கொள்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு சீக் கிரம் சண்டையும் போட்டுக் கொள்வார்கள்' என்பதை அவள் நிரூபித்திருக்க மாட்டாளா!

அகல்யாவோ, அந்த வீட்டில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்தும் உணராதவள் போல் இருந்தாள்—'உணர்ந்து என்ன செய்வது! எங்கே போவது!' — அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இப்படியே சிலநாட்கள் கழிந்தன. மணிவண்ணன் ஒரு நாள் மாலை வரும்போது தன்னுடன் தன் நண்பன் ஒருவனையும் அழைத் துக்கொண்டு வந்தான். அந்த நண்பன் தன் னுடைய பள்ளித் தோழனென்றும், ஏதோ வியாபார விஷயமாகச் சென்னைக்கு வந்திருக் கிறானென்றும், திரும்பிச் செல்ல இரண்டு நாட்களாவது ஆகுமென்றும் அவன் தன் மனைவியிடம் சொன்னான்.

இதைக் கேட்டதும் ஸியாமளாவின் உள்ளத் தில் 'பளிச்'சென்று ஒரு யோசனை உதித்தது. அதன்படி, மறு நாள் காலை எழுந்ததும் அவள் அவசர அவசரமாக இரண்டு கைக் குட்டைகளைத் தயார் செய்வதில் முனைந்தாள். அவற்றில் தன்னுடைய பெயரையும் வர்ண விசித்திரமான நூல்களைக் கொண்டு பொறித்தாள்.

அன்று மாலை மணிவண்ணன் தன்னுடைய நண்பனுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த போது, ஸியாமளா அந்தக் கைக் குட்டைக ளோடு விஷமத்தனத்துடன் சிரித்துக் கொண்டே அவனை நெருங்கினாள்.

"என்ன!" என்று கேட்டான் அவன்.

"ஒன்றுமில்லை — இந்தாருங்கள்; இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக் கொள் ளுங்கள்!" என்று அவனிடம் ஒரு கைக்குட்டை யைக் கொடுத்துவிட்டு, இன்னொன்றை அவ னுடைய நண்பனிடம் கொடுத்தாள் அவள்.

மணிவண்ணனுக்கு இது பிடிக்கவில்லை. "ஓஹோ!" என்று அவன் தன் விழிகளை உயர்த்தி அவளை ஒரு தினுசாகப் பார்த் தான்; அவளும் பதிலுக்கு அவனை ஒரு தினுசாகப் பார்த்து வைத்தாள்.

இருவரும் சிரித்தார் கள். மணிவண்ண னு டைய நண்பனுக்கு விஷ யம் புரியவில்லை; அவன் அவர்களை வியப்புடன் பார்த்தான்.

ஆனால், அகல்யா வுக்கு விஷயம் புரிந்து விட்டது. அவள் அதற் காக ஸியாமளாவை நொந்து கொள்ள வில்லை; தன்னைத்தானே




நொந்துகொண்டாள். அது மட்டுமல்ல; 'ஸியா மளாவை விடக் கனகலிங்கம் எவ்வளவோ மேல்!' என்ற தீர்மானத்துக்கும் அவள் உடனே வந்தாள்.

அதற்குப் பிறகு அங்கே இருக்க அவளுக்குப் பிடிக்குமா! இருந்தால்தான் ஸியாமளா அவளை இருக்க விடுவாளா! — விஷயம் ரஸாபாஸ மாகப் போவதற்குள் தானே அந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவது நல்லதென்று தோன்றிற்று அவளுக்கு. அன்றிரவே ஸியா மளாவிடம் விடை பெற்றுக்கொண்டு அவள் கிளம்பினாள். அவளுடைய தலை மறையும் வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்து விட்டுச் ஸியாமளா திரும்பினாள்.

"கடைசியில் 'என்ன இருந்தாலும் பெண் பெண்தான்!' என்பதை நீ காட்டிவிட்டாயே!" என்றான் மணிவண்ணன்.

"நீங்களும்தான் 'என்ன இருந்தாலும் ஆண் ஆண்தான்!' என்பதைக் காட்டி விட்டீர்கள்!" என்றாள் ஸியாமளா.

* * *

'இனி என்ன சொன்னாலும் சரி, என்ன செய்தாலும் சரி; அவர்தான் நமக்குக் கதி!' என்று துணிந்து அகல்யா கனகலிங்கத்தின் அறையை நோக்கி நடந்தாள்.

வழியில் நாதஸ்வரமும் கொட்டு மேளமும் பாண்டு வாத்தியங்களும் முழங்க, 'காஸ் லைட்'டுகள் கண்ணைப் பறிக்க, மணமகன் ஊர் வலமொன்று குறுக்கிட்டது. அகல்யா அந்த ஊர்வலத்துக்கு அருகே செல்லும்போது, யதேச்சையாகக் காரில் உட்கார்ந்திருந்த மாப் பிள்ளையைப் பார்த்தாள்.


'ஐயோ, இது என்ன!—காரில் மலர் மாலை யுடன் உட்கார்ந்திருப்பவன் அந்தக் கிராதகன் போலிருக்கிறதே......!'

அகல்யாவால் தன் கண்களை நம்ப முடிய வில்லை; இன்னொரு முறை அவற்றைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தாள்.

'ஆம்; சந்தேகமே யில்லை—அந்தப் பாவி இந்திரன்தான் மணமகன் கோலத்தில் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான்!'

அவ்வளவுதான்; அவள் விழிகள் பிதுங்கின. தலை 'கிறுகிறு' வென்று சுற்றியது. பூமி தன்னை விழுங்குவது போலவும், ஆகாயம் அதற்கு இடம் கொடாமல் தன்னை அந்தரத் தில் தூக்கிக் கொண்டு செல்வது போலவும் அவள் ஒரு கணம் பிரமை யடைந்தாள். மறு கணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

'அட, மோசக்காரா! உனக்கு மண ஊர்வலம் ஒரு கேடா! — அதை விட உன்னுடைய பிண ஊர்வலத்தைக் கண்டி ருந்தால் என் கண்கள் குளிர்ந்திருக்குமே.....!'



அகல்யாவால் அந்தக் காட்சியை அதற்கு மேல் பார்க்கமுடியவில்லை. அவள் இரு கண்களையும் இரு கைகளால் பொத்திக்கொண்டு, குமுறி வரும் துக்கத்தை அடக்க முடியாமல் விக்கி விக்கி அழுதாள்.

அதற்குள் ஊர்வலம் அவளைக் கடந்து வெகு தூரம் சென்று விட்டது. ஆயினும் அந்தப் 'பாண்'டின் மேல் அடிக்கும் ஒவ்வொரு அடியும் அவள் தலைமேல் 'தண், தண்' என்று அடிப்பது போலிருந்தது. அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது அவளுக்கு. ஓடோடியும் சென்று அவன் மென்னியைப் பிடித்துத் திருகிக் கொன்றுவிடலாமா என்று அவள் நினைத்தாள். ஆனால் தமிழ் நாட்டுப் பெண்களுக்கே உரித்தான சகிப்புத் தன்மையும் பெருந்தன்மையும் அதற்குக் குறுக்கே வந்து நின்று தொலைத்தன.

'சீசீ! எவ்வளவு பயங்கரமான யோசனை!—நம்மால் ஒரு பாவமும் அறியாத அந்த மணமகளின் வாழ்க்கை ஏன் பாழாக வேண்டும்!—அவன் வாழட்டும்; அவளுக்காக அந்தத் துரோகியும் வாழட்டும்!'

இந்த முடிவுக்கு வந்ததும் அவள் அங்கே நிற்கவில்லை; 'மடமட' வென்று நடந்தாள். அப்படி நடக்கும்போது, 'யார் கை விட்டாலும் அவர் நம்மைக் கைவிட மாட்டார்!' என்னும் நம்பிக்கை அவளுடைய இதய அந்தரங்கத்தில் மேலோங்கி நின்றது.

## 14

சென்னையில் மதுவிலக்கு அமுலுக்கு வந்த பிறகு ஆங்கில மருந்துக் கடைகளில் வியாபாரம் மும்முரமாக நடக்க வாரம்பித்தது. ஏனெனில், மதுவரக்கன் பல பெயர்களுடன் அவதாரம் எடுத்து அங்கே வந்து சேர்ந்திருந்தான். இதன் காரணமாகப் பலர் மதுக் கடைக்குப் பதிலாக மருந்துக் கடையை அங்கங்கே திறந்து வைத்தனர். அவற்றில் ஒன்றில்தான் கனகலிங்கத்துக்கு வேலை கிடைத்தது. மாதம் அறுபது ரூபாய் சம்பளம் என்றும் சொன்னார்கள்.

இந்த வேலையை அன்று காலையில் ஏற்றுக் கொள்ளும்போது கனகலிங்கம் உற்சாகமாய்த்தான் இருந்தான். ஆனால் மாலை வரைகூட அந்த உற்சாகம் நீடிக்கவில்லை.

மறுநாள் காலை, "ஏண்டா, நீ வேலைக்கு வரவில்லையா!" என்று கேட்டுக் கொண்டே, வழக்கம் போல் வந்தான் ராதாமணி.

"இல்லை" என்றான் அவன்.

ராதாமணி, "ஏன்!" என்று திடுக்கிட்டுக் கேட்டான்.

"எனக்கு அந்த வேலை பிடிக்கவில்லை....."

"இது என்ன கூத்து!—ஏன் பிடிக்கவில்லை!" என்று கேட்டான் ராதாமணி.

"அங்கே மருந்தா விற்கச் சொல்கிறார்கள்!—மதுவல்லவா விற்கச் சொல்கிறார்கள்!" என்றான் கனகலிங்கம் வெறுப்புடன்.

"எதை விற்கச் சொன்னால் என்ன!—உனக்கு மாதம் பிறந்தால் கனை கனையாக அறுபது ரூபாய் கிடைக்குமோ, இல்லையோ!—புத்தகக் கடையில் மாதம் முப்பது ரூபாய்க்கு 'லாட்டரி' அடித்துக் கொண்டிருந்ததைவிட இது எவ்வளவோ மேலல்லவா!"

"இருந்தாலும் எனக்கு அங்கே ஆத்ம திருப்தி இருந்தது; இங்கே அது இல்லை."

"ஆத்மாவாவது, திருப்தியாவது!—பணத்தைப் பாருடா, பணத்தை.....!"

"பணம் திருடினால் கிடைக்கிறது; விபசாரம் செய்தால் கிடைக்கிறது. அதற்காக அந்தத்

தொழிலைச் சான் மேற்கொண்டு விடுவதா, என்ன !—போடா, போ !''

''நீ இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் பிழைத்த மாதிரிதான்......''

''பிழைக்காவிட்டால் செத்துத்தானே போகப் போகிறேன் !—போனால் போகிறேன். மனதுக்குப் பிடிக்காத தொழிலைச் செய்து பிழைப்பதை விடச் செத்துப் போவது எவ்வளவோ மேல் !''

இதற்குப் பிறகு ராதாமணி அவனிடம் ஒன்றும் சொல்லவில்லை ; பேசாமல் கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

அவள் சென்றதும் கனகலிங்கம் சாவகாசமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே கிளம்பினான். அப்போது பாகீஸ்தானுக்குச் சென்றிருந்த வீட்டுக்காரச் சாயபு காரிலிருந்து இறங்கி, உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

''வாருங்கள், வாருங்கள் ; — நானும் உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் !'' என்று சொல்லிக்கொண்டே, அவரிடம் ராதாமணி கொண்டு வந்து கொடுத்த இருபது ரூபாயை எடுத்துக் கொடுத்து, ''உங்களுக்கு இரண்டு மாத வாடகைப் பணம் சேர வேண்டுமல்லவா ! — அதுதான் இது !'' என்றான் கனகலிங்கம்.

''அச்சா !'' என்று சொல்லிக்கொண்டே, அந்தப் பணத்தை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார் சாயபு.

''பஹுத் அச்சா !'' என்று கனகலிங்கம் பதிலுக்குச் சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு, ''உங்களுக்கு யாராவது பெரிய மனிதர்களைத் தெரியுமா !'' என்று விநயத்துடன் கேட்டான்.

''ஓ, தெரியுமே ? — உங்களுக்கு என்ன வேணும் !'' என்று கேட்டார் சாயபு.

''ஒரு பெண்ணை எப்படியாவது 'ஸேவா ஸதன'த்தில் சேர்த்துவிட வேண்டும். அதற்கு யாராவது ஒரு பெரிய மனிதர் சிபார்சு செய்தால் தேவலை.....''

''அதற்கென்ன, எத்தனையோ பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள் — சேர்த்து விட்டால் போச்சு !''

''ஞாபகம் இருக்கட்டும் ; மறந்து விடாதீர்கள்......''

''நானாவது, மறக்கவாவது !—நீங்கள் போய் வாருங்கள், ஸார் !'' என்று சொல்லிவிட்டுச் சாயபு உள்ளே சென்றார்.

'அப்பாடா ! அகல்யாவைப் பற்றிய கவலை விட்டது !' என்ற மகிழ்ச்சியுடன் கனகலிங்கம் கடையைக் கட்டினான்.

* * *

நாள் பூராவும் வேலைக்காக எங்கெல்லாமோ அலைந்து விட்டு, அன்று மாலை 'மௌண்ட் ரோ'டில் 'பஸ்'ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தான் கனகலிங்கம். நிமிஷத்துக்கு நிமிஷம் 'ஸ்டாண்'டில் கூட்டம் அதிகரித்துக்கொண்டே சென்றது. 'பஸ்' வந்ததோ இல்லையோ, அத்தனை பேரும் விழுந்தடித்துக் கொண்டு ஏறினார்கள். கனகலிங்கமும் வேறு வழியின்றி அவர்களில் ஒருவனாக முண்டியடித்துக் கொண்டு ஏறினான். எத்தனையோ பேரை ஏமாற்றிவிட்ட பெருமையுடன் 'பஸ்' உறுமிக் கொண்டு கிளம்பிற்று.

கண்டக்டர், ''டிக்கெட், டிக்கெட் !'' என்று கேட்டுக்கொண்டே வந்தபோது, எல்லோரையும்போலக் கனகலிங்கமும் தன் சட்டைப் பையில் கையை விட்டான் ; 'பர்'ஸைக் காணோம் !

அவன் அடிக்கடி சட்டைப் பையைத் தொட்டுப் பார்ப்பதும், அங்குமிங்கும் பார்த்து விழிப்பதுமாக இருந்ததைக் கண்ட ஒரு அநுபவசாலி, ''என்ன, ஸார் ! பர்ஸைக் காணோமா !'' என்று 'குசலம்' விசாரித்தார்.

''ஆமாம், ஸார் !'' என்றான் அவன்.

''கீழே இறங்கிப் பாருங்கள் !'' என்றார் அவர்.

அதற்குள் கண்டக்டர், ''ஹோல்டான் !'' என்று இரைந்து விட்டு, ''இனிமேலாவது, பர்ஸ் கிடைப்பதாவது ! — அது இந்நேரம் கைமேல் கைமாறி எவ்வளவு தூரம் போயிருக்குமோ ! — நீங்கள் இறங்குங்கள், ஸார் !—



ஒருவர் :—என்ன, ஸார் ! நம்ம பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு உங்கள் சபாவிலே நாட்டியம் ஆட ஒரு 'சான்ஸ்' கொடுங்கள், ஸார் !

சபைக் காரியதரிசி :—ஏன் ஸார், அந்தப் பெண் மீது உங்களுக்கு அவ்வளவு அக்கறை பிறந்து விட்டது ?

ஒருவர் :—இல்லை, ஒரு நாளாவது என் வீட்டில் மன நிம்மதியோடு இருக்கலாம் என்று பார்க்கிறேன் !

இறங்கி, 'நடராஜா சர்வீ'ஸில் போங்கள்; அந்த 'சர்வீ'ஸில் உங்களை யாரும் டிக்கெட் கேட்க மாட்டார்கள்!'' என்றான் கேலியாக.

'இந்தக் கண்டக்டர்களுக்குச் சமய சந்தர்ப்பமே தெரியாதோ!' என்று முணுமுணுத்துக் கொண்டே, கனகலிங்கம் 'பஸ்'ஸை விட்டு இறங்கி, 'ஸ்டாண்'டுக்கு வந்தான். அவனைச் சபலம் விடவில்லை; மறுபடியும் அங்குமிங்கும் பார்த்தான்.

''என்ன ஸார், பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார் அங்கிருந்த ஒருவர்.

''பர்ஸைக் காணோம்; அதைத்தான் பார்க்கிறேன்......'' என்றான் அவன்.

''எவ்வளவு ரூபாய் இருந்ததோ!''

''என்னுடைய ஸ்தாவர, ஜங்கமச் சொத்தெல்லாம் அதில்தான் அடங்கியிருந்தது, ஸார்!'' என்றான் அவன்.

''ஐயையோ! — அப்படியானால் அதன் மதிப்பு எவ்வளவு இருக்கும், ஸார்!'' என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

''ஏழெட்டு ரூபாய் இருக்கும்......''

''பூ, இவ்வளவுதானா!—இருந்தாலும் போலீஸில் 'ரிப்போர்ட்' எழுதி வையுங்கள்; ஒரு வேளை கிடைத்தாலும் கிடைக்கும்!'' என்று அவர் சொன்னார்.

''எழுதி வைத்து என்ன ஸார், செய்வது!— அவர்கள் 'நீ திருடினது உண்மைதானா?' என்றுதான் அந்தத் திருடனை விசாரிக்கப் போகிறார்களே தவிர, 'ஏன் திருடினாய்?' என்று விசாரிக்கப் போவதில்லை; அதனால் அவன் திருடுவதையும் இந்த ஜன்மத்தில் நிறுத்தப் போவதில்லை!'' என்றான் அவன்.

''அப்படியானால் உங்களிடம் இன்னும் ஏதாவது இருந்தால் அதையும் கொண்டு வந்து அவனைக் கண்டு பிடித்துக் கொடுங்கள்!'' என்று அவர் வெறுப்புடன் சொல்லி விட்டு விறைப்புடன் நடந்தார்.

''பணக்காரர்கள் சட்டத்தின் அனுமதியுடன் திருடினால் ஏழைகள் சட்டத்தின் அனுமதியில்லாமல் திருடுகிறார்கள் — இவ்வளவுதானே ஸார், அவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வித்தியாசம்!'' என்று சொல்லிக் கொண்டே, அந்த அதிகப்பிரசங்கி 'பர்'ஸை மறந்து, பஸ்ஸை மறந்து, கண்டக்டர் சொன்னபடி 'நடராஜா சர்வீ'ஸில் கிளம்பினான்.

அவன் வீடு வந்து சேர்ந்தபோது மணி ஒன்பதுக்குமேலிருக்கும். 'இனிமேல் பணத்தைப் பற்றிய கவலையும் நமக்குக் கிடையாது!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, அவன் ஒரு டம்ளர் குளிர்ந்த நீரை எடுத்துக் குடித்து விட்டு மேன்மாடிக்குச் சென்றான்.

சிறிது நேரம் அங்கே உலாவிக் கொண்டிருந்து விட்டுக் கீழே இறங்கிய போது, யாரோ ஒருவன்



வந்து அவனுடைய அறையை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

'இவன் யாராயிருக்கும்? இவன் ஏன் அடிக்கடி இங்கே வந்து தொலைகிறான்......?'

கனகலிங்கம் அதற்கு மேல் யோசிக்கவில்லை; சந்தடி செய்யாமல் அவனுக்குப் பின்னால் சென்று அவனை 'டபக்'கென்று தாவிப் பிடித்தான் அவ்வளவுதான்; அவன் அப்படியும் இப்படியுமாகத் திமிறிக் கொண்டு ஓட யத்தனித்தான். கனகலிங்கம் விடவில்லை; அவனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு,

''நீ யார்?'' என்று அதட்டிக் கேட்டான்.

''நான் யார் என்று உனக்குத் தெரிய வேண்டும்! — அதற்காக நான் இங்கு வரவில்லை; நீ யார் என்று தெரிந்து கொண்டு போவதற்காகத்தான் வந்தேன்!'' என்று சொல்லிக் கொண்டே, கனகலிங்கத்தை ஓர் உதை உதைத்துத் தள்ளிவிட்டு, அந்த ஆசாமி எடுத்தான் ஓட்டம்! (தொடரும்)



வீடு வாங்க வந்தவர்:—பக்கத்து வீட்டுக்காரர்கள் அவ்வளவு கலகலப்பாக இருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே!

தரகர்:—நன்றாய்ச் சொன்னீர்கள்! கொஞ்ச நாள் போன பிறகல்லவா தெரியும்? ஐந்து, பத்து உங்களிடம் கடன் வாங்க வரும்போது அவர்கள் எவ்வளவு கலகலப்பாயிருப்பார்கள், தெரியுமா?

**அழகிய பிரேமாவதி தன் சருமத்தை அழகுடன் வைத்திருக்க ஏன்**

# லக்ஸ் டாய்லட் சோப்பை

**தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை விளக்கிக்கூறுகிறார்**



"என் சருமத்தை மிருதுவாகவும் மாசுமறுக்கள் இல்லாமலும் வைத்துக்கொள்வதில் எனக்கு ஒரு பொழுதும் தொல்லையே இல்லை. இதனால் ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு ஏற்படும் சௌகரியம் சிந்தனையன்று. நான் லக்ஸ் டாய்லட் சோப்பிற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் இந்த அழகிய வெண்மையான சோப்பினால் சருமத்தைப் பாதுகாப்பது மிகவும் சுலபம். அன்றியும் லக்ஸ் டாய்லட் சோப் மிகவும் நேர்த்தியான மனதை மயக்கும் பரிமளத்தோடுகூடியது என்பதையும் நான் அறிவேன்."




★ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாகச்செய்யும்.

**சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்**

LTS. 252-172 TM

# மங்கிய நினைவு

ஸி. வி. எஸ்.

ஏன் மனசுக்கு ஏதோ விசித்திரத் தன்மை ஒன்று இருக்கிறது. சிலரைக் கண்டால் ஏனோ அகாரணமான வெறுப்புத் தோன்றுகிறது. சிலரிடம், முன் பின் பழக்கம் இல்லாதிருந்தாலும்கூட நெடுநாள் பழகிய பாசத்தைப் போன்ற பற்றுதல் ஏற்பட்டு விடுகிறது.

இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்ததுதான் குழந்தை பத்மாவிடம் அப்போது எனக்கு ஏற்பட்டிருந்த மனப் பற்றுதல்.

அதிகாலையில் நான் எழுந்ததும் பத்திரிகையை எடுத்துக்கொண்டு தாழ்வாரத்துக்கு வந்தால் அந்தச் சிறுமியின் முகத்தில்தான் விழிக்கவேண்டும். முற்றத்தில் நின்ற பன்னீர் மரத்தடியில் பூப் பொறுக்கிக் கொண்டிருப்பாள். இடையிடையே நான் பத்திரிகையைப் புரட்டும்போது அவள் பூப் பொறுக்கும் சிரத்தையைக் கண்டு மனசுக்குள் சிரித்துக் கொள்வதுண்டு. அவள் அதை என்ன செய்வாளோ, எங்கு கொண்டு போய்ச் சேர்ப்பாளோ, எனக்குத் தெரியாது. வேண்டிய மட்டும் ஆனவுடன் பாவாடை ஓரத்தில் போட்டு அள்ளிப் பிடித்துக் கொண்டு போய் விடுவாள்.

தினமும் இப்படியேதான் வந்து போகிறாள். நான் அவளைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை பேசியது கிடையாது. யார், எவர் என்று கேட்டது கிடையாது. நெடு நாள் தனி வாழ்க்கை வாழ்ந்து விட்டதின் கோளாறு தானோ, என்னவோ?

நான்தோறும் நடந்து வரும் ஒரு காரியத்தில், எப்போதாவது இடைவெளி ஏற்படும் போதுதானே குறிப்பாக அதைப்பற்றி எண்ணத் தோன்றுகிறது? அப்படித் தான் அன்று அவளைப் பற்றிய சிந்தனை என் மனதில் தோன்றியது. நான் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்து நெடு நேரம் ஆகியும் அவளைக்காணவில்லை. ஏன் அவன் வரவில்லை?

அந்தச் சிறுமி யார்? எங்கே இருக்கிறாள்? அவளுக்கு அப்பா, அம்மா உண்டா......?

அன்று முழுதும் இதே கேள்விகள்தான் என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அன்று அவளை மரத் தடியில் காணாததால், என் தினசரி வாழ்வில் ஏதோ ஒரு பாகம் மூளியானது போன்ற பிரமை எனக்கு ஏற்பட் டிருந்தது.

மறுநாள் சற்று முன்னதாகவே எழுந்து விட்டேன். பத்திரிகையை எடுத்துக் கொண்டு வந்தேன். ஊஹூம்; அவளை இன்றும் அங்கே காணவில்லை. கொஞ்ச நேரம் பத்திரிகையைப் புரட்டிவிட்டு இருப்புக் கொள்ளாமல் தாழ்வாரத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தேன்.

சற்றுப் பொறுத்து அந்தச் சிறுமி வெளி வாசலண்டை வந்து நின்றாள். அவள் கையில் சிறு சீசா ஒன்று இருந்தது. அவள் பார்வை, மரத்தடியில் கவனிப்பாரற்று உதிர்ந்து கிடக்கும் பூக்களிலும் மேலே பூத்துக் குலுங்கும் மரக்கிளைக்குமாக ஓடிக் கொண்டிருந்தது.

நான் படியை விட்டிறங்கி, “இங்கே வா, அம்மா!” என்று கூப்பிட்டேன். சற்றுத் தயங்கிவிட்டு என் அருகில் வந்தாள். நான் கேட்டேன்:

“ஏன் அம்மா, இரண்டு நாளாக நீ பூப் பொறுக்க வரவில்லை?”

“அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை, அதுதான் ......” என்று சீசாவை ஆட்டிக் கொண்டே அவள் பதில் சொன்னாள்.

“இப்போ எங்கே போகிறாய்?” என்று கேட்டுக் கொண்டே, நான் சீசாவை வாங்கிக் கொண்டேன். “ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கத்தான்!” என்றாள் அவள்.



“முடியாது; நீ போ......!”

“நீ சிறு பிள்ளையாச்சே; வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லையா?”

“இல்லை, அப்பாவும் நானும்தான்!”

“அம்மா எங்கே?”

“அம்மா செத்துப் போச்சு!”

அவள் அவ்வளவு விவரம் தெரியாத சிறுமிதான். ஆயினும் அந்தப் பதிலில் எவ்வளவு சோகம் தொனித்தது!

“வா, அப்பாவைப் போய்ப் பார்க்கலாம்”



"போயும், போயும் எலுமிச்சம் பழக் 'கல'ரிலே புடவை எடுத்தீர்களே! வேறே நல்ல கலரிலே எடுக்கப் படாதோ?"

"இது தான் பொருத்தமான கலர். இந்தப் புடவையை வாங்கச் சொல்லி என்னை எலுமிச்சம்பழமும் பிழிகிறது போலல்லவா பிழிந்து எடுத்து விட்டாய்!"

---

என்று சொல்லி விட்டு, கைப் பெட்டியை எடுப்பதற்காக நான் உள்ளே போனேன். முதலில் அவள் என்னை நம்பவில்லை என்று தெரிந்தது. 'ஸ்டெதாஸ்கோப்'பை எடுத்து மாட்டிக்கொண்டு நான் புறப்பட்ட போதுதான் அவள் சந்தேகம் நீங்கிற்று.

***

பத்மா வழி காட்டப் பக்கத்திலிருந்த சந்திலுள் நுழைந்து ஒரு சிறு வீட்டை யடைந்தேன். சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க கிழவர் ஒருவர் முனகிக் கொண்டு படுத்திருந்தார். இவரா பத்மா வுக்குத் தகப்பனார்?—இல்லை, பாட்டனாராக இருக்கவேண்டும்; குழந்தை தெரியாமல் அப்படிச் சொல்கிறாள் என்று நினைத்தேன். கிழவர் நிலைமை ரொம்ப மோசமாகத்தான் இருந்தது. கபவாத ஜுரம் முற்றிச் சிகிச்சை யால் பயன் படாத நிலையை அடைந்திருந்தது. ஒரு வேளை மருந்து கொடுத்து ஊசி யும் போட்டு ஏதோ தைரியம் சொன்னேன்.

கிழவருக்குக் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை; உடைந்த குரலில் பேசினார்:

"இனி பிழைக்காது, ஐயா! இந்த அறியாக் குழந்தையை அநாதையாக விட்டுச் செல்ல மாட்டாமல்தான் இன்னும் இந்த உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பாவம், தாய்க்கு ஏற்பட்ட கதிதான் மகளுக்கும் என்று விதி இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்? ஆனால் ராஜம் இப்படி அநாதையாக நின்றபோது அவளுக்குக் கை கொடுத்துக் காப்பாற்றத் தெய்வம் என்னை அங்கே வைத்திருந்தது......"

"ராஜம்" என்றவுடன் எனக்குத் 'திக்' என்றது. என் கண்கள் தாமாகவே பத்மாவின் முகத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டன. பல சந்தேகங்கள், பழைய ஞாபகங்கள், மின்னல்போல் என் மனதில் பாய்ந்து வந்தன. கிழவர் தொடர்ந்து பேசினார்:

"ராஜத்துக்கு என்னைக் கை பிடிக்க நேர்ந்ததில் பெரும் குறைதான்; அது நியாயமுங்கூட. எனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட வயது வித்தியாசம். ஆயினும், எட்டாத நாட்டில், கல்கத்தாப் பட்டணத்தில், தாய் தந்தையரையும், ஆஸ்தி பாஸ்தி களையும் வகுப்பு வெறிக்குப் பலி கொடுத்து விட்டு நிராதரவாக நின்றபோது அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்ததாகி விட்டது. அதோடு பிள்ளையில் லாமல் எனக்கிருந்த பெருஞ் செல்வம், அவளது பிற்கால வாழ்வு முதலியவை யெல்லாம் சேர்ந்து எங்களைக் கணவன் மனைவியாகப் பிணைத்து விட்டது. ஆனால் நினைத்தது நடக்கிறதா? அவன் என்னை முந்தி விட்டான்......"

கிழவருக்குக் குரல் கம்மிப் பேச்சுத் தடைப்பட்டது.

"நீங்கள் பேசாதிருங்கள். உங்களுக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. பத்மா நல்லவள். அவளுக்குக் கஷ்டம் ஏற்படும்படி ஒன்றும் நடக்காது. நாள்தோறும் எங்கள் வீட்டுக் குப் பூப் பொறுக்க வருவாள்......"

அவருக்கு ஆறுதல் சொல்வதாக எண்ணிக் கொண்டு இப்படி ஏதோ பேசிக் கொண் டிருந்தேன். மனசு எங்கேயோ இருந்தது.

"அப்படியா? தினந்தோறும் பூப் பொறுக்கிக்கொண்டு வந்து மாலை கட்டி அம்மாவின் படத்துக்குப் போட்டு அழகு பார்ப்பதுதான் அவள் வேலை. அதோ, அவளுக்கும் இந்த இரண்டு நாட்களாக மாலை இல்லை......"

நான் அவர் காட்டிய திக்கைப் பார்த்தேன். ஆ! திடீரென்று ஆயிரம் இடிகள் என் தலையில் விழுந்தது போலிருந்தது. நொடிப்பொழுதில் என் சந்தேகங்கள் அத்தனையும் பறந்துவிட்டன. சாட்சாத் ராஜமேதான் அந்தப் படத்திலிருந்தாள். அந்த முகத்தைக் கண்டு எத்தனை வருஷங்களாகி விட்டன!

***

அப்போது எனக்குப் பதினொரு பிராயம் இருக்கும். கடைய நல்லூர் உயர்நிலைப் பள்ளியில் நாலாவதோ, மூன்றாவதோ படித்துக் கொண்டிருந்தேன். ராஜமும் அதே பள்ளியில்தான் படித்துக் கொண்டிருந்தாள். அவள் என்னைவிட இரண்டு மூன்று வயசு சின்னவள். எங்கள் கிராமத்திலிருந்து பள்ளிக்கூடம் மூன்று கல் தூரம். இருவரும் சேர்ந்தே போவோம்; வருவோம். சாலை நெடுக எதாவது விளையாடிக்கொண்டே போவோம். அக் காலத்தில் நாங்கள் ஒருவரோடொருவர் கொண்டிருந்த அன்புக்கு ஈடு இணை கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில் அவள் பெண், நான் ஆண் என்ற பேத உணர்வுகூட அப்போது உதித்ததில்லை. அத்தகைய உணர்ச்சி இருந்தால் 'பாப்பன் கால்' பாலத் தடியில் புத்தகக் கட்டுகளை வைத்து விட்டு, அவள் ரஞ்சித் பயில்வானாகவும், நான் உசேன் பயில்வானாகவும் பாவித்துக்கொண்டு நாங்கள் குஸ்தி பிடிப்போமா?

ஒரு நாள் ராஜம் கைக்குள் எதையோ வைத்துக்கொண்டு தரமாட்டேன் என்றாள். கையைப் பிடித்து அதைத் திறக்க முயன்றேன். இறுக மூடிக்கொண்டு "முடிந்தால் எடுத்துக்கோ!" என்றாள். ஆனமட்டும் பார்த்தேன்; முடியவில்லை. கடைசியில் 'கிச்சுக் கிச்சு' காட்டி விட்டேன். 'கலீ'ரென்று சிரித்துவிட்டு அவள் என்னை மணலில் தள்ளிவிட்டாள். நான் அவள் கையைப் பிடித்திருந்தேனா? அவளும் என்னுடன் சேர்ந்து விழுந்து விட்டாள்!

இந்தச் சமயத்தில் அவள் தகப்பனார் அங்கே வந்து, "ராஜம், இங்கே வா!" என்று கூப்பிட்டார். அவள் எழுந்து ஓடி விட்டாள். நான் பிறகு வீட்டுக்கு வந்து விட்டேன்.

மறுநாள் பள்ளிக்கூடம் போகும்போது ராஜம் விளையாட்டில் உற்சாகமில்லாமல் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தாள். நானும் அதைக் கவனியாதது போல் நடந்து கொண்டிருந்தேன்.

"கோபு, நான் இனி உன்கூட விளையாட வரமாட்டேன்!" என்றாள் ராஜம்.

"ஏன், நான் என்ன செய்தேன்?" என்று கேட்டேன்.

"நீ ஒன்றும் செய்யவில்லை; அப்பா சொன்னார்—நீ தாழ்ந்த ஜாதியாம். நாங்கள் உயர்ந்த ஜாதியாம். உன்னைத் தொட்டு நான் விளையாடக் கூடாதாம்!"

'சுருக்'கென்று இதயத்தில் வேல் பாய்ச்சின வேதனை எனக்கு ஏற்பட்டது. கால்கள் தடுமாற, நிலைகுலைந்து போய்ப் பக்கத்திலிருந்த மரத்தடியில் உட்கார்ந்து விட்டேன்.

***

சாதாரணமாக மாலை வேளைகளில் ஓடி விளையாடும் நான் அன்று என் மனநிலை சரியாக இல்லாததால் வெளியில் போக மனமின்றி என் அறையிலேயே அடைபட்டுக் கிடந்தேன். புஸ்தகம் எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். பக்கம் பக்கமாகப் படித்தேன். ஆனால் ஒரு வாக்கிய



வந்தவர்:—சூடாக என்ன இருக்கிறது......?

ஸர்வர்:—பஜ்ஜி, போண்டா, வடை, தோசை எல்லாம் சூடாக இருக்கிறது. என்ன வேண்டும், உங்களுக்கு?

வந்தவர்:—இரண்டு தயிர் வடை கொண்டுவா, நிறையத் தயிர் விட்டு!

மாவது என் மூளையில் எட்டியது என்பது கிடையாது. எனினும், நான் மாலை மயங்கி விளக்கு வைத்த பின்னரும் என்னுடைய அறையில் படித்துக் கொண்டிருந்தேன்.

இருட்டில் ராஜம் மெதுவாக வந்து, "கோபு!" என்று கூப்பிட்டாள்.

"ஏன்?" என்றேன்.

"ஏன் படித்துக் கொண்டிருக்கிறாய்?"

"சும்மாத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன். நீ எங்கே வந்தாய்?"

"வெறுமனேதான் வந்தேன்; எழுந்திரேன்!"

"முடியாது; நீ போ!"

"ஏன் முடியாது? என்ன செய்கிறது உனக்கு?" என்று கேட்டுக்கொண்டே அவள் என் உடம்பில் கை வைத்துப் பார்த்தாள். எனக்கு மெய் சிலிர்த்தது.

"இதோ பார்! உன் அப்பா சொல்லியிருப்பது ஞாபகமில்லை? என்னைத் தொடாதே!" என்று சொல்லிக்கொண்டே நான் எழுந்து உட்கார்ந்தேன்.

இதற்குள் "கோபு!" என்று அம்மாவின் குரல் கேட்கவே, சட்டென்று என்னை விடுவித்துக்கொண்டு நான் அடுப்பங்கரைக்குப் போய்விட்டேன்.

மறுநாள் பட்டணத்திலிருந்து வந்த என் மாமா என்னைத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டார். பல காரணங்களால் நான் பட்டணத்திலேயே நிலைத்துத் தங்கும்படியாகி விட்டது. விடுமுறையின்போது இரண்டொரு தடவை கிராமத்துக்கு வந்தபோது அவளைப் பார்த்தேன். கொஞ்சம் பெரியவளாகி யிருந்தாள். என்னைக் கண்டால் புன்முறுவலுடன் மறைந்து விடுவாள்.

பட்டணத்தில் வைத்தியப் படிப்பு முடிந்து நான் கிராமத்துக்கு வந்தபோது அவள் வீடு அடைபட்டுக் கிடந்தது. விசாரித்ததில் வியாபார நிமித்தமாக அவள் அப்பா குடும்பத்துடன் கல்கத்தாப் பக்கம் சென்றுவிட்டார் என்று தெரிந்தது. அப்போது நான் அடைந்த ஏமாற்றம் ......!

ஏதோ விரக்தியடைந்த மனப்போக்குடன் வீட்டில் எவர் சொல்லையும் கேட்காமல் நான் ராணுவ சேவையில் சேர்ந்து விட்டேன்.

யுத்தம் முடிந்தபின் உடல் நிலை காரணமாக வேலையை விட்டுவிட்டு ஊரில் வந்து சில காலம் தங்கி யிருந்தேன். பின்னர் உறவினர் ஒருவரின் வற்புறுத்தலின் பேரில் மதுரையில் நான் வைத்தியத் தொழிலை ஆரம்பித்திருந்தபோது, கல்கத்தா வகுப்புக் கலவரத்தால் ரணகளமாகிக் கொண்டிருந்தது.

அப்போதெல்லாம் தினமும் நூற்றுக் கணக்கானவர்கள் பலியாவதைப் பத்திரிகைகளில் பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றும், தெரியுமா?

'சாகட்டும்; நன்றாய்ச் சாகட்டும்! நான் உயர்ந்த வகுப்பு, நீ தாழ்ந்த வகுப்பு, உன் தெய்வம் வேறு, என் கடவுள் வேறு என்றெல்லாம் ஆயிரம் பிரிவினைகளை ஏற்படுத்திக்கொண்டு உழலும் இந்தத் தலைமுறையே பூண்டோடு அழிந்து தொலையட்டும். சாதி சமயப் பாகுபாடற்ற ஒரு சமுதாயம் ஏற்பட ஒரே ஒருவன் மிஞ்சினால் போதும்!' என்ற மிருக வெறி தான் என்னில் மேலோங்கி நிற்கும். ஆனால் நிரபராதிகளான பெண்கள் மானபங்கப் படுத்தப்படுவதைப் பார்க்கும்போது தான் என் மனம் சொல்லொணா வேதனையுறும். என் ராஜம் அங்கு எங்கே இருக்கிறாளோ, என்ன கதி ஆனாளோ......?

●●●

"அப்பா!" என்ற குரல் என்னைச் சிந்தனையிலிருந்து மீட்டது. பத்மா நோயாளியின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் திடுக்கிட்டு எழுந்து அவர் கையைப் பிடித்துப் பார்த்தேன். அவர் மீளாத நித்திரை அடைந்து விட்டிருந்தார்.

குழந்தையை வாரி எடுத்துத் தோள்மீது போட்டுக்கொண்டு என் வீட்டுக்கு வந்தேன். அப்பா போன கவலையை மாற்றிப் பத்மாவைத் தேற்றுவதில் எனக்கு அவ்வளவு சிரமம் ஏற்படவில்லை; நாளடைவில் குழந்தை என்னையே அப்பாவாகக் கொண்டு விட்டாள்.

பத்மாவும் என் மடியில் வளர்ந்து பூத்துப் பெரியவளானாள். அவள் கண்ணுக்குப் பிடித்த மாப்பிள்ளைக்கே கல்யாணம் செய்து வைத்தேன். என் வறண்ட வாழ்வைக் குளிரவைக்க வந்த கற்பகக் கன்று, இப்போது ஒரு குழந்தைக்கும் தாயாகி விட்டாள். இப்போது நான் ஒண்டியாக இல்லை. வீடு கலகலப்புடன் களைபெற்று விளங்குகிறது. அதிலும் அதோ பன்னீர் மரத்தடியில் பூப் பொறுக்குகிறாளே, என் பேத்தி, அவள் அடிக்கிற லூட்டியில் வீடே இரண்டாகி விடுகிறது! பாட்டியின் படத்துக்கு மாலை கட்டத்தான் அவ்வளவு கரிசனையுடன் பூப் பொறுக்குகிறாள். அவள் பேர் என்ன தெரியுமோ?—ராஜம்தான்! வேறு என்ன பெயர் வைக்க?

பிஜித் தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் நம்முடைய நாட்டு மக்கள் படும் துயரங்களைக் குறித்துப் பாரதியார் ஊனும் உள்ளமும் உருகும்படி பாடினார். அந்த பிஜித் தீவுக்கு, அங்குள்ள நம் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதற்காக, உலக வாழ்க்கையைத் துறந்த மகான் ஒருவர் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு சென்றார். அவர்தான் சுவாமி ருத்ரானந்தர். பன்னிரண்டு வருஷம் அரும் பெரும் பணிகள் புரிந்த பிறகு சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து சில காலம் இருந்துவிட்டுத் திரும்பினார். அவர் பிஜித் தீவைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையைக் கீழே படியுங்கள்.

# பிஜித் தீவிலே

**சுவாமி ருத்ரானந்தர்**

ஓ, பாரதத் தாயே!

உனது பரந்த ஞானத்தை ஞானப் புதல்வர்கள் பலர் உலகெங்கும் பரப்பியது உண்டு. உன் அன்புப் பெருக்கும் ஆத்ம ஞான வெள்ளமும் உலகை வசப்படுத்தியது உண்டு. உடல் வலி மிகுந்த உனது வீரப் புதல்வர் வெற்றி முரசு கொண்டு ஆண்டனர். எனினும் உலகை யாள நினைத்ததில்லை. படை திரட்டிப் பகைவருடன் போராடித் தமது வீரக் கொடியை நிலை நாட்டினர். ஆனால் வேறொரு நாட்டை வளைத்துப் பிடிக்கவோ, வசப்படுத்தி அடக்கவோ எண்ணியதில்லை.

வீரப் புதல்வர்களோ சமீப காலத்தில் தாமாக வெளிநாடு செல்லவில்லையென்றாலும் பிறருக்கு அடங்கி வெளிநாடு சென்று அன்னியரை அடக்கும் யுத்தங்களில் ஈடுபட்டனர். திரைகடலோடியும் திரவியம் தேடி உன்னை அலங்கரித்துப் பூஜித்த வியாபாரப் புதல்வர்கள் உண்மையிலும் நாணயத்திலும் புகழ்பெற்று விளங்கினார்கள். இப்பொழுதோ உண்மையும் நாணயமும் இல்லாது உலக வியாபாரத்திலேயே கெட்ட பெயர் எடுத்திருக்கிறார்கள். உன் நாட்டு வியாபாரத்திலும் கெட்ட பெயரே. உடல் உழைப்பால் உனக்குச் சேவை செய்த ஏழைப் புதல்வர்கள் மட்டும் தாமே கெடவில்லை எனினும் பிறரால் கெடுக்கப்பட்டு, வதைக்கப்பட்டு, தேய்ந்து மெலிந்து திக்கற்றவர்களாயினர். அவர்கள் உனது திருவடியில் செய்த உத்தமச் சேவை ஒப்பற்றதாகும். ஆயினும் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாது மனமுடைந்து தவிக்கலாயினர். மக்களாகவும் மதிக்கப்படாமல் மிருகங்களுக்குச் சமானமாய்ப் பிழைத்து வந்தனர். அதுவும் முடியாத போது அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். வெளி நாடுகளிலே அவர்களுக்கு மரியாதை கிடைக்குமா? தாய் வீட்டில் மதிப்பிழந்தவர் பிறர் வீட்டில் பெருமை அடைவது எப்படி? எனினும் உடல் உழைப்பால் உயிர் வளர்க்கும் உனது புதல்வர்கள் பிற நாடுகளில் பெருமை இழந்து, பெருந் துன்பத்துக்கு ஆளாகி உருக்குலைய நேரிட்டதென்றாலும் அவர்கள் உலகத்துக்கு எவ்வகையாலும் துன்பம் விளைவிக்காது இன்பமே விளைவித்தனர். அவ்வாறு வெளிப்போந்த உனது மக்களின் சரிதை உள்ளத்தை உருக்கக்கூடிய வகையினதாய் இருக்கின்றது. உலகில் பல பாகங்களிலும் சென்றார்கள். ரப்பர் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும், கரும்புத் தோட்டங்களிலும் உலோகக் கனிகளிலும் அவர்கள் உழைத்தார்கள். அவர்களால் உலகத்துக்கு இன்பமே உண்டாயிற்று. தாங்கள் மட்டும் துன்பமே உற்றார்கள். அப்படிச் சென்ற வெளி நாடுகள் பலவற்றில் பிஜித் தீவும் ஒன்று.

பிஜியில் வாழும் இந்தியரின் நிலைமையையும், அங்கு வசிக்கும் ஏனையோரின் வாழ்க்கையையும் அந்நாட்டின் இயல்பையும் பற்றி சுருங்கச் சற்றே விவரித்து அதனை உன் திருவடிக்கு அர்ப்பணம் செய்ய எத்தனித்தேன். அன்னையே! அதனை நீ ஏற்று அநுக்கிரகிப்பாயாக.

## 1

ஆஸ்திரேலிய முதலாளிகளுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் செய்த சிபார்சின்மேல் இந்திய சர்க்கார் உதவி செய்யலாயினர். அதன் விளைவாக இந்தியாவிலிருந்து கூலிகள் வருஷந்தோறும் ஆயிரக் கணக்கில் அனுப்பப் பட்டனர். பத்தொன்பதாம்

நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய இந்த அனுப்புப்படலம் இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பத்தில்தான் நின்றது. அதாவது சுமார் 45 வருஷ காலம், இந்திய சர்க்காரே பீஜித் தீவுக்கு இந்தியக் கூலிகளை அனுப்பி வந்தனர். சுமார் 75,000 சகோதரர்கள் கூலிகளாகச் சென்றனர்.

இதே காலத்தில்தான் வெளி நாடுகளுக்கு எல்லாம் இந்தியர் ஒப்பந்தக் கூலிகளாய் அதிகமான எண்ணிக்கையில் சென்றிருக்கிறார்கள். ஆட்களைச் சேர்க்கும் கங்காணிகள் வசப்பட்டுப் பல பாமர மக்கள் ஒப்பந்தக் கூலிகள் ஆயினர். இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலும் கூலி ஏஜண்டுகளின் ஆபீஸ்கள் ஏற்பட்டன. அவைகளுக்கு அக்காலங்களில் 'டிப்போக்கள்' என்று பெயர். கங்காணிகள் தூண்டில் இரை கோத்து மீனைப் பிடிப்பது போல ஆட்களைப் பல இனிய வார்த்தைகள் கூறி டிப்போக்களில் கொண்டு போய் விடுவார்கள். அல்லது பெரிய ஹோட்டல்களில் காப்பியும் பலகாரமும் வாங்கிக் கொடுத்து அழைத்துச் செல்வார்கள். டிப்போ எல்லைக்குள் நுழைந்த பின்னர் கங்காணிகள் மாயமாய் மறைந்து விடுவார்கள் ஆட்களின் பெயர்கள் பதிக்தாகிவிடும்; கைரேகை முதலியன எடுத்தாகிவிடும். அவர்கள் தப்பி வெளியில் போகாமலிருக்கக் காவல்காரர்கள் காத்து நிற்பார்கள். கப்பலில் ஏறும்வரைச் சிறைவாசம் போல் இருந்து கப்பலில் ஏற்றப்பட்டு வெளியூர்களுக்குக் கொண்டு போகப்படுவார்கள். கங்காணிகளின் திறமையும், கூலி ஏஜண்டுகளின் சுறுசுறுப்பும் அதற்கான இந்திய சர்க்காரின் ஆதரவும் மிக ஆச்சரியகரமானவை. இந்திய சரித்திரத்தில் உள்ள அவமான மூண்டாக்கும் பல அத்தியாயங்களுள் ஓர் அத்தியாயமாக இவை அமைந்தன. கிராமங்களிலிருந்து பிழைப்பைத் தேடிப் பட்டணங்களில் வந்த வாலிபர்கள், வீட்டில் கோபித்துக்கொண்டு வெளியேறிய இளைஞர்கள், அல்லது பெற்றோர் மனத்துக்கு ஒவ்வாத காதலின் வசப்பட்ட யுவர்கள் கங்காணிகளின் கழுகுக் கண்களின் பார்வையினின்றும் தப்பாது ஒப்பந்தக் கூலி முறையின் வலைக்குள் அகப்பட்டுச் சென்றனர். அவர்கள் கப்பலில் வர்ணிக்க முடியாத நரக வேதனை யடைந்தனர்.



கைவித்தியன்

அவர்கள் சற்றும் எதிர்பாராத கொடுந் துன்பங்களுக்கு ஆளாயினர். மேலும் கப்பல்களில் அடைபட்டு நோய்வாய்ப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கையோ கணக்கில் அடங்காது. பேச்சுத் தெரியாது, கப்பல் அதிகாரிகளின் ஆணைகளையும் அறியாது எத்தனையோ பேர் அடிபட்டிருக்கின்றனர். ஒருவர் துன்பம் பொறுக்க முடியாமல் 'கடலில் விழுந்து சாவதே மேல்' என்று கடலில் குதித்தாராம். கப்பலை நிறுத்தி அவரைப் பிடித்து வந்து கப்பலில் ஏற்றிப் பீஜிக்குக் கொண்டு போய் வேலை செய்வித்திருக்கிறார்கள். அவரை நான் பீஜியில் கண்டேன். அவர் படித்தவர்; சென்னையில் புத்தகம் விற்றவர்; கவி பாடுவார். தாம் செய்த இக் கப்பல் யாத்திரையைப் பற்றி யாரேனும் கேட்டால் ஒரு பாட்டாகவே பாடி வர்ணிப்பார்.

ஒரு சமயம் கப்பல் போகும் மார்க்கத்தில், சிங்கப்பூரில் கப்பல் தங்கியபோது எதற்காகச் சண்டை போடுகிறோம் என்பது தெரியாமலே இந்தியக் கூலிகளும் சைனாக்காரர்களும் சண்டை போட்டுக் கொண்டார்களாம். அதில் பல சைனாக்காரர்களும் இந்தியர்களும் இறந்தார்களென்றும், ஒருவர் பேச்சை ஒருவர் புரிந்து கொள்ளாததுதான் இச் சண்டைக்குக் காரணம் என்று இப்பொழுதும் சொல்லிச் சிரிக்கிறார்கள். இதுபோல எத்தனையோ சம்பவங்கள். பீஜியில் கால்வலி யென்று டாக்டரிடம் ஒருவர் போனாராம். 'கால் வலி', 'கால் வலி' யென்று பலமாகக் கத்தியும் பாஷை தெரியாத டாக்டர், குறடா கொண்டு வந்து பல்லைப் பிடுங்கி விரட்டியதை வெகு அழகாக ஒருவர் வர்ணித்துச் சொன்னார். இவைதயெல்லாம் கேட்ட பிறகு எனக்குப் பத்திரிகைகளில் வெளியாகும் ஹாஸ்யத் துணுக்குகள் ஹாஸ்யமாகவே தோன்றுவதில்லை.

பீஜித் தீவு எங்கேயிருக்கிறது? எவ்வளவு தூரம்? கப்பலில் போவதென்றால் எத்தனை நாள் பிடிக்கும்? என்பவை எல்லோருக்கும் தெரியாது. பீஜித் தீவு என்பது ஒரு தீவு அன்று. அது பல தீவுகள் சேர்ந்த ஒரு தொகுதி. சுமார் இருநூற்றைம்பது தீவுகள் ஒரு தொகுதியா யுள்ளன. பசிபிக் பெருங் கடலின் நடுவே

கண்ணுக்குத் தெரியாது ஒரு சிறிய எறும்புபோன்று உலகப் படத்தில் வரைந்து காட்டப் பட்டிருக்கும். அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் இந்தியாவிலிருந்து அவ்விடம் போய்ச் சேரச் சுமார் ஒரு மாதம் பிடிக்கும். கப்பல் மார்க்கத்தில் பத்தாயிரம்மைல் செல்லவேண்டும்.

உலகத்தார் தம்மை யறியாமலேயே இந்தப் பீஜிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். தேவர்களி லெல்லாம் சிறந்த சூரிய தேவனை உலகத்திலேயே முதல் முதலாகத் தரிசிப்பவர்கள் பீஜி வாசிகளே. சூரியனைத் தரிசித்து அவர்கள் திருப்தியுற்று 'ஐயனே! தயவு செய்து நீர் மேற்கு முகமாய் சென்று எங்கள் இனத்தார் எல்லோருக்கும் காட்சியளியுங்கள்' என்று சொல்லி யனுப்பிய பின்னர்தான் உலகிலுள்ள மற்றையோருக் கெல்லாம் சூரியன் காட்சியளிக்கிறான். உருண்டை வடிவமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் மீது ஏதாவது ஓர் இடத்தில் நாள் ஆரம்பிக்க வேண்டுமல்லவா? இதற்கென ஒரு மனக்கோடு கிழித்து அதனை 'இண்டர் நேஷனல் டாட் லைன்' (International Dot Line) என்று உலகத்தினர் பெயர் கொடுத்திருக்கின்றனர். அக்கோடு பீஜியை ஒட்டித் தெற்கு வடக்காய் ஓடுகின்றது.

நான் பீஜியை விட்டுப் புறப்பட்டுத் தாய்நாடு வரும்போது உலகத்தைச் சுற்றி வலமாக வந்தேன். அமெரிக்கா வழியாக இங்கிலாந்துக்கு வந்தேன். இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்தேன். அப்படி வரும்போது வெள்ளிக்கிழமை இரவு பத்து மணிக்குப் பீஜியில் ஆகாய விமானம் ஏறி, இரவெல்லாம் பறந்து சென்று, அடுத்த நாள் அதி காலையில் பெட்ரோல் பிடிப்பதற்காகக் காண்டன் தீவுகளில் ஆகாய விமானம் இறங்கியபோது, சனிக்கிழமையாக வல்லவா இருக்க வேண்டும்? ஆனால் அப்போதும் வெள்ளிக்கிழமை காலை என்றார்கள். எனவே இரண்டு வெள்ளிக்கிழமை ஒரே வாரத்தில் வந்தது.

விமானத்தில் ஏறிச் சென்ற யாத்திரிகர்களாகிய நாங்கள் இதைப் பற்றி அதிசயித்துப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் ஒரு கதை சொன்னார். ஒரு அமெரிக்க தனவந்தர் ஒரு சமயம் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் பிரயாணம் செய்து வந்தாராம். அப்படி வந்த போது இடையில் அவருடைய பிறந்த நாள் வந்ததாம். அதைக் கொண்டாடுவதற்



பீஜி போலீஸ்காரர்

காக அவர் முன்னேற்பாடாய்க் கூட இருந்தவர்களுக்கு வழங்குவதற்காக உயர்தரமான சாராயம் முதலிய விலையுயர்ந்த பொருள்களையும் கொண்டு வந்தாராம். குறித்த நாளில் அவற்றை அவர் தாராளமாக வழங்கியபோது விசேஷம் என்னவென்று மற்றவர் கேட்க அன்று தம்முடைய பிறந்தநாள் என்றும் அது இன்ன தேதியென்றும் சொன்னாராம். இதைக் கேட்ட மற்றவர்கள் அத் தேதி அவர் அறியாமலேயே கடந்து போய்விட்ட விஷயம் அவருக்குத் தெரிவித்தார்களாம். அப்போது அவர் வருந்தியதைக் கண்டு, வருஷந் தப்பாமல் பிறந்த நாள் கொண்டாடும் அந்த அமெரிக்க தனவந்தரின் வாழ்க்கையில் ஒரு வருஷம் இரண்டு வருஷ அளவாக நீண்டு விட்டது என்று மற்றவர்கள் சொல்லி சந்தோஷப் படுத்தினார்களாம்.

## 2

பீஜியில் பகல் என்றால் அப்போது இங்கிலாந்தில் இரவு. இங்கிலாந்தில் பகலாகும்போது பீஜியில் இரவு. இந்தியாவுக்கும் பீஜிக்கும் ஐந்தரை மணி நேரம் வித்தியாசம்.

ஆழ்கடலின் நடுவிலே யிருக்கும் இத்தீவுகள் பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். மலைகளும் காடுகளும் நிறைந்தது. எப்பக்கம் திரும்பினாலும் அழகிய இயற்கைக் காட்சிகள். நதிகளும் அருவிகளும் நீர் வீழ்ச்சிகளும் நிறைந்து அழகு படுத்துகின்றன. உலகிலேயே மிக உயரமுள்ள நம் இமயமலை சமுத்திர மட்டத்துக்கு மேல் சுமார் ஐந்து மைல் உயரம் உள்ளது. இது போல் சமுத்திரத்தின் ஆழத்தைக் கணக்கெடுத்தால், மிகவும் ஆழமுள்ள இடம் பீஜிக்கு அருகாமையில் இருக்கிறது. இது சமுத்திர மட்டத்திற்குக் கீழ் சுமார் ஏழு மைல் ஆழமுள்ளது. பீஜி என்பது மொத்தம் இருநூற்றைம்பது தீவுகள் என்றாலும், பெரிய சில தீவுகளில் மட்டும் ஜனங்கள் வசிக்கின்றனர். முக்கியமாய்ப் பெரிதான இரண்டு மூன்று தீவுகளில் மட்டுமே இந்தியர் அதிகமாய் வசிக்கின்றனர். பீஜியின் தலைநகர் சூவா என்பது. தலைநகர் உள்ள பெரிய தீவுக்கு வித்திலெவு என்று பெயர். வித்திலெவு சுமார் 350 மைல் சுற்றளவு உள்ளது. இதற்கடுத்த பெரிய தீவு வனுவாலெவு. மூன்றாவது லெவுகா. பீஜியின் பழைய தலைநகர் இந்த லெவுகாத் தீவிலேயே இருந்தது. வித்திலெவுவைச் சுற்றி மோட்டார் வண்டிகள்



பெரியவர் (வேதாந்தி):—நாம் தானம் கொடுக்கும் ஒவ்வொரு பொருளும் நமக்கே கொஞ்ச காலத்தில் இரண்டு மடங்காகத் திரும்பி வரும்!

மற்றவர் (சலிப்புடன்):—நிஜந்தான், ஸார்! முழுக்க முழுக்க நிஜம்! போன தை மாசம் என் பெண்ணைக் கன்னிகா தானம் செய்து கொடுத்தேன். பங்குனி மாசம் பெண்ணை அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை என் வீட்டுக்கே வந்து சேர்ந்து விட்டான்!

---

செல்லக் கூடிய அழகான சாலை ஒன்றை அமைத்திருக்கின்றனர். அச்சாலை வழியே செல்லுங்கால் பல அழகிய காட்சிகளைக் கண்டு ஆனந்திக்கலாம். அது வளைந்து வளைந்து மலைகள் மீது ஏறி இறங்கிக் காடுகளின் வழியாகவும் இடையிடையே கடல் ஓரமாயும் நதிகளைக் கடந்தும், கிராமங்கள் சிறிய நகரங்களின் வழியாயும் செல்லும். சிற்சில இடங்களில் உட்புறமாகச் செல்லும் பாதைகள் சில உண்டு. எனினும் அவை மிகச் சிறியவை; அவ்வளவு நல்ல நிலைமையிலும் இல்லை. மற்றத் தீவுகளில் இதுபோன்ற சாலை இல்லை. சுற்றிலும் ஆழ்ந்த கடல் ஆதலின் கடல் நீர் கறுத்திருக்கும். கரையோரம் நீர்ப்பரப்பின் கீழ் பல படித்தான ஆழமுள்ள பூமி இருக்குமாதலின் அது நீலமாயும், அழுத்தமான பச்சையாயும், இலைப் பச்சையாயும் வெளிர்ப் பச்சையாயும் காடு மலைகளின் சாயை அதில் விழுந்து பல நிறப்பட்டுக் காட்டும் காட்சி கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவர்வதாய் இருக்கும். சூரிய வெளிச்சத்தில் அலைகள் புரண்டு நீர்த் துளிகள் காற்றில் வீசிச் சோனையாக ஆகாயத்தில் பரவும்போது அது இன்னொரு வகையில் அழகிய காட்சியை அளிக்கும். சுருங்கச் சொன்னால் பீஜித் தீவுகளின் வனப்பு நமது நாட்டின் மேற்குப் புறத்திலுள்ள மலையாள தேசத்தைப் போலவும் குடகு தேசத்தைப் போலவும் எங்கும் பச்சையாய்க் கண்ணுக்குக் குளிர்ச்சியாய்க் காணப்படும்.

பீஜித் தீவுகளின் அமைப்பை நோக்கும்போது அவை எரிமலைகள் எறிந்ததனால் ஏற்பட்டவை என்பதும் கிளிஞ்சல்களாலும் கடற் கிருமிகளினாலும் கட்டப்பட்ட சிறிய தீவுகள் அங்கங்கே ஏற்பட்டிருக்கின்றனவென்றும் தோன்றும்.

3

இப்போது அங்கே வசித்துவரும் கைவித்தியர் என்ற ஜனங்களே பூர்விகக் குடிகளெனக் கருதப்பட்டு வந்தாலும் அவர்களும் ஒரு காலத்தில் வேறு இடங்களிலிருந்தே கடல் வழியாய் வந்து குடியேறியிருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. கைவித்தியர் தம் முன்னோர்கள் மரக்கலங்களில் வந்து பீஜியில் சேர்ந்ததாயும், அவர்கள் மேற்கேயிருந்து வந்ததாயும் கர்ண பரம்பரையான கதைகளைச் சொல்லிக் கொள்கிறார்கள். கைவித்தியர் நிறத்தில் ஆப்பிரிக்க ஜனங்களைப் போல அவ்வளவு கறுப்பாய் இல்லையென்றாலும் அவர்களுடைய தலை மயிர் சுருட்டையாக ஆப்பிரிக்க ஜாதியினரை ஒத்திருக்கின்றது. அவர்கள் பேசுவது கைவித்தீ பாஷை. அது ஒரு தனி பாஷையாயினும் அதில் அதிகமான வார்த்தைகள் இல்லை. இக் காலத்தில் இங்கிலீஷ் எழுத்துக்களைக் கொண்டு தம் பாஷையை எழுதப் படிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். இந்தியரோ அல்லது ஐரோப்பியரோ பீஜிக்குச் சென்ற காலத்து கைவித்தியர் நாகரிகமில்லாத காட்டு ஜனங்களாய் வசித்து வந்தனர். அவர்கள் அக்காலத்தில் கட்டுவதற்குத் துணியுமின்றி இலைகளைச் சுற்றிக் கொண்டிருந்தார்களாம். மலைக் குகைகளிலும் சிறு குடிசைகளிலும் இருந்து வந்தனர். சிறு சிறு கூட்டத்தினராய் வெவ்வேறு இடங்களில் தங்கி ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டும் அடித்தவரைத் தின்றும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். பீஜிக்கு முதல் முதல் போய்ச் சேர்ந்த ஒரு கிறிஸ்துவப் பாதிரியைப் பிடித்துக் கொன்று, வெட்டித் துண்டுகளாக்கி, நெருப்பில் வேக வைத்து முழுதும் தின்றுவிட்டதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அப்படித் தின்றபோது பாதிரியார் காலில் தரித்திருந்த பூட்ஸ் தனியாகக் காலில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல், பல்லுக்கு அசையாத தோலாக இருந்ததால் பாவம் செய்தவன் கால்

தடித்து விட்டதென்றும், தோல் வெளுத்து விட்டதென்றும் சொல்லிக் கொண்டார்களாம். வித்திலெபுவைச் சுற்றி வரும்போது ஓரிடத்தில், ராக்கி ராக்கி என்னும் ஊரில், ஒரு கைவித்தி அரசனைப் புதைத்த இடத்தில் ஒரு மேடை கட்டி அதில் அவர்களுடைய பாஷையில் ஒரு 'போர்டு' எழுதி வைத்திருக்கிறார்கள். "தொண்ணூற்றொன்பது மனிதனைத் தின்றவன்" என்று அதில் எழுதப் பட்டிருக்கிறது.

இப்போதோ கைவித்தியர் நாகரிக மடைந்து விட்டார்கள். மனிதனைப் பிடித்துத் தின்னும் வழக்கம் அவர்களிடத்தில் இல்லை. ஆயினும் நம்மவர்கள் பீஜிக்குச் சென்றபோது அவர்களைக் கண்டு பயந்தனர். பசிபிக் சமுத்திரத்தில் வெள்ளைக்காரர்கள் கப்பல் யாத்திரை சென்றபோது மற்ற தீவுகளைக் கண்டு பிடித்தது போல் பீஜியையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். பீஜியில் சந்தனக் கட்டைகள் அதிகமிருந்தன. அச் சந்தனக் கட்டைகளையும், முத்துச் சிப்பிகளையும் ஐரோப்பிய வர்த்தகர்கள் வாங்கிச் சென்று வியாபாரம் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்த வியாபாரத்தின் சம்பந்தமாய் ஒரு சமயம் கைவித்தியர் வேறு ஐரோப்பியருக்குக் கடன் பட்டுவிட்டனர். அக்கடனைக் கொடுக்க முடியாதபோது ஆஸ்திரேலிய மக்களின் வேண்டுகோளின்படி பிரிட்டிஷ் சர்க்கார், முதலில் வேண்டாமென்று சொல்லியபோதிலும், பின்னால் சொற்பத் தொகையான பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்த்து, பீஜித் தீவுகள் முழுவதையும் தம் வசமாக்கிக் கொண்டனர். அதுமுதல் பீஜியும் பிரிட்டிஷ் காலனியாகவே இருந்து வருகிறது. அக்காலத்தில் பீஜிக்கு இராஜாதிராஜனான கைவித்தி பிரிட்டிஷ் சர்க்காருக்கு எழுதிக் கொடுத்த சாஸனத்தில், அன்று முதல் பீஜித் தீவுகளையும், அவற்றிலுள்ள சராசர வஸ்துக்கள் யாவையும் வசிக்கும் மக்களாகிய தங்களையும், தங்களுக்குப் பின்னால் தலைமுறை தலைமுறையாக வரக்கூடிய பின் சந்ததியார் அனைவரையும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஒப்படைத்து விடுவதாயும், பிரிட்டிஷ் சர்க்கார் தங்களைக் காத்து ரட்சிக்க வேண்டும் என்றும் அச்சாஸனத்தில் எழுதிக் கொடுத்திருப்பதைக் கல்லிலும் வெட்டி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதிக்கொடுத்த நாளை 'செஷன் டே' என்று சொல்லுகிறார்கள். எல்லாத் தேசங்களிலும் சுதந்திர நாளை எப்படி உற்சாகமாய்க் கொண்டாடுகிறார்களோ அதுபோல் பீஜியில் இந்த 'செஷன் டே'யை வெகு உற்சாகமாய்க் கொண்டாடும்படி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இப்போது பீஜியிலுள்ள ஜனத்தொகை இரண்டரை லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகம். அதில் சுமார் பாதிப்பேர் நம்முடைய இந்திய மக்கள். வடநாட்டில் உத்தரப் பிரதேசத்திலிருந்தும், பீஹாரிலிருந்தும் இன்னும் சென்னை மாகாணத்திலிருந்தும் நம்மவர் சென்றிருக்கிறார்கள். 100-க்கு 60 பேர் வட இந்தியரென்றும் 40 பேர் தென்னிந்தியரென்றும் சொல்லலாம். தென்னாட்டிலிருந்து சென்றவர்களில் தமிழர்கள் அதிகம். 40 பேர்களில் 25 பேர் தமிழர், 10 பேர் தெலுங்கர், 5 பேர் மலையாளிகள் என்று சொல்லலாம். பிற்காலத்தில் வட இந்தியாவிலிருந்து பீஜிக்குச் சென்றவர்களில் பஞ்சாப் தேசத்து விவசாயிகளும், குஜராத்திலிருந்து சென்ற வியாபாரிகளும் கொஞ்சம் பேர் உளர். மற்றப் பாதி ஜனத்தொகையில் இந்தியரின் எண்ணிக்கைக்குச் சற்றுக் குறைவாக இருப்பவர் கைவித்தியர். மற்றவர் சுமார் 5000 ஐரோப்பியர்களும், அதற்குச் சமமான கலப்பு ஜாதியினரும் இருக்கிறார்கள். ஏறக்குறைய ஆயிரம் சைனாக்காரர்களும், இன்னும் ஆயிரம் மற்றத் தீவுகளிலிருந்து வந்தவர்களுமாக இருக்கின்றார்கள். (தொடரும்)

---

## அவர் யோசனை!



ஒருவர் :—என் ஸார்! நீங்கள் எலெக்ஷனுக்கு நிற்கப்போகிறதாகக் கேள்விப் பட்டேனே! தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன செய்வதாக உத்தேசித் திருக்கிறீர்கள், ஸார்?

மற்றவர் :—அதைப் பற்றி இப்பொழுது என்ன யோசனை! தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் என்ன செய்கிறது என்றல்லவா யோசித்துக் கொண்டிருக்கிறேன்!

# வட்ட மேஜை

## ★ புகை விஷயம்!

ஒரு விஷ விருட்சத்தின் இலையை முகர்ந்தாலே உயிருக்கு ஆபத்து எனக் கண்டால், இலைகளை மட்டும் நீக்கி விடுவது விரும்பத்தக்கதல்ல; விருட்சத்தையே வெட்டி வீழ்த்த வேண்டும்! அதோடு அதன் வேரை அறவே களைந்தெறிய வேண்டும். அப்போதுதான் அந்த விஷ விருட்சத்தினால் எவ்வுயிருக்கும் ஆபத்து ஏற்படாது.

புகை குடித்தல், பொடி போடுதல் என்பவை ஒருவித கெட்டப் பழக்கத்தைச் சேர்ந்தவை. புகையும், பொடியும் உடல் வளப்பத்தைக் கொழிக்கும் என்று கருதி யாரும் உபயோகப் படுத்துவதில்லை! பொடி போடுதலை விடப் புகை குடித்தல் சற்று ஆபத்தானது. பொதுவாக இரண்டையும், குறிப்பாகப் புகை குடித்தலையும் எப்படியும் அறவே ஒழித்தாக வேண்டும்.

'பஸ்' வண்டிகளில் புகை குடித்தல் தடுக்கப்படுகிறது. 'பஸ்' வண்டி 'பெட்ரோல்' எண்ணெயின் உதவியால் ஓடுவது. சுருட்டிலிருந்து கிளம்புகிற தீப்பொறி 'பெட்ரோல்' எண்ணெயில் பட்டால் தீப்பற்றிக் கொள்ளும். இந்த ஆபத்தைத் தவிர்க்கவும், புகை குடிக்காத மற்றப் பிரயாணிகளின் நலன் கருதியும் 'பஸ்' வண்டிகளில் புகை குடித்தல் தடுக்கப்படுகிறது.

சென்னையில் எல்லா ஸினிமாக் கொட்டகைகளிலும், பகல் வேளைப் படக் காட்சியின் போதுமட்டும், புகை குடித்தல் தடுக்கப்படுகிறது. இது புகை குடிக்காத மற்ற ஸினிமாப் பிரியர்களின் நலன் கருதிச் செய்யப்பட்டதாகும்.

புகை குடிக்காத 'பஸ்' வண்டிப் பிரயாணிகள், பகல் வேளைப்படக் காட்சியைக் காணும் ஸினிமாப் பிரியர்கள் மட்டும் புகையை வெறுப்பதாகக் கொள்வது சரியல்ல. புகை குடிக்காத டிராம், ரயில் பிரயாணிகளுக்கும், இரவு இரண்டு வேளைப்படம் பார்க்கும் ஸினிமாப் பிரியர்களுக்கும், புகைத் தொந்தரவின்று மீள வசதி மறுக்கப்படுவது எவ்வித நியாயத்திற்கும் உட்பட்டதல்ல. எனவே மொத்தத்தில் புகை குடித்தலையே தடை செய்ய வேண்டும்!

பம்பாய் சர்க்கார் சமீபத்தில், பதினாறு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்குப் பீடி, சிகரெட்டு, புகையிலை அல்லது புகையிலைகளை விற்பனை செய்வோர் தண்டிக்கப்படுவர் என அறிவித்துள்ளது.

சிறுவர்கள் புகை குடித்தலால் ஏற்படுகிற ஆபத்து பெரியவர்களுக்கு ஏற்படாதென்று கருதி விடுவதற்கில்லை. புகையிலையில் உண்டாகிற 'நிக்கோடின்' என்ற ஆவி தொண்டை, மூச்சு, மூச்சுப் பைகள் ஆகிய உறுப்புக்களில் ஆபத்தான கோளாறுகளை உண்டுபண்ணுகிறதென்பதும், நுரை ஈரலில் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறதென்பதும், கற்றறிந்த அனுபவ விஞ்ஞானிகளின் கூற்று. அதோடு இந்த ஆவி பற்களைப் பழுப்பு நிறமாக்குவதோடு, பற்சதைகளையும் பலவீனப்படுத்தி, காலகடவில் பற்கள் விழவும் கேடு செய்கிறது. நாக்கின் ருசி உணரும் சக்தியையும், மூக்கின் முகர்தல் சக்தியையும் குன்றச் செய்கிறது. புகையின் சூடு உதடுகளையும், முகத்தையும் கருக்கச் செய்து கிழடு தட்டச் செய்கிறது!

ஆகவே, சிறுவர்களோ, பெரியவர்களோ, ஆண், பெண் அனைவருமே புகை குடிக்கக் கூடாதென்று பம்பாயில் மட்டுமல்ல, சென்னையில் மட்டுமல்ல, இந்தியா பூராவுமே சட்டம் இயற்றவேண்டும். அதோடு நின்று விடாமல் புகையிலைகளைச் செய்ய மூலப் பொருளாய் விளங்கும் புகையிலை உற்பத்தியை முதலில் தடைசெய்து அதற்குப் பதிலாக உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

சென்னை
27—9—50 தி. அனுசூயா

○●○

## கௌரவம் வேண்டும்!

செப்டம்பர் 24உ "கல்கி" வட்டமேஜைப் பகுதியில் கமலா சேஷாத்திரி எழுதிய கடிதத்தில் கூற வேண்டுவது முழுதும் கூறப்பட்டிருந்தாலும் ஈழநாட்டு மக்களின் அபிப்பிராயத்தையும் கூறி வைக்கலாம் என எழுதுகின்றேன்.

பெண்கள் ஆபீசுக்குச் சென்று உழைக்கலாமா என்ற கேள்விக்குப் பதில் எழுத நேர வேண்டுமாயின், இந்த நாட்களில் பாரதியாரின் பாடல்களை எடுத்ததற்கெல்லாம் மேற்கோளாகக் காட்டுவதால் பாரதியாரின் பாட்டையே விடையாகக் கூற விரும்புகின்றேன்.

> ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
> ஓங்க வளர்ப்பவன் தந்தை
> மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
> வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

பொருளீட்டுவதை ஆண்களிடம் விட்டுவிட்டு, கொண்டு வந்த பொருளைக் கொட்டாது, சிந்தாது வாழ்வதினால், பெண்கள் குடும்ப நலனுக்குப் பெருந் தொண்டு செய்தவர்களாவார்கள். வீட்டை விட்டு வெளிச்சென்று உழைத்து வருவதினால் வீட்டு நிர்வாகம் கெட்டுப்போகும். வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாளுக்குச் சம்பளமாகப் பணம் போவது மட்டுமன்றிச் சிக்கனமின்மையால் பொருட் சேதமும் ஏற்படும்.

பெண்கள் மிகுந்த ஆங்கிலக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில், கல்வி டைரெக்டர் டாக்டர் நாவுல் என்பவர், "குழந்தைகளே! நீங்கள் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகம் பார்ப்பதை விட, வீட்டு நிர்வாகத்தில் முதல் ஸ்தானம் வகிப்பதே மேல். அப்படி வகிக்கும் தகுதி உடையவர்களாக ஆகவேண்டும்" என்று வற்புறுத்தினர். அவர் ஆங்கிலேயர், கல்வித் துறையில் வெகு காலம் ஈடுபட்டவர். அவர் அபிப்பிராயமும் அப்படி இருக்கின்றது!

தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய உடைகளைத் தாங்களே தைத்துக் கொள்ளுதல், தலைமணி

களைத் துவைத்துக் கொள்ளுதல், முதலியவற்றால், செலவைக் குறைக்கலாம். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து "பிரைவேட் டியூஷன்" சம்பளத்தை மீட்கலாம். கணவருக்கு ஆபீஸில் செய்து முடிக்க முடியாத அளவு வேலையிருந்து. வீட்டுக்குக் கொண்டு வந்தும் செய்பவராயிருந்தால் அவருக்கு உதவி செய்யலாம்.

நான் அறிந்தபட்டில் இலங்கையில் எவ்வளவோ பெண்கள் 'டைப்' அடிக்கும் திறமையுள்ளவர்கள், கணவருக்கு வேண்டிய எவ்வளவோ வேலைகளை வீட்டில் செய்து கொடுக்கிறார்கள்.

பெண்கள் தங்கள் பிள்ளைகள் வளர்ப்பதைக் கவனியாது வெளியே சென்று "மாதர் சங்கத்திலும், பிள்ளைகள் வளர்ப்புச் சங்கத்திலும்" காலத்தைக் கழிப்பது மிகவும் வருந்தத்தக்கது.

பெண்கள் நானறிந்த வரையில் கருஹலக்ஷ்மிகளாக விளங்குவதே மேல் என்று கூறுவேன்.

வெள்ளவத்தை,
இலங்கை
28—9—50

மகேஸ்வரி
அப்புத்துரை

○●○

## விநியோகம் ஒழிக

எங்கள் கிராமத்தில் மிலச்சுவான்தார்களிடமிருந்து ஒரு கோட்டை நெல் விலை ரூ. 23 வீதம் கொள்முதல் செய்கிறார்கள். இந்த கிராமத்தில் ரேஷன் கடையில் ஆறு அவுன்ஸ் ரேஷனாக இருந்தாலும் கோட்டை நெல் ரூபாய் 37 வரை ஆகிறது. காரணம் கிராமத்திலிருந்து அந்த நெல்லை எங்கெல்லாமோ கொண்டுபோய் மறுபடியும் அந்தக் கிராமத்துக்குக் கொண்டுவர வண்டி வாடகைச் செலவு ஆகிவிடுகிறது. ஆகவே ரூபாய் ஒன்பது ஒவ்வொரு கோட்டைக்கும் அதிகமாய் விடுகிறது. ரேஷன் ஆபீஸர்கள் 'களமேடு' வந்து விட்டார்களானால் இருக்கும் நெல்லில் எத்தனை கோட்டை நெல் கொடுக்கச் சொன்னாலும் கொடுத்துவிட வேண்டியதுதான். குடும்பத்திலிருக்கும் நபர்களை அனுசரித்து நெல் கொடுக்கிறார்களில்லை. ஆனால் பணக்கார 'கறுப்பு மார்க்கெட்' முதலாளிமார் எவ்வளவு நெல் கொண்டு போனாலும் அதிகாரிகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ரேஷன் ஆபீஸர்களுக்குக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல் வேண்டும்.

குடும்பச் சாப்பாட்டுக்குப் போதிய வயல் நெல் இருந்தும் சர்க்கார் கொள்முதல் காரணமாக நெல்லை எல்லாம் அவர்களுக்கு அளந்து விட்டு எங்கள் சொந்த உபயோகத்துக்கு வருஷத்தில் மூன்று நான்கு மாதம் ரேஷன் கார்டுக்குத்தான் வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கிறது. கால் கடுக்க நின்று ஆறு அவுன்ஸ் ரேஷன் வாங்கி, கோட்டை என்ன விலையாகிறது என்று பார்க்கும்போதுதான் கொடுத்தது ரூபாய் 23; வாங்குவது ரூபாய் 37 ஆகிறது என்று தெரிகிறது. மூன்றிலொன்று அதிகமாய் விடுகிறது. இதனால் அந்தந்தக் கிராமத்து நெல்லை அந்தந்தக் கிராமத்திலேயே விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

விநியோகமெனும் மகுடமிட்ட கறுப்பு மார்க்கெட்டில் வாங்குவதைவிட எப்போதுமே கறுப்பு மார்க்கெட்டில் வாங்கலாமென்று எண்ணி நல்ல நெல் கொழிக்கும் வயல்களில் கரும்பு வாழை போன்றவைகளைப் பயிரிட ஆரம்பித்து விடுகிறார்கள். நம் மாகாணத்தில் இயற்கையின் காரணம் ஒருபுறமிருக்க, இப்படிக் கரும்பு வாழை பயிரிட ஆரம்பித்தால் ஏழு லட்சம் ஏக்கர் என்ன, இன்னும் எத்தனை லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடியாகாமலிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எல்லா கிராமத்திலும் இந்த ஆறு அவுன்ஸ் அரிசி விநியோகம் செய்யும் அரசாங்கத்தார் விநியோகத்தை ஒழித்து விட்டுக் கட்டுப்பாடு ஏன் வைக்கக் கூடாது! நெல்லோ அரிசியோ எதுவானாலும் கட்டுப்பாட்டு விலைக்குமேல் விற்கக்கூடாது என்று நியமித்து, உணவு சப்ளை ஆபீஸர்களாக இருப்பவர்களைக் கட்டுப்பாட்டை மீறி விற்பவர்களைப் பிடிக்கச் செய்யலாம். அவர்கள் வேலை இழக்கவும் நேரிடாது. இப்படி வந்துவிட்டால் மூலை முடுக்குகளில் இருக்கும் அரிசி, நெல் எல்லாம் பொது மார்க்கெட்டுக்கு வந்துவிடும். பதுக்கல் ஆசாமிகளும் நெல் முதலிய தானியங்களை வெளிக்கொண்டு வந்துவிடுவார்கள். தற்போதைய உணவு நெருக்கடி நிலைமையும் ஒருவாறு சீர்ப்பட்டு விடும்.


திருநெல்வேலி
29—9—50

செ. அ. ஹாஜா முகைதீன்

○●○

## பச்சைக்கடலை விலை

பச்சைக்கடலை கண்ட்ரோல் ஆகஸ்ட் 17-ம் தேதி முதல் எடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு அதிகபட்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தி ஆகும் பிரதேசங்களில் மணங்கு விலை ரூ. 13. இதர இடங்களில் விலை ரூ. 16 ஆக அமுலுக்கு வருகிறது. இந்திய சர்க்காரின் 31-7-50-ம் தேதி பத்திரிகைக் குறிப்புப்படி.



ஒருவர் (கல்யாணச் சாப்பாடு முடிந்ததும் கிணற்றங்கரைக்கு வந்து):— கங்காபவானி! உன் தாராளமே தாராளம்! குழம்பு, ரஸம், பாயஸம், மோர் இவ்வளவையும் நீ பெருக்கிக் கொடுத்துப் பிறகு கையலம்புவதற்குங் கூடப் பாக்கி இருப்பதென்றால், உன் கருணையைச் சொல்லி முடியாது! தாயே, பாகீரதி!

விலையில் சாக்குக் கிரயம் இதர செலவுகள் அடங்க வேண்டும். ஆனால் மேற்கு ராஜீய சர்க்கார் 'அது கடலையின் விலை மாத்திரமே யன்றி இதர செலவுகள் சேர்க்கப்படவில்லை' என்றும் சென்னை சர்க்கார் அந்த விலையில் இதர செலவுகளும் விற்பனை வரியும் சேர்த்ததெனவும் கருதுகிறார்கள். அதிகபட்ச விலை பற்றி மூன்று விதமான அபிப்பிராயங்களுக்கே இடமுண்டு. விலையில் செலவு சேரவில்லை என்று மேற்கு சர்க்காரும் செலவு அடங்கியதென மத்திய சர்க்காரும், செலவும் விற்பனை வரியும் உட்பட்டதென சென்னை சர்க்காரும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்கிறார்கள். எது சரியென்பது புலப்படவில்லை. அதிக பட்ச விலைக்குச் சரக்கு வட நாட்டில் கிடைக்கவில்லை. செலவுகளையும் விற்பனை வரியையும் சேர்த்துக் கணக்கிட்டால், சென்னை ராஜ்யத்தில் அமுலிலிருக்கும் விலை மணங்கு ஒன்றுக்கு ரூ. 16 க்குக் கூடுதலாகிறது. இந்த நிலைமையில் அதிக பட்ச விலை பயனற்றதாகிறது. அதைச் சர்க்கார் திருத்தியமைக்க முன்வரவேண்டும். தவிர, தமிழ் ஜில்லாக்களில் பச்சைக்கடலை இருப்பு மிகக் குறைவாக இருப்பதால், சர்க்கார் சரியான விலைக்குத் தென்னாட்டுக்குப் பச்சைக் கடலை கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம்.

மதுரை
30—9—50

வெ. பெ. இர. கங்காராம்
துரைராஜ்

○●○

## அட்டைப் படம்

தங்கள் 'கல்கி' அட்டைப்பட விஷயமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடந்த 24-ம் தேதி இதழில் கனம் ஆர். ஆர். திவாகரைப் பற்றித் தமிழ் மக்கள் தெரிந்து கொண்டனர். இவரைப் போலவே இன்னும் அநேக தேச பக்தர்கள் தமிழ் நாட்டுக்குத் தெரியாமலிருந்து வருகிறார்கள். அநேகமாகத் தற்போதைய மத்திய சர்க்காரிலிருந்து வரும் தலைவர்கள், மாகாண சர்க்கார்களிலிருந்து வரும் தலைவர்கள் மிகச் சிறந்த தேசத் தொண்டர்கள். அவர்களின் வரலாறுகள் கேட்க இனிமையாகவிருக்கும். இவர்களைப் பற்றித் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதுவும் உங்கள் அட்டைப்பட விளக்கத்தின்மூலம் தமிழ் மக்கள் நன்கு அறிந்து கொள்ளக் கூடும்.

இப்படிப்பட்ட தலைவர்கள் எப்போதாவது தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்வதாயிருந்தால் அவர்களுக்குத் தமிழ் நாட்டு மக்கள் சிறந்த வரவேற்பு அளிக்க ஏதுவாகும்.

விக்ரமம்
30—9—50

பெ. மா. மணி

○●○

## ★ படிப்பின் கௌரவம்

சமீபகாலமாக வேலையில்லாத் திண்டாட்டம் நமது வாழ்வை அடியோடு பாழாக்கி வருகிறது. படித்தவர்களும், படிக்காதவர்களும் ஒரே நிலையில்தான் இருந்து வருகிறார்கள். ஆனால் படிப்பவர்கள் தொகையோ வரவர அதிகரித்து வருகிறது. ஆனால் அவர்கள் அந்தஸ்தை பெருக்கும் தகுந்த வேலை கிடைக்குமா என்பதுதான் மிகுந்த சந்தேகத்துக்கிடமான விஷயமாக இருக்கிறது.

மேலும் சாதாரணமாக ஒரு வேலைக்கு ஆள் தேவை என்று பத்திரிகையில் விளம்பரம் வந்தால், உடனே எல்லாரும் அதில் தேனீக்கள் போல் போய் விழுகிறார்கள். பி. ஏ. படித்தவர்களும், எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களும் எல்லாரும் மனுப் போடுகிறார்கள்.

பி. ஏ. அல்லது பி. எஸ். ஸி. படித்தவர்கள் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களுடன் போட்டியிடுவது மிகவும் வருந்தத் தக்கது. படித்தவர்களின் மதிப்பும், கௌரவமும் குன்றி விடுகிறது. அதிகப் படிப்புள்ளவர்களும், குறைந்த படிப்புள்ளவர்களும் ஒரே குமாஸ்தா உத்தியோகத்தில் இருந்தால் மதிப்பும், கண்ணியமும் இராது. படித்தவர்கள் அவமதிக்கப் படுவார்கள். வேலையிலும் உற்சாகம் இராது. படித்தவர்கள் தங்களது திறமையைச் சரியான முறையில் பிரயோகிக்கவும் வழி கிடையாது. சர்க்கார் வேலைகளும் திறமையான முறையில் நடைபெறாது.

ஆதலால் திறமைக்குத் தகுந்தாற்போல் வேலை தேடித் தருவது சர்க்காரின் பொறுப்பு. அதற்காக சில வேலைகளுக்குக் குறைந்த படிப்புள்ளவர்கள் மனுப் போடலாம்; வேறு சில உத்தியோகங்களுக்கு அதிகப் படிப்புள்ளவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம் என இரு பாகுபாடு ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதால் உயர்ந்த படிப்புள்ளவர்கள் தமக்கு நிகரானவர்களுடன் போட்டி யிடலாம். இத் திட்டம் நன்மை விளைவிப்பதுடன், படித்தவர்களின் மதிப்பையும் காப்பாற்றும்.

திருச்சிராப்பள்ளி
3—10—50

கமலராமன்

○●○

## அனுமதிக்குமா?

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில், மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்காமலே, வேலை செய்து பொருள் சம்பாதிக்கும் நேரம் தவிர ஓய்வு நேரங்களில் படித்து சர்வ கலாசாலைப் பரீக்ஷைகள் எழுதிப் பட்டம் பெற வசதி இருக்கிறது. இந்தியாவிலும் பம்பாய், நாகபுரி போன்ற இரண்டொரு சர்வ கலாசாலைகள் மாணவர்கள் வீட்டிலேயே படித்து பி. ஏ., எம். ஏ., போன்ற பரீக்ஷைகள் எழுத அனுமதி அளித்திருக்கின்றன. ஆனால் நமது சென்னை சர்வகலாசாலை மட்டும் இவ்வசதி அளிக்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கதே. இவர்களும் மேற்கண்ட வசதியை அளித்தால், மேலே படிக்கப் பண வசதி இல்லாத பல ஏழை மாணவர்களுக்கும், காலேஜில் ஸீட் அகப்படாமல் தவிக்கும் பல இளைஞர்களுக்கும் மிகவும் அனுகூலமாக இருக்கும். இது இவர்களுக்குப் பிற்காலத்தில் உத்தியோக உயர்வு போன்ற பல விஷயங்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். ஆகையால் சென்னை சர்க்காரும் சர்வகலாசாலையினரும் இவ்விஷயத்தைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சிந்தாதிரிப்பேட்டை
25—9—50

பி. வி. எஸ். வாஸன்

---

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "புகை விஷயம்" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீமதி நி. அனுசூயாவுக்கும், "படிப்பின் கௌரவம்" என்ற கடிதம் எழுதிய திருச்சிராப்பள்ளி ஸ்ரீ கமலராமனுக்கும் ரூ. 12—8—0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

# நிம்மதி

க. பஞ்சாபகேசன்

"இன்றைக்கு என்னத்தைத்தான் கொண்டு வந்தே நீ?" என்று மறுமுறையும் இரைந்து கேட்டாள் அவள்.

சாலையின் ஓரத்தில், நடைபாதையில், ஒரு ஜீவ சித்திர நாடகம் அப்போது நடந்து கொண்டிருந்ததைக் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்த யாரும் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் நிச்சயமாக அவளுக்காகத்தான் பரிந்து பேசிப் பச்சாதாபப் பட்டிருப்பார்கள்.

அவள் கேட்ட கேள்விக்கு இப்போதும் அவனிடமிருந்து பதில் வரவில்லை. ரிக்ஷாவின் ஏர்க்காலை தரையில் 'சர்'ரென்று நிறுத்தி வைத்து விட்டு வந்து உட்கார்ந்த அந்தக் கணத்திலிருந்தே அவன் மௌனம் சாதித்து வந்தான். அவனுடைய சிந்தனையில் வந்து உழன்ற விஷயங்கள் எவ்வளவு இருந்தாலும், அவள் கேட்ட கேள்விக்கு நேரிடையாகத் தான் பதில் சொல்ல முடியாது என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். அதனால் பேசாமலிருந்தான்.

அந்த நடை பாதையின் ஓரத்தில், அவர்களுடைய துக்கமும் சந்தோஷமும் சமமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்த அந்த இடத்தில், ஒரு பக்கம் துணியில் சுற்றப் பட்டிருந்த அவர்களுடைய சிசு கண் மூடியிருந்தது. மற்றொரு பக்கம் அவளுக்கு அருகில் அடுப்பு 'திமு திமு' வென்று எரிந்து கொண்டிருந்தது.

"என்ன மலைத்து உட்கார்ந்து விட்டாய்? உன்னைக் கட்டிக் கொண்டதற்கு நான் ரோட்டிலே காலம் கழிக்கிறது மட்டுமில்லே, தெருத் தெருவாகப் பிச்சையும் கூடத்தான் எடுக்கணும்! ...... என்ன, சும்மா யிருக்கே? பிள்ளையைத் தொட்டுப் பாரு! உடம்பு எப்படி நெருப்பாக் காய்கிறது பாரு......" என்றாள்.

அவனுடைய உடலுடன் உள்ளமும் கொஞ்சம் அசைந்தாற் போலிருந்தது. மெதுவாக எழுந்திருந்து குழந்தையின் அருகில் போய் உட்கார்ந்து கொண்டான். அதன் மிருதுவான கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான். ஆமாம்; உடம்பு நெருப்பாய்த்தான் காய்ந்து கொண்டிருந்தது. பக்கத்து அடுப்பில் அவனுக்காகச் சோறு தயாராகிக் கொண்டிருந்தது.

"அதுதான் மறுபடியும் கேட்கிறேன். எதுனாச்சியும் பணம் கிணம் வெச்சிருக்கையா? நம்ம தொண்டித்தோப்பு வைத்தியனிடம் போய்க் காண்பித்து விட்டு வரேன். போனதும் அவன் குழந்தை உடம்பைத் தொட்டுப் பார்க்க மாட்டானே? பணத்தைத்தானே தொட்டுப் பார்ப்பான்?" என்றான் அவன்.

குழந்தைக்கு மருந்து வாங்க வேண்டும்; அதை வைத்தியனிடம் கொண்டு போய்க் காண்பிக்க வேண்டும். அவன் உள்ளமும் நன்றாக அசைந்து கொடுத்தது அப்போது.

"இன்றைக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு ரூபாய்தான். அதிலே காலணாவுக்கு டீ குடிச்சிட்டேன்......"

"நெருப்பாக் கொதிக்கிற நாளிலே, நெருப்பா டீ குடிச்சிட்டு, நீகூட என் வயித்திலே நெருப்பை அள்ளிப்போடப் போறியா?......சரி, சொச்சம் பன்னிரண்டணாவைக் கொடு......"

"அதை அண்ணன் கடன் வாங்கிக் கொண்டு இப்பொழுதுதான் போனான்..."

"உன் அண்ணன் சம்பாரிக்கல்லையா? உனக்குக் கொடுத்தானே, குழந்தையை! அந்தக் கடவுளைத்தான் சொல்லணும்!... தாயாப் பிறந்தவன் கையிலே பணமிருந்தால் பிள்ளைக்காக அதைக் கொடுக்கத் தயங்கவே மாட்டான். என் கையில் எந்தச் சில்லறையைத்தான் நீ தங்க வைச்சிருக்கே? உடம்பிலே நகை நட்டு இருந்தாலாவது குழந்தை உயிருக்காக அதை விற்றுத் தொலைக்கலாம். நீ எனக்குப் போட்ட நகை என்ன? இருந்த கால் செட்டியையும் அடகு வைச்சிட்டே...... உன்னாலே நான் கண்டது என்ன. இந்த ரோட்டையும் வெய்யிலையும் காற்றையும் மழையையும் தவிர?" என்று படபட வென்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

"எல்லாம் தலைவிதி!" என்றான் அவன்.

"நம்ம தலைவிதிக்குப் பச்சைப் பிள்ளையின் உயிரையா பலிவாங்கப் போகிறாய்? நீ ஒரு ஆண் பிள்ளையா? நீயும் ஒரு தகப்பன்தானா?........." என்று கோபத்திலே மீறிய அவள் குரல், பின்னர் அடக்க முடியாத விம்மலில் முடிவுற்றது.

அதற்குமேல் அவனால் பொறுக்க முடியவில்லை. 'நீ ஒரு ஆண் பிள்ளையா? நீயும் ஒரு தகப்பன்தானா?'—இந்த வார்த்தைகள் அவன் நெஞ்சிலே பாய்ந்து சென்றன; அவன் மனச்சாட்சியை உலுக்கின. 'மனச்சாட்சியாவது மண்ணாங் கட்டியாவது' என்று எழுந்தான்.

ரிக்ஷாவிடம் பாய்ந்து போனான். மெத்தையைத் தூக்கி நகர்த்தினான். அடியிலிருந்த பெட்டியை நகர்த்தி உள்ளே எட்டிப் பார்த்தான். ஆமாம், அந்த மருந்துப் புட்டிகள் அங்கேயே இருந்தன. பெட்டியை மறுபடியும் மூடிவிட்டுச் 'சீட்'டையும் ஒழுங்காக வைத்துவிட்டு மனைவியிடம் வந்தான்.

"இதோ பாரு! ஒரு நிமிஷத்திலே வரேன்!" என்று அழுத்தமாகச் சொன்னான்; ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு நேதாஜி ரோடில் இறங்கினான்.

அந்தி மறைந்து விட்டது. அந்த நேதாஜி ரோடைத் தவிர உலகத்தின் மற்றப் பாகங்களிலெல்லாம் இருள் கவிய ஆரம்பித்து விட்டது. நேதாஜி ரோடில் எங்கு திரும்பினாலும் தேஜோமயமான விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருந்தன. கடைகளின் வாசல்களில் அங்கங்கே வைத்திருந்த 'ஷோ கேசுகளில்' அவன் கண்ட பலவிதமான ஆடைகள் எல்லாம் அவனுடைய மனைவியின் கிழிந்த புடைவைகளையும் செல்லரித்த தனது ஆடைகளையுமே அவன் நினைவுக்குக் கொண்டு வந்தன.

அவனுள்ளம் வெதும்பியது. சத்திய சீலத்துடன் இருந்ததினால் மட்டுமே அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட வாழ்க்கை வசதிகள் கிடைத்துவிட்டதா? எவ்வளவு தூரம் புரட்டுக்களை அவர்கள் செய்திருப்பார்கள்! நியாயத்துக்குப் புறம்பாக எவ்வளவு தூரம் போயிருப்பார்கள்!...... அவன் தீர்மானத்துக்கு வந்து விட்டான்.

கடைசி முறையாக அவனுடைய ரிக்ஷாவில் ஏறிய அந்தப் பெரிய மனிதர், அவன் வண்டியில் ஏறப் போவதற்கு முன்பு இரண்டு மருந்துப் புட்டிகளைக் கொடுத்து, "இதைப் பெட்டியில் வை. வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் எடுத்துக் கொள்ளலாம்" என்றார். ஆனால் வீடு சேர்ந்ததும் அவைகளை அவனிடமிருந்து கேட்டு வாங்கிக்கொள்ள மறந்து விட்டார். அவைகள் அந்தப் பெட்டியில்தான் இருந்தன.



சர்வர்:—இது அருமையான பிரேஸில் தேசத்து டீ, ஸார்!

சாப்பிடுபவர்:—அப்படியா? என்னடா, இவ்வளவு ஆறிப் போய்க் கிடக்கிறதே என்று பார்த்தேன்!

அவைகளுக்கு யாராவது இரண்டு ரூபாய் கொடுத்தால்கூடப் போதுமே! அவனுடைய குழந்தை உயிர் பிழைத்து எழுந்து விடுமே!—அந்த மருந்துகளை அவருடைய வீட்டிலேயே கொண்டு போய்க் கொடுக்கலாம். ஆனால் அவர் வெகுமதி ஏதேனும் அளிப்பார் என்பது என்ன நிச்சயம்?—ஆகவே அவன் ரிக்ஷாவை மெதுவாக இழுத்துக் கொண்டு போனான். எதிரே அவனுக்குத் தெரிந்த ஸேட் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

ஸேட் அவனைக் கண்டதும் நின்றான். மனைவியின் கெட்டியை அந்த ஸேட்டிடம் தான் நாலு ரூபாய்க்கு அவன் அடகு வைத்திருந்தான். அதனால் இந்தப் பழக்கம்.

"என்ன வேணும்பா? பணமா? மாத்து ஏதுனாச்சியும் வைச்சிருக்கையா? தரேன்" என்று ஸேட் தன் தொழில் பதவியிலேயே விரித்து விட்டது அவனுக்குச் சௌகரியமாகப் போய் விட்டது.

"இரண்டு மருந்து புட்டிகள். பத்து ரூவா பெறும் ஸேட். ஆனால் இரண்டு ரூவா கொடு, போதும். என் குழந்தைக்கு உடம்பு சரியில்லே ஸேட்! அதனாலே கஷ்டமா யிருக்குது......"


"அதைக் கொண்டா பார்க்கலாம்" என்றான் ஸேட்.


அவன் ரிக்ஷாவிடம் போனான். சீட்டை நகர்த்தினான். பெட்டியைத் திறந்தான். பக்கத்திலிருந்த கம்பத்திலிருந்து ஒளி வீசிக் கொண்டிருந்த 'மெர்க்குரி பல்பின்' பிரகாசமான நீல ஒளியில், பெட்டியிலிருந்து அவன் எடுத்த இரண்டு புட்டிகளும் ஜொலித்தன. அதே சமயம் அவனது இடது தோளை இறுகப் பற்றியது ஒரு கை.

அவன் திரும்பினான். ஸேட்டைக் காணவில்லை. ஆனால் அவனைப் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டிருந்தது ஒரு கான்ஸ்டேபிள்தான்!

புட்டிகளுடன் அவனுடைய கைகளை இறுகப் பற்றினான் கான்ஸ்டேபிள். சந்தேகமில்லை. அந்தப் புட்டிகளில் நிறைந்திருந்தது சுத்த சீமைச் சாராயம்தான்!

அவனுக்கெதிரில் தேஜோமயமாக விளக்குகள் இன்னும் ஒளி வீசிக் கொண்டுதான் இருந்தன; மனிதர்கள் நடந்து கொண்டுதான் இருந்தார்கள்; வாழ்க்கை எவ்வித மாறுபாடுமில்லாமல் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்து கொண்டிருந்தான்!


எனக்குப் புரியவில்லை
(ஆனால் அம்மா அறிவாள்!)
குழந்தை அழுததன் காரணம்—
"ஐயோ, என்னம்மா குழந்தை இப்படி அழுகிறது? இப்பொழுது தானே பாலூட்டி துணியும் மாற்றிப் போட்டேன்!"
"பெண்ணே, காரணம் நானறிவேன் - அசௌகரியத்தினால் தான் அது அழுகிறது - சீர் படுத்தும் வழி இதோ!"
5 நிமிஷத்திற்குப் பிறகு:
"அம்மா, என்ன ஆச்சரியம் இது! இப்பொழுது எவ்வளவு குஷியாக சிரித்து விளையாடுகிறான், பார்!"
"குழந்தைகளின் இளம் சருமம் எரிச்சல் கொடுக்கும் போது, அதனை அழாமல் என்ன செய்யும்? ஆனால் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் எரிச்சலை சுணம் தணித்து இதமும் சுகமும் அளிக்கிறது. குளிப்பாட்டிய பிறகு தவறாமல் அதை உபயோகிப்பது நலம்."
அதற்குப் பிறகு தாயாரின் யோசனைப் படியே நடந்து வந்தேன்.
குழந்தை இப்பொழுது படுத்துவதில்லை—
—காரணம் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்!
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் உலகிலேயே மிக மென்மையான சருமத்திற்கும் இதமும் சுகமும் அளிப்பதற்கென்று தயாரிக்கப்பட்டது. அதனால் தான் புத்திசாலிகளான தாய்மார்கள் என்றுமே தமது குழந்தைகளுக்கும், தமக்கும் கூட இப் பவுடரை உபயோகித்து வருகின்றனர்.
குழந்தைக்குச் சிறந்தது— உங்களுக்கும் சிறந்தது!
Johnson's
BABY POWDER
உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் பேபி பவுடர்!
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's
BABY POWDER
ஜான்ஸன் & ஜான்ஸன் தயாரிப்பு
ஏகபோக விநியோகஸ்தர்கள்: ஐ. ஸி. ஐ. (இந்தியா) லிமிடெட்




ஒரு 'ரோச்'
தயாரிப்பு

## பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்





பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் சத்துக்கள் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி சீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு ஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் பசையாக கரைத்து. ஒரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரசம் சேர்த்துக்கொள்ளலாம்.

**பியூரிடி பார்லி**

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.


வின்கோலா
ஒரு சிறந்த டாணிக்
விடாமின் "B" யுடன் கூடியது
SV-B
A
SPW
PRODUCT
ஸ்டாண்டர்டு பார்மஸூடிகல் வொர்க்ஸ் லிட்., ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸ்டாண்டர்டு ப்ராடக்ட்ஸ் லிட்., 79 A & B, செம்புதாஸ் தெரு, மதராஸ்.


சூலியோ டி. டி. டி. கூந்தல் தைலம்
தலையில் ஏற்படும் கிருமிகளை அறவே ஒழிக்கிறது
நறுமணத்துடன் பிசுக்கற்ற வகையில் உபயோகத்திற்கு உகந்தவாறு, கிருமிகளைக் கொல்லுமளவுக்கு டி. டி. டி. யைக் கலந்து முறைப்படி சூலியோ கூந்தல் தைலம் தயாரிக்கப்பட்டுள்ளது. சூலியோவை ஒரு முறை உபயோகித்தவுடனே பேனும் அதைச் சார்ந்த முட்டைகளும் அறவே மடிகின்றன. மற்றொருமுறை உபயோகிப்பதனால் தலையிலேற்படும் கிருமிகள் மீண்டும் அணுகாமல் பாதுகாக்கிறது. அழகிய கூந்தலுக்கு எவ்வித ஹானியும் சூலியோ விளைவிக்காது.
SULEO D.D.T. Hair Emulsion
தலையிலேற்படும் சகல கிருமிகளையும் அறவே அகற்றுகிறது
வியாபார விவரங்களுக்கு:
ஜியாப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா - மதராஸ்
SULEO
D.D.T.
Hair Emulsion



# நல்லாடை அணிந்த

# ஆண்கள் பளபளப்பான

# பாதரக்ஷைகளை அணிகிருர்கள்

நன்கு பாலிஷ் செய்யப்பட்டு, நன்கு பாதுகாக்கப்பட்ட பாதரக்ஷைகள் தான் நாகரீக தோற்றமளிக்கின்றது. உயர்ந்த மெழுகுகள் அதிக அளவில் சேர்க்கப்பட்ட கீவி பாலிஷ் பாதரக்ஷைக்கு நான்கு விதங்களில் உதவி புரிகிறது. சீக்கிரமாக பளபளப்பளிக்கிறது. தோல் மெதுக்காயும் மென்மையாக இருக்கச்செய்கிறது. ஈரம்பட்டாலும் கெடாமல் காக்கிறது. கண்ணாடிபோல் தோலை பளபளப்பாகச் செய்வதால் தூசி படிய விடுவதில்லை. கீவியால் பாலிஷ் செய்யப்பட்ட பாதரக்ஷைகள் அதிக நாள் உழைக்கும், பார்வைக்கும் மிக அழகாக இருக்கும்.

கீழ்க்கண்டவர்ணங்களில் கிடைக்கும் :- கீவி டார்க்டான், ப்ளாக், டான் மிட் டான். ப்ரௌன், நீ மஹாகனி, ட்ரான்ஸ்பேரண்ட் (நியூட்ரல்) வர்ணத்திலும், விரிசிகளுக்கான நிறத்திலும் கிடைக்கும்.

# கீவி

பாலிஷ் செய்யும்போதே

போஷாக்களிக்கிறது




விநியோகஸ்தர்கள் :

ஆர். ஏ. ருட்ஸல் & கோ., 10, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்-

Edited Printed and Publisned by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee Hign Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392

